இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசு

மாநகர மற்றும் மேற்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சு

# இற்றைவரைப்படுத்தப்பட்ட மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டம்

**ராஜகிரிய ஒபேசேகரபுரவின் அருணோதய மாவத்தையில் வசிக்கும் 38 குடும்பங்களை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அடுக்குமாடி கட்டிடங்களுக்கு குடியேற்றல்**

**ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்காக தயாரிக்கப்பட்டது**

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**

**ஐப்பசி 2019**

***இற்றைவரைப்படுத்தப்பட்ட* மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டம் தொடர்பான குறிப்பு*:***

ஒபேசேகரபுர அருணோதய மாவத்தையில் இருந்து 38 குடும்பங்களை இடமாற்றுவதற்கான மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டு 2018 ஒக்ரோபர் மாதம் (அப் பதிப்பு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.) வெளியிடப்பட்டது. இற்றைவரைப்படுத்தப்பட்ட மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம், கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதில் 2019 ஆண்டில் திரட்டப்பட்ட மேலதிக சமூக - பொருளாதார தகவல்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தல் மற்றும் 38 குடும்பங்கள் ஏற்கெனவே குடியேற்றப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் உரித்துரிமையுடன் கூடிய தொடர்மாடி வீடமைப்புத் தொகுதிகளின் தற்போதைய நிலை ஆகியன பற்றிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. செயற்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டு அலகுகளின் பாதிப்புக்களை அடையாளங் கண்டு, அத் தாக்கங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

2019 ஒக்ரோபர் மாத இறுதி வரையிலான தரவுகள் இற்றைவரைப்படுத்தப்பட்ட மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளது. காணி கையகப்படுத்தல் செயன்முறைகள் மாற்றமடைவதனாலும், அந்நிலை அடிக்கடி குறுகிய காலத்தில் மாற்றத்திற்குட்படுவதினாலும் மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டம் தொடர்பான மாற்றங்கள், மீள்குடியேற்ற செயற்பாட்டுச் சட்டகத்தில் அடங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சுற்றாடல் மற்றும் சமூக சட்டத்திற்கேற்ப செயற்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மேம்படுத்தல் அல்லது குறைந்தபட்சம் மறுசீரமைத்தல் என்பன இம் மேலதிக நடவடிக்கைகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன. உத்தேச முக்கியமான மாற்றங்கள் மற்றும் அதன் திருத்தங்கள் தொடர்பான நியாயப்பாடு பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| மீள்குடியேற்ற ஆரம்ப செயற்பாட்டுத்திட்டம் (ஒக்ரோபர் 2018) | இற்றைவரைப்படுத்தப்பட்ட மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டம் (நவம்பர் 2019) | இற்றைவரைப்படுத்தப்படுத்தலுக்கு காரணியாயமைந்த நியாயப்பாடு |
|---|---|---|
| உரிமைத்தகுதி வார்ப்படம் மற்றும் மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தின் வரவுசெலவுத் திட்டம், மேலதிக சமூக - பொருளாதார தரவுகளுக்கு அமைய இற்றைவரைப்படுத்தப்பட்டது | | |
| மதியவேளை பாது காப்பு நிலையம், மகளிருக்கான அறைகள் மற்றும் ஆரம்ப பாடசாலைகளை பெற்றுக் கொடுத்தல் | உத்சே செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சனசமூக நிலையங்களைப் பயன்படுத்த முடியும். | சியபத் செவனயில் ஏற்கெனவே நிர்மாணிக்கப் பட்டுள்ள மாடி வீடுகளில் மாற்றங்கள் செய்வது நடைமுறைச் சாத்தியமன்று. |
| மேலதிக வீட்டு அலகொன்றின் கிரயம் ரூபா 7 மில்லியன் ஆகும். | வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போதுள்ள கொடுப்பனவு செயன்முறைக்கமைய மேலதிக மாடி வீட்டு அலகொன்றுக்கான கிரயம் தீர்மானிக்கப்படும். | விளக்கமளிப்புக்கள் RPF இற்கமைவானவையாகும். |
| மீள்குடியேற்றச் செயற் திட்டத்தினால் பாதிக் | கட்டணம் கைவிடப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டு |

| | | |
|---|---|---|
| கப்பட்ட வீட்டு அலகுகள், கூட்டு ஆதன முகாமைத்துவ குழுவுக்கு அதிகமான பராமரிப்புக் கட்டணம் செலுத்துதல் | | அலகுகளினால் செலுத்தப்பட வேண்டிய இயலளவுக்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்படும். |

திருத்தங்களில் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களை சுட்டிக்காட்டல், மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தில் இற்றைவரைப்படுத்தப்பட்ட பதிப்பு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினதும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் இணையத்தளங்களில் பிரசுரிக்கப்பட்ட பதிப்புக்குப் பதிலாக வெளியிடப்பட்டுள்ளதுடன், இதன் பிற்பாடு அது தற்போதைய திட்டமாக கொள்ளப்படும். செயற்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்ப அலகுகளுக்கு உத்தேச மாற்றங்களை தகுந்த முறையில் அறிவிப்பதற்கும் இற்றைவரைப்படுத்தப்பட்ட பதிப்பின் வன்பிரதிகள் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பெற்றுக் கொள்ள விரும்பும் தரப்பினருக்கு பெறக்கூடியவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள குறைதீர்க்கும் பொறிமுறை அவ்வாறே காணப்படுவதுடன், மீளக்குடியமர்த்தும் புதிய செயற்பாட்டுத் திட்டம் சம்பந்தமான முறைப்பாடுகள் மற்றும் குறைபாடுகளை சமர்ப்பிப்பதற்காகவும் அப்பொறிமுறையைப் பயன்படுத்த முடியும்.

# உள்ளடக்கம்


நிறைவேற்றுச்சுருக்கம்......6

அத்தியாயம் 1......11

அறிமுகம்......11

1.1. அமைவிடம்......12

1.2 மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்திற்கான தேவைப்பாடு......13

1.3. நோக்கங்கள்......13

1.3 பின்பற்றப்பட்ட செயல்முறை......14

அத்தியாயம் 2......16

சமூக பொருளாதார தகவற்திரட்டு......16

அத்தியாயம் 3......31

ஆலோசனை மற்றும் தகவல் பகிரல்......31

3.1: பங்குதாரர் சந்திப்பு- அருணோதய மாவத்தை- ஒபேசேகரபுர......31

3.2: பாதிக்கப்பட்ட சில மக்களின் நோக்கு......34

3.3: மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தை வெளிப்படுத்தல்......36

அத்தியாயம் 4......37

சட்டம் மற்றும் கொள்கை ஏற்பாடுகள்......37

4.1: காணி சுவீகரிப்பு சட்டம்......37

4.2: அரச சொத்துக்களை மீட்டெடுக்கும் சட்டம்......37

4.3: நஸ்ட ஈட்டு கொள்கை......37

4.4: தேசிய கட்டாய மீள்குடியேற்ற கொள்கை......37

4.5: தகுதி பெறுவதற்கான கால எல்லை......37

அத்தியாயம் 5......38

நுழைவுத்தகுதி, உரிமைத்தகுதி மற்றும் உதவி......38

5.1: அடுக்குமாடி குடியிருப்பு தொகுதிகளில் உள்ள அடிப்படை வசதிகள்......38

5.2: பல குடும்பங்களை கொண்ட வீடுகளுக்கு மேலதிக வீடுகளை ஒதுக்குதல்......42

5.3: மீள்குடியேற்றத்திற்கு முன்னரான உதவிகள்......43

5.4 மீள்குடியேற்றத்தின் பின்னரான உதவிகள்......44

5.5. சுதேச மக்கள்......45

5.6: வீடுகளை பெற்றுக்கொள்பவர்களின் கடப்பாடு......45

அத்தியாயம் 6......49

பால்நிலை செயற்பாட்டுத்திட்டம்......49

6.1: பால்நிலை தொடர்பான தகவல் திரட்டு......49

6.2: பால்நிலை பாதிப்புக்கள்......49

6.3: சட்டரீதியான பாதுகாப்பு......50

6.4: செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் பங்கு......47

6.5 விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள்......52

அத்தியாயம் 7......53

குறைதீர்க்கும் பொறிமுறை......53

அத்தியாயம் 8......60

வருமான மீளமைப்பு உபாயங்கள்......60

8.1 எதிர்பார்க்கப்படும் இழப்புக்கள்......60

8.2 தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய குடும்பங்கள்......60

8.3 வருமான மீளமைப்பு உபாயங்கள்......56

8.4: வருமான மீளமைப்பு நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கமைப்பு......61

8.5 வருமான மீளமைப்பு நிகழ்ச்சி திட்டத்தில் தொடர்புடைய நிறுவனங்கள் ......... 61
அத்தியாயம் 9 ........ 58
நிறுவன ஒழுங்கமைப்பு சட்டகம் ........ 58
9.1: மீள்குடியேற்ற செயற்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிறுவன ஒழுங்கமைப்பு ........ 58
செயற்பாடுகள் ........ 58
பொறுப்புக்கள் ........ 58
அத்தியாயம் 10 ........ 61
நடைமுறைப்படுத்தும் கால அட்டவணை ........ 61
அத்தியாயம் 11 ........ 65
மீள்குடியேற்றத்திற்கான வரவு செலவுத்திட்டம் ........ 65
அத்தியாயம் 12 ........ 66
கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல் ........ 66
12.1 உள்ளக கண்காணிப்பு ........ 66
12.2: உள்ளக கண்காணிப்பிற்கான கருவிகள் ........ 67
12.3: வெளியக கண்காணிப்பு ........ 67
12.4: வெளியக கண்காணிப்பின் நோக்கங்கள் ........ 67
12.5: கண்காணிப்பு சுட்டிகள் ........ 68
12.6 மதிப்பீட்டுத்திட்டம் ........ 70
12.7 அறிக்கையிடல் தேவைப்பாடுகள் ........ 70
12.8 அறிக்கையிடல் பொறுப்புக்கள் ........ 71
12.9 அறிக்கையின் உள்ளடக்கம் ........ 71
13. இற்றைவரைப்படுத்தப்பட்ட நட்டஈட்டு வார்ப்படம் ........ 71

# அட்டவணை

உரு 2 : மாற்றிடத்துக்கு கொண்டுசெல்லப்படும் குடும்பங்கள் வசிக்கும் சூழல் ........ Error! Bookmark not defined.
உரு3 : 2018 10.11 ஆந் திகதி நடாத்தப்பட்ட பங்காளர்களது கூட்டம்

# உரு

உரு 1: ஒபேசேகரபுர, அருணோதய மாவத்தை வரைபடம் மற்றும் உத்தேச இடம்Error! Bookmark not defin
உரு 2: மாற்றிடத்துக்கு கொண்டுசெல்லப்படும் குடும்பங்கள் வசிக்கும் சூழல்Error! Bookmark not defined.
உரு 3: 2018 10.11 ஆந் திகதி நடாத்தப்பட்ட பங்காளர்களது கூட்டம் Error! Bookmark not defined.

# நிறைவேற்றுச் சுருக்கம்

**அறிமுகம்**

கொழும்பு இலங்கையின் பிரதான வர்த்தக நகராகும். அத்துடன் இலங்கையின் தலைநகராகவும் காணப்படுகிறது. புள்ளிவிபரங்களின் அடிப்படையில் நகரில் சுமார் 50,000 குடும்பங்கள் சேரிப்புறங்களில் அரசுக்கு சொந்தமான காணிகளில் வசிக்கின்றனர். கொழும்பு சுமார் 800,000 மக்களுக்கான வாழிடமாக விளங்குகின்ற அதேவேளை சுமார் ஒரு மில்லியன் மக்கள் தினமும் வெவ்வேறு நோக்கங்களுக்காக கொழும்பிற்கு வந்து செல்கின்றனர். இவ்வாறு சேரிப்புறங்களில் வாழும் சுமார் 5.500 குடும்பங்களை நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டத்தின் கீழ் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவியுடன் அடுக்குமாடி கட்டிடங்களில் குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாறு குடும்பங்களின் மீள்குடியேற்றத்தின் பின்னர் வெற்றிடமாகும் காணிகள் வேறு உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்தி மற்றும் கலப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும். இச்செயற்த்திட்டத்திற்கான செலவு 280 மில்லியன் டொலராக மதிப்பிடப்பட்டுள்ள அதேவேளை அதில் 200 மில்லியன் டொலர்கள் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

ஒபேசேகரபுரவில் அருணோதய மாவத்தையில் 38 குடும்பங்கள் வாழும் காணி அடுக்குமடி வீடுகளின் நிர்மாணத்திற்கு அவசியமாகிறது.

**அமைவிடம்**

ஒபேசேகரபுர கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாநகரசபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ளது. அத்துடன் இப்பகுதி கோட்டே தேர்தல் தொகுதியின் கீழ் வருகிறது. இக்குடும்பங்களில் பெரும்பாலானோர் சிங்கள இனத்தவராக இருக்கின்ற அதேவேளை குறித்த 38 குடும்பங்களில் 21 பேர் ஒபேசேகரபுரவிற்கு வெளியே பிறந்து பின்னர் இப்பகுதிக்கு குடியேறியவர்களாவர்.

மீள்குடியேற்ற செயற்பாட்டு திட்ட நோக்கங்கள்

தேசிய கட்டாய மீள்குடியேற்ற கொள்கையின் பிரகாரம் மீள்குடியேற்றம் காரணமாக 20 குடும்பங்களுக்கு மேல் பாதிக்கப்படுமாயின் மீள்குடியேற்ற செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். மேலும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நலக்காப்பு கொள்கையின் பிரகாரமும் மீள்குடியேற்றம் காரணமாக 20 குடும்பங்களுக்கு மேல் பாதிக்கப்படுமாயின் மீள்குடியேற்ற செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். மீள்குடியேற்ற செயற்ப்பாட்டு திட்டம் பாதிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் தொடர்ச்சியான வாழ்க்கை தர மேம்பாட்டினை அறிக்கையிடும் ஒரு ஆவணமாக காணப்படுகிறது.

**பின்பற்றப்பட்ட செயல்முறை**

செயற்த்திட்டம் தொடர்பாக விபரிக்கும் பொருட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்குடியேற்ற நிபுணர் மற்றும் செயற்த்திட்ட அலுவலகர்களினால் ஆரம்ப

கூட்டமொன்று நடாத்தப்பட்டது. இதன் காரணமாக அவர்களுக்கு கிடைக்க கூடிய நன்மைகள் தொடர்பிலும் எடுத்துரைக்கப்பட்டது. சமூக-பொருளாதார மற்றும் குடித்தொகை தொடர்பான தரவுகள் கேள்விப்பத்திரமொன்று மூலமாக சேகரிக்கப்பட்டது.

**சமூக பொருளாதார தகவல் திரட்டு**

மொத்தமான 38 குடும்பங்களை சார்ந்த 140 பேரில் 67 பேர் ஆண்கள் மற்றும் 73 பேர் பெண்கள். ஆண்கள் தலைமையிலான குடும்பங்கள் 18 ஆகவும் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் 20 ஆகவும் காணப்படுகின்றன. மேலும் மொத்த சனத்தொகையில் 114 சிங்கள மக்களும் 18 தமிழ் மக்களும் 8 முஸ்லீம் மக்களும் காணப்படுகின்றனர். மேலும் மொத்த சனத்தொகையில் 103 பௌத்தர்களும் 8 இஸ்லாமியர்களும் 11 இந்துக்களும் 16 கிறிஸ்தவர்களும் காணப்படுகின்றனர். இருவர் பதிலளிக்க மறுத்துவிட்டனர்.

ஏழு 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளும் எட்டு 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஸ்ட பிரஜைகளும் குறித்த 38 குடும்பங்களில் வாழ்கின்றனர். 76 திருமணமான நபர்களும் 21 திருமணமாகாத (15%) நபர்களும் காணப்படுகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களின் கல்விமட்டம் நடுத்தரம் ஆகும். வயதுக்கு வந்தோரில் 4 பேர் பாடசாலைக்கு செல்லவில்லை (2%).

21 ஆண்கள் மற்றும் 10 பெண்களின் சராசரி வருமானம் ரூபா. 25,001-50,000, சராசரி வருமானம் ரூபா. 37,500. ஊழியப்படையில் பங்கேற்பு வீதம் 65%. இது தேசிய ஊழியப்படையின் பங்கேற்பு வீதமான 53.8% ஐ விட அதிகமாகும் (தேசிய சனத்தொகை கணிப்பீடு 2012).

தாக்கவிளைவிற்குட்படக்கூடிய குடும்பங்களின் எண்ணிக்கை 4. பாதிக்கப்பட்ட மக்கள் செயற்த்திட்டம் தொடர்பாக தமது ஆதரவை வெளியிட்டமையால் சமூக அழுத்தங்கள் இன்றி செயற்த்திட்டத்தை நடைமுறைப்படுத்த கூடியதாக இருக்கும்.

**செயற்திட்ட பாதிப்புக்கள்**

குறைவாகும். 300-500 இடையேயான சதுர அடியை தளப்பரப்பாக கொண்ட வீடுகள் 6 ஆக காணப்படுகின்ற அதேவேளை ஒரு வீடு 600 சதுர அடிக்கும் அதிகமான தளப்பரப்பை கொண்டுள்ளது. வீடுகளின் சராசரி தளப்பரப்பு 233 சதுர அடியாகும்.

**சட்ட ஏற்பாடுகள் மற்றும் கொள்கை**

காணி சுவீகரிப்பானது 1950ஆம் ஆண்டின் காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். அரச காணிகளை கைவசம் வைத்திருத்தல் 1979ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கைவசமுள்ள அரச சொத்துக்களை மீட்டல் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

**தேசிய கட்டாய மீள்குடியேற்ற கொள்கை**

தேசிய கட்டாய மீள்குடியேற்ற கொள்கை 2001ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. இக்கொள்கை அபிவிருத்தி செயற்திட்டங்கள் காரணமாக பாதிக்கப்படும் மக்களுக்கு நஸ்ட ஈடு வழங்கும் நோக்கில் 2001 ஆம் ஆண்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

**உரிமைத்தகுதி**

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 550 சதுர அடி தளப்பரப்பை கொண்டுள்ள அடுக்குமாடி வீடொன்றை பெற உரிமைத்தகுதியை கொண்டுள்ளன. அவர்கள் மாதாந்த குத்தகை கட்டணம், கூட்டு ஆதன முகாமைத்துவ நிதியம் மற்றும் பொது வசதிகளின் பராமரிப்பிற்கான மாதாந்த கட்டணத்தை செலுத்த வெண்டும். மீள்குடியேற்றப்படுவோர் ரூபா. 5000 போக்குவரத்து கொடுப்பனவு, ரூபா 50,000 தொகையை வருமான இழப்பு மற்றும் தற்காலிக இருப்பிடங்களுக்கென உதவி கோரியவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 15,000 வாடகை கொடுப்பனவு, அஸ்பெஸ்டொஸ் கூரைத் தகடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துண்டு.

**உரிமைத்தகுதி வார்ப்படம்**

உரிமைத்தகுதி வார்ப்படத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரித்துடைய அனைத்து வகையான நஸ்ட ஈடுகளும் உள்ளடக்கப்படும். இந்த வார்ப்படம் காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் 2013ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட ஒழுங்குவிதிக்கு அமைவாக தயாரிக்கப்படும்.

**ஆலோசனை, பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் குறைதீர்க்கும் பொறிமுறை**

ஆலோசனை, தகவல் பகிரல் மற்றும் வெளிப்படுத்துகைக்கான தேவைப்பாடுகள் ஆகியன பாதிக்கப்பட்ட மக்களின் பங்கேற்றலுடன் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் சில வீடுகளுடன் அடுக்குமாடி வீடுகளில் வசிக்கும் அவர்களது புதிய அனுபவம் தொடர்பில் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது.

**இறுதி திகதி**

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் 13/10/2018 அன்று ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப கட்ட மதிப்பாய்விற்கு முன்னர் குறித்த காணியில் வசித்தோர் அனைவரும் நஸ்ட ஈட்டை பெற தகுதியானவர்களாவர்.

குறைதீர்க்கும் பொறிமுறை

சிறந்த நடைமுறைகளுக்கமைவாக செயற்த்திட்டத்தின் கீழ் சுயாதீனமான குறைதீர்க்கும் பொறிமுறை மீள்குடியேற்ற திட்டமிடல் சட்டகத்திற்கு அமைவாக உருவாக்கப்படும். குறைதீர்க்கும் பொறிமுறை பாதிக்கப்பட்ட மக்கள் தமது முறைப்பாடுகள் மற்றும் குறைகளை வெற்றிகரமாக தீர்த்துக்கொள்ள உதவும். குறைதீர்க்கும் பொறிமுறையில் நீண்ட நிர்வாக மற்றும் சட்ட நடைமுறைகளை தவிர்க்க புதிய நடைமுறைகள் தயாரிக்கப்படும்.

**மீள்குடியேற்றம்**

தற்போது அரச காணியில் வசிக்கும் 38 குடும்பங்களை மீள்குடியமர்த்த வேண்டியுள்ளது. அவர்கள் 550 சதுர அடி தளப்பரப்பை கொண்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அமைக்கப்படும் வீடுகளில் இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் மீள்குடியமர்த்தப்படுவார்கள். (i) கூட்டு ஆதன பராமரிப்பிற்கான பங்களிப்பிற்கான ஆரம்பகட்டணம் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் தீர்மானிக்கப்படும் (தற்போது இத்தொகை ரூபா. 50,000). கட்டணம் நான்கு தவணைகளில் செலுத்தப்படலாம்; (ii) மின் தூக்கியின் செயற்பாடு, பொது இடங்களில் ஒளிரூட்டல் மற்றும் சுத்தப்படுத்தல் சேவைகள் உள்ளிட்ட சேவைகளுக்கான மாதாந்த கட்டண கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும்.

எனினும் இவற்றிற்கான கட்டணம் சந்தை நிலைமைகளுக்கேற்றவாறு மாற்றமடையும். (iii) குத்தகை கட்டணமாக 400 மாதங்களுக்கு மாதாந்தம் ரூபா. 3,000 படி செலுத்த வேண்டும். பாதிக்கப்படும் மக்களுக்கு மீள்குடியேற்றத்திற்கு முன்னரான மற்றும் பின்னரான உதவிகள் வழங்கப்படும். மாதாந்த நீர், மின்சார மற்றும் தொலைபேசி கட்டணங்களை செலுத்துவது வீட்டு உரிமையாளர்களின் பொறுப்பாகும்.
குறித்த பகுதிகளில் வசிக்கும் சுதேச மக்களுடன் இணைந்து செயற்படுவதற்கான நடவடிக்கைகளை செயற்த்திட்டம் மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் நஸ்ட ஈட்டைபெறவும் தொடர்மாடி குடியிருப்புக்களில் குடியிருக்க விரும்பாவிட்டால் தனியான வீடுகளை தாமாகவே தேடிக்கொள்ளவும் முடியும்.

**வருமான மறுசீரமைப்பு உபாயங்கள்**

இச் செயற்திட்டம் காரணமாக பாதிக்கப்பட்ட வியாபார நிலையங்கள் 7 ஆகும். மதிப்பிடப்பட்ட வருமானமிழப்பு காரணமாக அவர்களுக்கு நிதி கொடுப்பனவு மற்றும் தாக்கவிளைவிற்கு உட்படக்கூடிய குடும்பங்களுக்கு வருமான மீளமைப்புத் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்தால் வழங்கப்படும் நலன்புரி கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக வழங்கப்படும்.

**மீள்குடியேற்றத்திற்கான நிறுவன கட்டமைப்பு**

செயற்த்திட்டத்தின் அனைத்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் மாநகர மற்றும் மேற்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சை சார்ந்தது. மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டத்தினை மேலதிக செயற்த்திட்ட பணிப்பாளர் (திட்டமிடல்) அவரது அலுவலகர்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னரான வாழ்வாதாரத்தை மேம்படுத்த நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம்/நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன உதவிகளை வழங்கும்.

**மீள்குடியேற்றத்திற்கான பாதீடு மற்றும் நிதியீட்டம்**

மீள்குடியேற்றத்திற்கான வரவு செலவு திட்டத்தை தயாரிக்கும் போது அடுக்குமாடி கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான செலவு உள்ளடக்கப்படவில்லை. ஏனெனில் இச்செயற்த்திட்டத்தின் பின்னர் விடுவிக்கப்படும் காணிகளினால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பாரிய வருமானம் கிடைக்கும் என கருதி குறித்த செலவு முதலீடாக கருதப்பட்டுள்ளது. ஒபேசேகரப்ர மக்களுக்கான மீள்குடியேற்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த ரூபா. 13,225,200 அல்லது 73,640 அமெரிக்க டொலர் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. (இதில் அடுக்குமாடி கட்டிடத்திற்கான செலவு உள்ளடக்கப்படவில்லை).

**நடைமுறைப்படுத்துவதற்கான கால அட்டவணை**

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் 2018ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் 2019ஆம் ஆண்டு வைகாசி-ஆனி காலப்பகுதிகளில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலம் 2018ஆம் ஆண்டு மார்கழி மாத முடிவிற்குள் கையேற்கப்படும். அட்டவணை 10.1இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைப்படுத்துவதற்கான கால அட்டவணையை விபரங்களுக்கு பார்க்கவும்.

**கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**

உள்ளக ஊழியர்களால் உள்ளக கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவதுடன் வெளியக கண்காணிப்பு சுயாதீன ஆலோசகர்களால் மேற்கொள்ளப்படும். சிறந்த கண்காணிப்பின் மூலம் நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதி செய்து கொள்ள முடியும். இதன் மூலம் செயற்த்திட்ட முகாமைத்துவ குழுவிற்கு ஏற்படும் பிரச்சனைகளை இலகுவில் இனம்கண்டு அவற்றை தீர்த்துக்கொள்ளவும் முடியும்.

மதிப்பீடானது பரந்த விடயப்பரப்பை கொண்டுள்ளது. இதனுள் மீள்குடியேற்ற திட்டத்தின் வினைதிறன், விளைதிறன், பாதிப்பு மற்றும் நிலைத்து நிற்கும் தன்மை மற்றும் எதிர்கால மீள்குடியேற்ற திட்டங்களுக்கு உதவக்கூடிய கற்றுக்கொண்ட பாடங்களும் உள்ளடங்கும்.

# அத்தியாயம் 1
# அறிமுகம்

கொழும்பு மற்றும் அதன் சுற்றுச்சூழலில் சேரிப்புறங்களில் வசிக்கும் மக்களை அரசிற்கு சொந்தமான அடுக்குமாடி கட்டிடங்களில் குடியேற்றுவது அரசாங்கத்தின்

அண்மைக்கால முக்கிய நிகழ்ச்சி திட்டங்களில் ஒன்றாக காணப்படுகிறது. கொழும்ப் நகரில் மாத்திரம் சுமார் 50,000 குடும்பங்கள் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளில் சேரிகளில் குறைந்த வசதிகளுடன் வசிக்கின்றனர். எனவே நகர அபிவிருத்தி அதிகாரசபை குறித்த காணிகளில் சிலவற்றில் அடுக்குமாடி வீடுகளை அமைத்து அவற்றில் குறித்த சேரிப்புறங்களில் வாழும் மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இவ்வீடுகளில் வசிக்கும் குறித்த குடும்பங்களுக்கு மின்சார மற்றும் நீர் வசதிகள் உள்ளிட்ட முன்னரைவிட மேம்பாடான வசதிகள் வழங்கப்படும். அத்துடன் வாழ்விட சூழலும் முன்னரைவிட மேம்பட்டதாகும். மேலும் குறித்த மக்களால் விடுவிக்கப்படும் காணிகளை உயர் பலன் தரக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த கூடியதாக இருக்கும்.

கொழும்பு நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டத்தின் இரண்டாம் கட்டம் மாநகர மற்றும் மேற்கு பிராந்திய அமைச்சின் கீழியங்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ராஜகிரிய ஒபேசேகரபுரவில் அமைந்துள்ள அருணோதய மாவத்தையில் 38 குடும்பங்கள் வசித்து வந்த காணி அடுக்குமாடி குடியிருப்பின் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்படும்.

நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கென 280 மில்லியன் டொலர்கள் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆசிய உட்கட்டமைபு முதலீட்டு வங்கி குறித்த வீடுகளை நிர்மாணிப்பதற்கென 200 மில்லியன் டொலர்களை கடனாக வழங்க இணங்கியுள்ளது. மீதியான 80 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பாக அரசினால் வழங்கப்படும்.

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் மூன்று செயற்த்திட்ட கூறுகளுக்கு நிதி வழங்கப்படும்.

**செயற்த்திட்ட கூறு 1:** (அமெரிக்க டொலர் 220 மில்லியன்) இச்செயற்த்திட்ட கூறின் கீழ் சேரிப்புறங்களில் வாழும் 5,500 குடும்பங்களை மீளக்குடியமர்த்த நிதியீட்டம் வழங்கப்படும். ஒபேசேகரபுர, அருணோதயா மாவத்தையில் உள்ள காணியில் அமைந்துள்ள காணியில் வசிக்கும் 38 குடும்பங்களை இச்ச்செயற்த்திட்ட கூற்றின் கீழ் அடுக்குமாடி வீட்டுத்தொகுதியினை அமைப்பதற்காக மீளக்குடியேற்ற வேண்டியுள்ளது.

**செயற்த்திட்ட கூறு 2:** (அமெரிக்க டொலர் 50 மில்லியன்) மக்களால் விடுவிக்கப்பட்ட காணிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யவென பயன்படுத்தப்படும்.

**செயற்த்திட்ட கூறு 2:** (அமெரிக்க டொலர் 10 மில்லியன்) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் இயலுமை வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும். இந்த இயலுமை வளர்ச்சியின் கீழ் அதன் நிலைத்து நிற்கும் தன்மை, அடுக்குமாடி வீடுகளின் பராமரிப்பு, சுற்றாடல் பிரச்சனைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடமைப்பு தொடர்பில் உள்ள தற்போதைய கொள்கைகளை மீளாய்வு செய்து மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்குவது ஆகியன உள்ளடங்கும்.

ஒபேசேகரபுரவில் இருந்து மீள்குடியேற்றப்படவுள்ள 38 குடும்பங்களும் தெமட்டகொட சியபத்செவன பகுதியில் மீள்குடியேற்றப்படவுள்ளனர். இந்த இடம் அவர்கள் தற்போது வசிக்கும் இடத்தில் இருந்து 3 கிலோமீட்டர் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ளது.


## 1.1. அமைவிடம்

ஒபேசேகரபுர ஸ்ரீ ஜெயவர்தனபுர-கோட்டே மாநகரசபை எல்லைக்குள் அமைந்த தாழ்நில பகுதியாகும். பாரிய இடங்கள் அரசாங்கத்திற்கு உரித்தானவையாக காணப்படுகின்ற அதேவேளை அனேக வெற்றுக்காணிகளில் சேரிகள் செறிந்து காணப்படுகின்றன. ஒபேசேகரபுரவில் வசிக்கும் மக்களுக்கு சுகாதார, கல்வி மற்றும் வர்த்தக சேவைகளை இலகுவில் பெற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது.

மீளக்குடியமர்த்தப்படவுள்ள 38 குடும்பங்கள் தாழ்நிலபகுதிகளில் வசிப்பதனால் கடுமையான மழையின் போது வெள்ளத்தினால் அவர்களது வீடுகள் பாதிக்கப்படுகின்றன. ஒபேசேகரபுரவில் வசிக்கும் மக்கள் பல்வேறு இடங்களிலிருந்து வந்தவர்கள் அத்துடன் அவர்கள் மத்தியில் பாரிய வருமான ஏற்றத்தாழ்வும் காணப்படுகிறது. எனினும் 85% ஆன குடும்பங்கள் மாதாந்தம் ரூபா. 50,000 இற்கு குறைவான வருமானத்தை பெறுகின்றனர். தற்போதைய நாணய மாற்று விகிதமான 1 டொலர்= ரூபா. 180 படி மாதாந்த வருமானம் டொலர் 278 ஆகவும் வருடாந்த வருமானம் 3,333 ஆகவும் காணப்படுகிறது. இது 2017ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின் படியான தனி நபர் வருமானமான 3,842 டொலர்களை விட குறைவாகும்.

சனத்தொகை கணிப்பீட்டின் படி சிங்கள மக்களே பிரதானமாக வசிக்கின்றனர். ஒபேசேகரபுரவில் வசிக்கும் 38 குடும்பங்களில் 21 குடும்பங்கள் நாட்டின் வேறு பகுதிகளில் பிறந்து பின்னர் இப்பகுதியில் குடியேறியவர்களாவர்.

**உரு1 :அருணோதய மாவத்தையின் வரைபடம்- ஒபேசேகரபுர மற்றும் முன்மொழியப்பட்ட மீள்குடியேற்ற இடம்**



### 1.2 மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டத்திற்கான தேவைப்பாடு

மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டம் மீள்குடியேற்ற செயல்முறையை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டியாக விளங்குகிறது. தேசிய கட்டாய மீள்குடியேற்ற கொள்கையின் பிரகாரம் 20 குடும்பங்களுக்கும் அதிகமான குடும்பங்களுடன் தொடர்புடைய மீள்குடியேற்ற திட்டங்களுக்கென மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சமூக நலக்காப்பு தேவைப்பாடுகளின் பிரகாரம் 200இற்கும் அதிகமானோருடன் தொடர்புடைய மீள்குடியேற்ற திட்டங்களுக்கு மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எனவே தேசிய கட்டாய மீள்குடியேற்ற கொள்கை மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சமூக நலக்காப்பு தேவைப்பாடுகளுக்கமைய இந்த மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.3. நோக்கங்கள்

மீள்குடியேற்ற திட்டத்தின் பிரதான நோக்கம் பாதிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சனைகளை இனம்கண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் அவர்களது வாழ்வு மேம்படுவது அல்லது மீள்குடியேற்றத்திற்கு முன்னரான வாழ்க்கை நிலையையாவது பெற்றுகொள்வதை உறுதி செய்வதாகும். இதுவே ஆகக்குறைந்த தேவைப்பாடாக காணப்படுகின்ற போதும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை தரத்தை முன்னரைவிட மேம்படுத்துவதே செயற்த்திட்டத்தின் நோக்காகும்.

இந்த பிரதான நோக்கத்தை அடைந்து கொள்ள கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்;

- இயன்றவரை கட்டாய மீள்குடியேற்றத்தை தவிர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மீள்குடியேற்றம் தவிர்க்க முடியாதது எனில் மீள்குடியேற்றத்தை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இச்செயற்த்திட்டத்தில் சேரிப்புறங்களில் வாழும் தகுதிபெற்ற குடும்பங்களை குடியமர்த்தவென அமைக்கப்படும் அடுக்குமாடி கட்டிடங்களை நிர்மாணிக்க காணியை பெற்றுக்கொள்வதற்காக வீடுகளை அகற்ற வேண்டியுள்ளது. பாதிக்கப்படும் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவார்களேயானால் அவர்களுக்குரிய இழப்புக்களை ஈடுசெய்ய நிதியுதவிகள் வழங்கப்படும்.
- நஸ்ட ஈடு மற்றும் உரிமைத்தகுதி தொடர்பான தகவலை பகிர்ந்து கொள்ளல்
- செயற்த்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம், செயற்த்திட்டத்தின் அவசியம், நிதி மூலங்கள், மீள் குடியேற்ற உதவிகள் மற்றும் சுதேச

சமூகத்தினுடனான பிணைப்பு ஆகியன தொடர்பில் தகவல்களை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல்

- பாதிக்கப்பட்ட மக்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் மற்றும் மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டத்தை தயாரிக்கும் போதும் நடைமுறைப்படுத்தும் போது அவர்களுடன் கலந்துரையாடுவதை உறுதி செய்தல்
- பௌதீக, பொருளாதார மற்றும் சமூக பாதிப்புக்கள் உள்ளிட்ட இனம்காணப்பட்ட பாதிப்புக்கள் மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதை உறுதி செய்தல்
- குறைதீர்க்கும் பொறிமுறையை தயாரித்தல்
- மீள்குடியேற்றத்துடன் சார்ந்த செலவுகளை உள்ளடக்கியதான விரிவான பாதீட்டை தயாரித்தல்
- பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கு உரிமைத்தகுதி வார்ப்படத்தை வெளிப்படுத்தல்
- செயற்த்திட்டம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்
- கடுமையாக பாதிக்கப்பட்ட அல்லது தாக்கவிளைவிற்குட்படக்கூடிய மக்களை இனம்கண்டு அவர்களுக்கு உதவுவதற்கென நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல்
- பாதிக்கப்பட்ட மக்களுக்கான அபிவிருத்திக்கான மார்க்கமாக இச்செயற்த்திட்டம் கருதப்பட வேண்டும்.

### 1.3 பின்பற்றப்பட்ட செயல்முறை

2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ஆம் திகதி செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக பிரிவின் உறுப்பினர்களுடன் செயற்த்திட்ட ஆலோசகர் குழுவினரும் செயற்த்திட்ட அமைவிட பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டனர். இவ்விஜயத்தின் போது புவியியல் தன்மைகள், சனத்தொகை, சமூக பொருளாதார மற்றும் சுற்றாடல் நிலைமைகள் தொடர்பான விபரங்களை தகவல் சேகரிப்பு மற்றும் பங்குதாரார் கூட்டங்களுக்கு முன்னராக சேகரித்து கொண்டனர். நகர புத்துயிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக பிரிவை சேர்ந்த அலுவலகர்களுக்கு தகவல் சேகரிப்பு முறைமைகள் தொடர்பில் பயிற்சி வழங்கப்பட்டது.

11 ஐப்பசி 2018 அன்று காலை 10 மணிக்கு ஒபேசேகரபுரவில் இச்செயற்த்திட்டத்தின் நோக்கம் மற்றும் மக்களுக்கு மீள்குடியேற்றத்திற்கு முன்னரும் பின்னரும் கிடைக்க கூடிய வசதிகள், மீள்குடியேற்றத்திற்கென முன்மொழியப்பட்டுள்ள இடம் ஆகிய விடயங்கள் உள்ளடங்கலான விடயங்களை பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடுவதற்காக கலந்துரையாடல் இடம்பெற்றது. மேலும் தற்போதைய இடத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள தொடர்மாடி கட்டிடத்தில் குடியேறவிரும்பும் மக்கள் தற்காலிக மீள்குடியேற்றத்தை கோரலாம் எனவும் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவால் தெரிவிக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் குறித்த மக்களுக்கு தற்காலிக இருப்பிடத்தை தேடிக்கொள்வதற்காக வாடகை கொடுப்பனவு அவர்களுக்கான வீட்டு நிர்மாணம் நிறைவடையும் வரை வழங்கப்படும். இப்பகுதியில் வசிக்கும் குடும்பங்களில் 4 குடும்பங்கள் மாத்திரமே மீண்டும் அதே இடத்தில் நிர்மாணிக்கப்படும் அடுக்குமாடி வீட்டு தொகுதியில் வசிக்க தமது விருப்பத்தை வெளியிட்டனர்.

கேள்விப்பத்திரங்களை பயன்படுத்தி தரவுகளை சேகரிப்பதற்கு முன்னதாக கணக்கெடுப்பாளர்கள் பாதிக்கப்பட்ட மக்களுடன் நேருக்கு நேரான

கலந்துரையாடலை மேற்கொண்டு சமூக-பொருளாதார தகவல்களை சேகரிப்பதன் முக்கியத்துவம் பற்றி அவர்களுக்கு விளக்கினர்.

மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டத்தை தயாரிக்கும் முகமாக செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு குறித்த காணியில் இருண்டு அகற்றப்பட வேண்டிய கட்டிடங்கள் தொடர்பான விபரங்கள், காணி உரிமை தொடர்பான தகவல், பாதிக்கப்படும் கட்டமைப்புக்கள், உரிமையான சொத்துக்கள், வர்த்தக நடவடிக்கைகளின் விபரங்கள், வருமானம் மற்றும் செலவு, சனத்தொகை, கல்வி நியமங்கள், சமூக வலையமைப்புக்கள், சுகாதார வசதிகள், சமூக நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு மற்றும் தாக்கவிளைவிற்குட்படக்கூடிய மக்களுக்கு கிடைக்கும் அரச உதவு ஆகியன தொடர்பான தகவலை சேகரித்தது.

கணக்கெடுப்பாளர்கள் தரவுகளை சேகரித்த பிறகு அனைத்து கேள்விப்பத்திரங்களும் ஆலோசகர் குழுவினால் ஆராயப்பட்டது. அத்துடன் ஏதாயினும் விளக்கங்கள் இருப்பின் கணக்கெடுப்பாளர்களின் இணைப்பாளரிடம் விளக்கம் கோரப்பட்டது. தரவுகள் அனைத்தும் மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டத்தை தயாரிக்கும் பொருட்டு தரவுத்தளத்தில் பதிவேற்றப்பட்டது. தரவு சேகரிப்பு 2018 ஐப்பசி 13 மற்றும் 14ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

# அத்தியாயம் 2

# சமூக பொருளாதார தகவற்திரட்டு

மீள்குடியேற்றப்படவுள்ள 38 குடும்பங்களில் 21 குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்களை தேடி வேறு இடங்களில் இருந்து ஒபேசேகரபுரவில் குடியேறியவர்களாவர்.

*அட்டவணை 2.1: குடும்ப அளவிற்கேற்ப குடும்பங்களின் பரம்பல்*

| குடும்பத்தின் பருமனிற்கேற்ப இடம்பெயர்ந்த சனத்தொகையின் பரம்பல் | | | |
|---|---|---|---|
| **#** | **குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை** | **குடும்பங்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** |
| 1 | 1-2 | 7 | 18 |
| 2 | 3-4 | 17 | 45 |
| 3 | 5-7 | 13 | 34 |
| 4 | 7இற்கு மேலே | 1 | 3 |
| | மொத்தம் | **38** | **100** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

சராசரி குடும்ப பருமன் 3.8 ஆகும். 38 குடும்பங்களில் 3-4 உறுப்பினர்களை கொண்ட குடும்பங்கள் 17 உம் (மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் 45%) 5-7 உறுப்பினர்களை கொண்ட 13 குடும்பங்களும் (மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் 34%) 1-2 உறுப்பினர்களை கொண்ட 7 குடும்பங்களும், 7 பேருக்கு அதிகமான உறுப்பினர்களை கொண்ட ஒரு குடும்பமும் காணப்படுகிறது.

*அட்டவணை2.1: இன ரீதியான பரம்பல்*

| இனரீதியானபரம்பல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **இனம்** | **ஆண்** | | **பெண்** | | **மொத்தம்** | **மொத்தம்** |
| | **நபர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** | **நபர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** | | **சதவீதம்** |
| சிங்களம் | 54 | 81 | 60 | 82 | 114 | 81 |
| தமிழ் | 8 | 12 | 10 | 14 | 18 | 13 |
| முஸ்லீம் | 5 | 7 | 3 | 4 | 8 | 6 |
| மொத்தம் | **67** | **100** | **73** | **100** | **140** | **100** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

38 குடும்பங்களை கொண்ட மக்களில் சனத்தொகை 140 ஆகும். அதில் 114 சேர் சிங்கள மக்கள் (மொத்த சனத்தொகையில் 81%) 54 ஆண்கள் மற்றும் 60 பெண்கள் ஆவர். மேலும் மொத்த சனத்தொகையில் 18 பேர் தமிழர் மற்றும் 8 பேர் இஸ்லாமியர் ஆவர். பெண்கள் மற்றும் ஆண்களுக்கிடையிலான விகிதாசாரம் 73:67 ஆகும். இப்பகுதியில் வாழும் தமிழ்மக்களின் சதவீதமான 13% கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களின் சதவீதத்தை விட அதிகமாகும். எனினும் இப்பகுதியில் வாழும் முஸ்லீம் மக்களின் சதவீதமான 6% கொழும்பு மாவட்டத்தில் வாழும் முஸ்லீம் மக்களின் சதவீதத்தை விட குறைவாகும். இதேவேளை கொழும்பு மாநகரசபை பகுதியில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களின் தொகையை விட சிங்கள மக்களின் சனத்தொகை குறைவாகும். புறக்கோட்டை பகுதியில் பெருமளவிலான வியாபார நடவடிக்கைகள் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களால் மேற்கொள்ளப்படுகிறது. மலையக பகுதியை சேர்ந்த தமிழ் இளைஞர்கள் வேலை தேடி கொழும்பை நோக்கி இடம்பெயர்கின்றனர். ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவாக காணப்படுகின்ற அதேவேளை தெற்காசியாவில் மிக குறைந்ததாகவும் காணப்படுகிறது.

*அட்டவணை 2.2:மத அடிப்படையிலான சனத்தொகை பரம்பல்*

| மத அடிப்படையிலான பரம்பல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **மதம்** | **ஆண்** | | **பெண்** | | **மொத்தம்** | |
| | **நபர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** | **நபர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** | | **சதவீதம்** |
| பௌத்தம் | 50 | 75 | 53 | 73 | 103 | 74 |
| கிறிஸ்தவர்கள் | 6 | 9 | 10 | 14 | 16 | 11 |
| இந்து | 5 | 7 | 6 | 8 | 11 | 8 |
| இஸ்லாம் | 5 | 7 | 3 | 4 | 8 | 6 |
| பதிலளிக்கவில்லை | 1 | 1 | 1 | 1 | 2 | 1 |
| **மொத்தம்** | **67** | **100** | **73** | **100** | **140** | **100** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

இப்பகுதியில் வசிக்கும் மொத்த சனத்தொகையில் 103 பேர் பௌத்தர்கள் (50 ஆண்கள் மற்றும் 53 பெண்கள்) ஆவர். இது மொத்த சனத்தொகையில் 74% ஆகும். நாட்டின் பௌத்தர்களின் சனத்தொகை சதவீதமான 70.2% ஐ விட சற்று அதிகமாகும். இப்பகுதியில் வாழும் மக்களில் 16 பேர் கிறிஸ்தவர்கள் (மொத்த சனத்தொகையில் 11%) மற்றும் 11 பேர் இந்து மதம் மற்றும் 8 பேர் இஸ்லாமிய மதம் ஆகியவற்றை சேர்ந்தவர்கள்.

*அட்டவணை 2.3: வயது மற்றும் பாலின அடிப்படையில் குடும்ப தலைவர்கள்*

| வயது மற்றும் பாலின அடிப்படையில் பாதிக்கப்பட்ட குடும்ப தலைவர்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **#** | **வயது ஆண்டுகளில்** | **ஆண்** | | **பெண்** | | **மொத்தம்** | |
| | | **நபர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** | **நபர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** | **நபர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** |
| 1 | 18-30 | 1 | 6 | 1 | 5 | 2 | 5 |
| 2 | 31-40 | 6 | 33 | 7 | 35 | 13 | 34 |
| 3 | 41-60 | 11 | 61 | 7 | 35 | 18 | 48 |
| 4 | 61வயதுக்கு மேல் | 0 | 0 | 5 | 25 | 5 | 13 |
| | **மொத்தம்** | **18** | **100** | **20** | **100** | **38** | **100** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

வீட்டுத்தலைவர்களில் 48% (11 ஆண்கள் மற்றும் 7 பெண்கள்) ஆனோர் 41-60 வயது பிரிவுக்குட்பட்டவராக காணப்படுகின்றனர். 31-40 வயதுக்குட்பட்ட குடும்ப தலைவர்கள் 34% (6 ஆண்கள் மற்றும் 7 பெண்கள்) ஆனோர் காணப்படுகின்றனர். 18-30 வயதுக்குட்பட்ட பிரிவில் 2 குடும்ப தலைவர்கள் ( 1 ஆண் மற்றும் 1 பெண்) காணப்படுகின்றனர். குடும்ப தலைவர் என்பது வீட்டுக்கு உரிமையாளரை குறிக்கும். மேலும் 61 வயதுக்கு மேற்பட்ட பெண்களை குடும்ப தலைவிகளாக கொண்ட 5 குடும்பங்களும் இப்பகுதியில் காணப்படுகின்றன. ஒபேசேகரபுரவில் சில ஆண்கள் அப்பகுதி பெண்களை திருமணம் செய்தபின்னர் தமது மனைவியின் வீட்டிலே தங்கியுள்ளனர். பொருளாதார காரணங்களுக்காக இளம் தம்பதியினருக்கு சொந்தமாக வீடொன்றை உரிமை கொள்ள சில காலம் தேவைப்படுகிறது. வங்கியில் கடனை பெறுவதற்கு கூட நிரந்தர வேலையினை கொண்டிருக்க

வேண்டும். ஒருவர் தமது தொழிலில் நிரந்தர தன்மையை பெற மூன்றாண்டு காலம் காத்திருக்க வேண்டும். உரிய ஊட்டச்சத்துக்களின்மை, மன அழுத்தம், கடும் உழைப்பு மற்றும் சுகாதாரமற்ற செயற்பாடுகள் காரணமாக இப்பகுதியில் மிககுறைவான 60 வயதுக்கு மேற்பட்டோரே காணப்படுகின்றனர்.

*அட்டவணை 2.4: பாதிக்கப்படும் மக்கள் (பால் மற்றும் வயது அடிப்படையில்)*

| பாதிக்கப்படும் மக்கள் (பால் மற்றும் வயது அடிப்படையில்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| # | வயது | ஆண் | | பெண் | | மொத்தம் | |
| | வகை | | | | | எண்ணிக்கை | |
| | | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
| 1 | <5வயது | 4 | 6 | 3 | 4 | 7 | 5 |
| 2 | 6-10 | 4 | 6 | 4 | 5 | 8 | 6 |
| 3 | 11-17 | 8 | 12 | 10 | 14 | 18 | 13 |
| 4 | 18-30 | 19 | 28 | 20 | 28 | 39 | 28 |
| 5 | 31-40 | 11 | 16 | 12 | 16 | 23 | 16 |
| 6 | 41-60 | 20 | 30 | 17 | 23 | 37 | 26 |
| 7 | >61 | 1 | 2 | 7 | 10 | 8 | 6 |
| | **மொத்தம்** | **67** | **100** | **73** | **100** | **140** | 100 |
| | | | | | | | |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

பாதிக்கப்படும் 140 பேரில் 71% ஆனோர் 18-60 வயதுக்குட்பட்ட வயதினராவர். இதில் 39 பேர் 18-30 வயது இடைவெளி பிரிவினராக காணப்படுகின்றனர். மொத்த சனத்தொகையில் 16% ஆனோர் 31-40 வயதிற்கு இடைப்பட்டோராக காணப்படுகின்றனர். இவ்வயது பிரிவில் பால் நிலை பரம்பல் சமனாக காணப்படுகின்றது. இப்பகுதியில் எட்டு 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஸ்ட பிரஜைகள் காணப்படுவதுடன் அவர்கள் அனைவரும் பெண்களாவர். சிரேஸ்ட பிரஜைகளின் சதவீதன் தேசிய சதவீதமான 12.4% ஐ விட குறைவாகும். ஓய்வின்மை, மன அழுத்தம், போசாக்கின்மை, கடுமையான வேலை ஆகியன காரணமாக இப்பகுதியில் அனேகர் இலங்கையில் ஆயுட்காலமான 72 ஆண்டுகளை எட்டுவதற்கு முன்னரே உயிரிழக்கின்றனர். கடந்த இரு தசாப்தகாலமாக இப்பகுதியில் குடியேறிய இளம் தம்பதிகள் காரணமாக இப்பகுதியின் சனத்தொகை பரம்பலில் கணிசமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 11% ஆக காணப்படுகிறது.

*அட்டவணை2.5:பாடசாலைசெல்லும்வயதுள்ளபாதிக்கப்பட்ட மக்களின் கல்வி மட்டம் (பாலின அடிப்படையில்)*

| பாடசாலைசெல்லும்வயதுள்ளபாதிக்கப்பட்ட மக்களின் கல்வி மட்டம் (பாலின அடிப்படையில்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| # | கல்வி மட்டம் | ஆண் | | பெண் | | மொத்தம் | |
| | | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
| 1 | பாடசாலை செல்ல காத்திருப்போர் | 4 | 22 | 3 | 15 | 7 | 18 |
| 2 | தரம் 1-5 | 4 | 22 | 5 | 30 | 10 | 26 |
| 3 | தரம் 6-9 | 6 | 8 | 7 | 15 | 8 | 21 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | க.பொ.த.சா சித்தி | 2 | 11 | 3 | 15 | 5 | 13 |
| 5 | க.பொ.த.உ. சித்தி | 2 | 11 | 2 | 10 | 4 | 11 |
| | **மொத்தம்** | **18** | **100** | **20** | **100** | **38** | **100** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு*

பாடசாலை செல்லும் வயதான 18 வயதிற்கு குறைந்த 33 பேர் இப்பகுதியில் வசிக்கின்றனர். அவர்களில் 16 பேர் ஆண்கள் மற்றும் 17 பேர் பெண்கள் ஆவர். குறித்த 33 பேரில் 7 பேர் பாடசாலை செல்ல காத்திருக்கின்ற அதேவேளை 22 பேர் தரம் 1-9 இடையே கற்கின்றனர். 4 பேர் க.பொ.த. உயர்தரம் படிக்கின்றனர். க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரம் ஆகியவற்றில் சித்தியெய்திய 5 மற்றும் 4 பேரும் முறையே இப்பகுதியில் காணப்படுகின்றனர்.

***அட்டவணை* 2.6:பாடசாலை செல்லும் வயதுள்ள பாதிக்கப்பட்ட மக்களின் கல்வியறிவு மட்டம் (பாலின அடிப்படையில்)**

| **பாடசாலை செல்லும் வயதுள்ள பாதிக்கப்பட்ட மக்களின் கல்வியறிவு மட்டம் (பாலின அடிப்படையில்)** | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **#** | **கல்வி மட்டம்** | **ஆண்** | | **பெண்** | | **மொத்தம்** | |
| | | **நபர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** | **நபர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** | **நபர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** |
| 1 | பாடசாலைக்கு செல்லவில்லை | 1 | 2 | 1 | 2 | 2 | 2 |
| 2 | கையெழுத்திட முடியும் ஆனால் பாடசாலைக்கு செல்லவில்லை | 0 | 0 | 2 | 4 | 2 | 2 |
| 4 | தரம் 1-5 | 9 | 19 | 10 | 19 | 19 | 19 |
| 5 | தரம் 6-9 | 24 | 49 | 24 | 45 | 48 | 47 |
| 6 | க.பொ.த.சா சித்தி | 10 | 20 | 9 | 17 | 19 | 19 |
| 7 | க.பொ.த.உ. சித்தி | 4 | 8 | 3 | 6 | 7 | 7 |
| 8 | பட்டதாரி மாணவர்/இளமானி | 0 | 0 | 1 | 2 | 1 | 1 |
| | பதிலளிக்கவில்லை | 1 | 2 | 3 | 5 | 4 | 4 |
| | **மொத்தம்** | **49** | **100** | **53** | **100** | **102** | **100** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு*

பாதிக்கப்பட்ட மக்களில் 48 பேர் தரம் 6-9 வரை கல்வி கற்றுள்ளனர். இவர்களில் ஆண் பெண் விகிதாசாரம் சமனான நிலையில் காணப்படுகிறது. க.பொ.த. சாதாரண தரத்தில் 19 பேரும் க.பொ.த உயர்தரத்தில் 7 பேரும் சித்தியடைந்துள்ளனர். இரு சந்தர்ப்பங்களிலும் பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதாசாரம் சமமாக உள்ளது. வயது வந்தோரில் 4 பேர் பாடசாலைக்கு செல்லவில்லை. இது இப்பகுதியில் வாழும் வயது வந்தோரில் 4% ஆகும். மேலும் இது தேசிய சதவீதமான 2.4% ஐ விட குறைவாகும்.

2018 ஒக்டோபர் 10 அன்று ஒபேசேகரபுரவில் இடம்பெற்ற பங்குதாரர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுடனான கலந்துரையாடலில் 10 வயதுக்கு குறைந்த இரு குழந்தைகள் ஒழுங்காக பாடசாலைக்கு செல்வதில்லை என தெரிவிக்கப்பட்டது. குறித்த சிறுவர்கள் தொடர்ந்து பாடசாலைக்கு செல்வதை ஊக்குவிக்கும் வகையில்

பாடசாலை அதிபர் அவர்களது வீடுகளுக்கு சென்று கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

*அட்டவணை2.7:குடும்ப தலைவர்களின் குடியியல் தகைமை (பாலின அடிப்படையில்)*

| குடும்ப தலைவர்களின் குடியியல் தகைமை (பாலின அடிப்படையில்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| # | குடியியல் தகைமை | ஆண் | | பெண் | | மொத்தம் | |
| | | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
| 1 | திருமணமானவர் | 17 | 94 | 17 | 85 | 34 | 89 |
| 2 | திருமணமாகாதவர் | 0 | 0 | 1 | 5 | 1 | 3 |
| 3 | விதவைகள் | 0 | 0 | 1 | 5 | 1 | 3 |
| 4 | விவாகரத்து பெற்றோர் | 1 | 6 | 0 | 0 | 1 | 3 |
| 6 | பதிலளிக்காதோர் | 0 | 0 | 1 | 5 | 1 | 3 |
| | மொத்தம் | **18** | **100** | **20** | **100** | **38** | **100** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

38 குடும்ப தலைவர்களில் 34 பேர் திருமணமானவர்கள் மேலும் ஒருவர் விதவையானவர். இன்னொருவர் விவாகரத்தானவர். ஒரு பெண்மணி தமது குடியியல் நிலையை வெளிப்படுத்தவில்லை. ஒரு வீட்டில் மூன்று குடும்பங்கள் வசிக்கின்ற அதேவேளை இன்னொரு வீட்டில் ஒரு பெண் தமது கணவர் மற்றும் குழந்தையுடன் தமது சகோதரியுடன் வீட்டை பகிர்ந்து கொண்டுள்ளார்.

*அட்டவணை 2.8:பாதிக்கப்பட்ட மக்களின் குடியியல் தகைமை (பால் அடிப்படையில்)*

| பாதிக்கப்பட்ட மக்களின் குடியியல் தகைமை (பால் அடிப்படையில்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| # | குடியியல் தகைமை | ஆண் | | பெண் | | மொத்தம் | |
| | | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
| 1 | திருமணமானவர் | 38 | 57 | 38 | 52 | 76 | 54 |
| 2 | திருமணமாகாதவர் | 10 | 15 | 11 | 15 | 21 | 15 |
| 3 | விதவைகள் | 0 | 0 | 1 | 1 | 1 | 1 |
| 4 | விவாகரத்து பெற்றோர் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 5 | பிரிந்து வாழ்வோர் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 6 | பருவ மடையாதவர் | 14 | 21 | 18 | 25 | 32 | 23 |
| 7 | சிறு வயது திருமணம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 8 | பதிலளிக்காதோர் | 3 | 4 | 5 | 7 | 8 | 5 |
| | **மொத்தம்** | **67** | **100** | **73** | **100** | **140** | **100** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

இப்பகுதியில் வாழும் பாதிக்கப்பட்ட 108 வயதுக்கு வந்தோரில் 76 பேர் திருமணமானவர்கள். மேலும் 21 வயதுக்கு வந்த திருமணமாகாதோரும் காணப்படுகின்றனர். ஒரு சிறு வயது திருமணம் செய்த ஆணொருவர் காணப்படுகின்ற அதேவேளை 8 பேர் தமது பெயரை வெளிப்படுத்தவில்லை.

பாதிக்கப்பட்ட 140 பேரில் 32 பேர் பருவமடையாதவர்களும் காணப்படுகின்றனர் (சட்டரீதியான திருமண வயதை விட குறைந்தோர்).

*அட்டவணை2.9: பாதிக்கப்பட்ட மக்களின் வருமான மார்க்கங்கள்*

| # | தொழில்/ வருமான வகை | ஆண் | பெண் | மொத்தம் | |
|---|---|---|---|---|---|
| | | நபர்களின் எண்ணிக்கை | நபர்களின் எண்ணிக்கை | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
| 1 | சுயதொழில் | 4 | 2 | 6 | 9 |
| 2 | வர்த்தக நடவடிக்கைகள் | 2 | 2 | 4 | 6 |
| 3 | அரச துறையில் நிறைவேற்று பதவி | 1 | 2 | 3 | 4 |
| 4 | அரச துறையில் ஏனைய தர நிலைகள் | 6 | 0 | 6 | 9 |
| 5 | தனியார் துறையில் நிறைவேற்று பதவி | 0 | 2 | 2 | 4 |
| 6 | தனியார் துறையில் ஏனைய தர நிலைகள் | 13 | 5 | 18 | 27 |
| 7 | வெளிநாட்டு தொழில் | 1 | 1 | 2 | 3 |
| 8 | தொழில்நுட்பம் | 1 | 0 | 1 | 1 |
| 9 | பாதுகாப்பு | 1 | 0 | 1 | 1 |
| 10 | பயிற்றப்பட்ட ஊழியர் | 3 | 2 | 5 | 8 |
| 11 | நாட்கூலி ஊழியர் | 11 | 5 | 16 | 24 |
| 12 | ஓய்வுபெற்ற ஊழியர் | 0 | 1 | 1 | 1 |
| 14 | உறவினர்/நலன் விரும்பிகளின் அன்பளிப்புக்களில் தங்கியிருப்போர் | 1 | 1 | 2 | 3 |
| | **மொத்தம்** | **44** | **23** | **67** | **100** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

பாதிக்கப்பட்ட 140 பேரில் 109 பேர் 15-60 வயதிடைவெளியை கொண்ட தொழிற்படையில் பங்கேற்க கூடிய வயதெல்லையை கொண்டுள்ளனர். அவர்களில் 43 ஆண்களும் 21 பெண்களுமாக 64 பேர் வருமான மார்க்கங்களை கொண்டுள்ளனர். தர்ம உதவிகளில் தங்கியுள்ள இருவர் தொழில் புரிவதாக கணிக்கப்படவில்லை. அத்துடன் ஊழியப்படையின் பங்கேற்பு வீதத்தை கணிக்கும் போதும் அவர்கள் உள்ளடக்கப்படவில்லை. இப்பகுதியின் ஊழியப்படையின் பங்கேற்பு விகிதமான 58.7% தேசிய ஊழியப்படையின் பங்கேற்பு வீதமான 53.8% ஐ விட அதிகமாகும்.

இப்பகுதியில் வாழ்வோரில் அனேகர் தனியார் துறையில் நிறைவேற்று தரம் தவிர்ந்த துறைகள் மற்றும் நாட்கூலி சார் தொழில் புரிபவர்களாக காணப்படுகின்றனர். 51% ஆனோர் குறித்த இரு தர நிலைகளிலும் பணி புரிகின்றனர். அரச மற்றும் தனியார் துறைகளில் நிறைவேற்று தரம் தவிர்ந்த ஏனைய துறைகளில் பெண்களை விட ஆண்களே அதிகம் தொழில் புரிகின்றனர். அலுவலக உதவியாளராக பணியாற்றும் ஒருவர் மாலை நேரங்களில் முச்சக்கர வண்டியை செலுத்துகின்றார். இருவர் மத்தியகிழக்கு நாடான குவைத்தில் தொழில் புரிகின்றனர். இவர்களில் ஆண் நிர்மாண தொழிலாளராக பணியாற்றுகின்ற அதேவேளை பெண் வீட்டு பணியாளராகவும் பணியாற்றுகின்றனர்.

*அட்டவணை 2.10:பாதிக்கப்பட்ட மக்களின் சராசரி மாதாந்த வருமான மட்டம் (பால் அடிப்படையில்)*

| பாதிக்கப்பட்ட மக்களின் சராசரி மாதாந்த வருமான மட்டம் (பால் அடிப்படையில்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| # | வருமான மட்டம் | ஆண் | | பெண் | | மொத்தம் | |
| | | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
| 1 | < 5,000 | 1 | 2 | 2 | 9 | 3 | 5 |
| 2 | 5,001 - 10,000 | 1 | 2 | 0 | 0 | 1 | 1 |
| 3 | 10,001 - 15,000 | 1 | 2 | 4 | 17 | 5 | 8 |
| 4 | 15,001 - 25,000 | 12 | 28 | 5 | 22 | 17 | 25 |
| 5 | 25,001 - 50,000 | 21 | 48 | 10 | 44 | 31 | 46 |
| 6 | 50,001 - 75,000 | 5 | 12 | 0 | 0 | 5 | 8 |
| 7 | 75,001 - 100,000 | 1 | 2 | 1 | 4 | 2 | 3 |
| 8 | 100,000 - 150,000 | 1 | 2 | 0 | 0 | 1 | 1 |
| 9 | 150,000இற்கு மேல் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | பதிலளிக்கவில் லை | 1 | 2 | 1 | 4 | 2 | 3 |
| | **மொத்தம்** | **44** | **100** | **23** | **100** | **67** | **100** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

ஆண்கள் மற்றும் பெண்கள் இடையேயான வருமான மட்டங்கள் அனேகமாக சமநிலையில் காணப்படுகின்றன. எனினும் பெரும்பாலான பெண்கள் குறைந்த வருமான மட்டங்களிலேயே காணப்படுகின்றனர். 46% ஆன பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ரூபா. 25,000-50,000 வரையிலான வருமான மட்டத்தை கொண்டுள்ளனர். 25% ஆன பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ரூபா. 15,001-25,000 வரையிலான வருமான மட்டத்தை கொண்டுள்ளனர். இவ்விரு வருமான மட்டத்திலும் 71% ஆன குடும்பங்கள் காணப்படுகின்றன. இம்மட்டங்களுக்கு கீழே உள்ள வருமான மட்டங்களில் 9 பேர் காணப்படுகின்றனர். அதேவேளை 8 பேர் ரூபா. 50,001 இற்குமதிகமான வருமானத்தை பெறுகின்றனர். இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின் படி கொழும்பிற்கான வறுமை மட்டம் மாதமொன்றிற்கான ரூபா. 5,114 ஆகும். ஒபேசேகரபுரவின் சராசரி குடும்ப அளவு 3.68 ஆகும். எனவே வறுமை கோட்டினை தாண்ட சராசரி குடும்ப வருமானம் ரூபா. 18,820 ஆக காணப்பட வேண்டும். இதன்[அடி இரு குடும்பங்கள் மாத்திரமே வறுமை கோட்டின் கீழான மாதாந்த வருமானத்தை பெறுகின்றனர். சராசரியாக ஒரு குடும்பத்தில் 1.76 பேர் வருமானத்தை ஈட்டுகின்றனர் (67/38). ஒரேயொரு பாதிக்கப்பட்ட நபரே ரூபா. 100,000-150,000 வருமான மட்டத்தை விட அதிக வருமான மட்டத்தை பெறுகின்றார். நிறையிட்ட சராசரியிலான மாதாந்த வருமானம் ரூபா. 32,835 ஆகும். ஒரு குடும்பத்தில் சராசரியாக 1.76 பேர் தொழில்புரிவதால் ஒரு குடும்பத்திற்கான சராசரி வருமானம் ரூபா. 57,791 ஆகும். இலங்கையில் வாழும் 60% ஆன குடும்பங்களின் சராசரி வருமானம் ரூபா. 46,097 ஆகும் (மார்கழி 2016, மத்திய வங்கி). இதனடிப்படையில் 39 பாதிக்கப்பட்ட நபர்கள் நடுத்தர வருமானம் பெறுபவர்களாக வகைப்படுத்தக்கூடியவர்களாக காணப்படுகின்றனர். 58% ஆன குடும்பங்கள் நடுத்தர வருமான மட்டத்தில் உள்ளடக்கப்படுவதால் மாதாந்தம் ரூபா. 3000 (நாளொன்றிற்கு ரூபா. 100) ஐ தவணைக்கொடுப்பனவாக செலுத்துவது கடினமானதாக அமையாது என கருதப்படுகிறது.

*அட்டவணை 2.11: பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சராசரி மாதாந்த செலவு*

| # | செலவு கூறு | பதிலளித்த குடும்பங்களின் எண்ணிக்கை | மாதாந்த சராசரி செலவு (ரூபாவில்) |
|---|---|---|---|
| 1 | உணவு | 37 | 23,524 |
| 2 | ஆடைகள் | 16 | 1,156 |
| 3 | நீர் | 36 | 772 |
| 4 | மின்சாரம் | 33 | 1,402 |
| 5 | எரிபொருள் | 9 | 4,000 |
| 6 | எரிவாயு | 24 | 1,578 |
| 7 | விறகு | 1 | 1,000 |
| 8 | புகையிலை/வெற்றிலை | 11 | 3,091 |
| 9 | மதுபானம் | 12 | 1,875 |
| 10 | தர்ம நடவடிக்கைகள் | 8 | 225 |
| 11 | தொடர்பாடல்/தொலைபேசி | 29 | 1,538 |
| 12 | போக்குவரத்து | 22 | 2,264 |
| 13 | கல்வி | 22 | 4,200 |
| 14 | சுகாதாரம் | 23 | 1,078 |
| 15 | குத்தகை கட்டணங்கள் | 1 | 3,500 |
| 16 | தொடர்பாடல் | 1 | 1,000 |
| 17 | சமய நடவடிக்கைகள் | 5 | 500 |
| 18 | வாகன திருத்த வேலைகள் | 3 | 3,667 |
| 19 | கடன் தவணை கொடுப்பனவு | 6 | 5,950 |
| | **மொத்தம்** | | **55,485** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

உயரிய சராசரி மாதாந்த செலவு உணவுகளுக்காக செலவிடப்படுகின்றது. மொத்த செலவில் 42% உணவுக்காக செலவிடப்படுகின்ற அதேவேளை நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் தொலைத்தொடர்புகளுக்கு பெரும்பாலானோர் சிறிய தொகையினையே செலவிடுகின்றனர். அத்துடன் போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் கல்விக்கான செலவுகளையும் பலர் வெளிப்படுத்தியிருந்தனர். குடும்பங்களின் மொத்த செலவுகள் மொத்த வருமானத்தை விட அதிகமாக இருக்கின்ற போதிலும் ஒரு குடும்பத்தில் சராசரியாக ஒன்றுக்கு மேற்பட்டோர் வருமானத்தை உழைப்பதால் எவ்வித தடங்கலும் இன்றி குறித்த செலவுகளை ஈடு செய்து கொள்ள முடியும். 38 குடும்பங்களிலும் மொத்தமாக 67 பேர் தொழில் புரிகின்றனர். அதாவது சராசரியாக 1.76 உறுப்பினர்கள் ஒரு குடும்பத்தில் வருமானமீட்டக்கூடிய தொழில்களை புரிகின்றனர். ஒரு குடும்பத்திற்கான சராசரி வருமானமான 32,835 x 1.76 = ரூபா. 57,791 ஒரு குடும்பத்திற்கான மாதாந்த சராசரி செலவான ரூபா. 55,485 ஐ விட அதிகமாகும்.

*அட்டவணை2.12:தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய மக்கள் மற்றும் தாக்கவிளைவின் வகை*

| தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய மக்கள் மற்றும் தாக்கவிளைவின் வகை | | | |
|---|---|---|---|
| **#** | **தாக்கவிளைவின் வகை** | **தாக்கவிளைவிற் குள்ளாக கூடிய குடும்பங்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** |
| 1 | போதுமான வருமானமின்மை காரணமாக வயது முதிர்ந்தவர்களின் (70 வயதிற்கு மேல்) மற்றும் விசேட தேவையுள்ள பெண்களின் தலைமையிலான குடும்பங்கள் | 3 | 75 |
| 2 | மிக குறைந்த வருமானம் (ரூபா. 5000 இற்கு குறைந்த வருமானம்) | 1 | 25 |
| | **மொத்தம்** | 4 | 100 |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய குடும்பங்களாக இனம் காணப்பட்டுள்ள குடும்பங்களில் மூன்று குடும்பங்கள் வயது முதிர்ந்தோரை கொண்டுள்ளதாலும் விசேட தேவைகளுடைய பெண்ணொருவரால் தலைமைதாங்கப்படுவதாலும் போதியளவு வருமானம் இல்லாமல் காணப்படுகின்றன. மேலும் ஒரு குடும்பம் மிகவும் வறிய நிலையில் அதாவது மாதாந்த வருமானம் ரூபா. 5,000 ஐ கொண்டுள்ளது. மேலும் ஒரு திருமணமாகாத பெண் அப்பகுதியில் வாடகை வீட்டில் வசிக்கின்ற போதும் தமது வருமானத்தை வெளியிட மறுத்துவிட்டார். இவ்வாறு தகவலை வெளியிட்டால் வீட்டு உரிமையாளர் தம்மீது கோபம் கொள்ளலாம் என்ற பயமாக இருக்கலாம். இவ்வாறு ஏற்கனவே குறித்த வீட்டில் வசித்த திருமணமான குடும்பமொன்று இவ்வாறு தகவலை வெளியிட்டமையால் உரிமையாளரால் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சமூகமளிக்காத காணி உரிமையாளர்களுக்கு கட்டமைப்புக்களை மீளமைப்பதற்கான செலவு மட்டுமே செலுத்தப்படும். எனினும் வாடகை வீட்டில் குடியிருப்போருக்கு வீடொன்று வழங்கப்படும்.

*அட்டவணை 2.13:தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள்*

| தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் | |
|---|---|
| நோய் | எண்ணிக்கை |
| உயர் இரத்த அழுத்தம் | 9 |
| நீரிழிவு | 15 |
| இதய நோய்கள் | 6 |
| பார்வை குறைபாடு | 6 |
| செவிப்புலன் குறைபாடு | 1 |
| மூட்டு வீக்கம் | 5 |
| நடப்பதில் கஸ்டம் | 7 |
| ஊசு மூச்சு/ஆஸ்துமா | 3 |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

பிரதான தொற்றாத நோயாக நீரிழிவி காணப்படுகிறது. சுமார் 15 பேர் அதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். மரபணு, அதிக சீனி பாவனை, உடற்பருமன், அதிகம் அமர்ந்தவாறே பணியாற்றுகின்றமை உள்ளிட்ட காரணிகள் இதில் செல்வாக்கு செலுத்துகின்றன. அடுத்த பிரதான சுகாதார பிரச்சனையாக உயர் இரத்த அழுத்தம் காணப்படுகிறது. இதனால் 9 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நீரிழிவு மற்றும் உயர்

இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளோர் சுகாதார இடர் நிலையை எதிர்நோக்குகின்றனர். 7 பேர் நடப்பதில் சிக்கல் தன்மையை எதிர்கொள்ளுகின்ற அதேவேளை 6 பேர் இதய கோளாற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 7 பேர் பார்வை கோளாறு மற்றும் மூட்டு வீக்கம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நீர் தொடர்பான நோயினால் எவரும் பாதிக்கப்படவில்லை. இதற்கு இப்பகுதி மக்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீரை அருந்துவதே பிரதான காரணமாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச மருத்துவ வசதிகள் காணப்படுகின்றன. குறித்த வசதிகளை வழங்கும் நிறுவனங்கள் மீள்குடியேற்றப்படும் இடத்தில் இருந்து இலகுவில் அடைய கூடிய இடத்திலேயே காணப்படுகிறது.

*அட்டவணை2.14: குடும்ப நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு*

| குடும்பத்தின் தீர்மானமெடுத்தல்/வருமானமீட்டல் ஆகிய நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு | | |
|---|---|---|
| **#** | **செயற்பாடு** | **பதிலளித்த பெண்களின் எண்ணிக்கை** |
| 1 | நாளாந்த குடும்ப நடவடிக்கைகள் பற்றிய தீர்மானமெடுத்தல் | 32 |
| 2 | சமூக நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய நிலை | 34 |
| 3 | சமய நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய நிலை | 35 |
| 4 | சமூக மட்ட நிறுவனங்களில் பொறுப்புக்களை வகிக்க கூடிய நிலை | 35 |
| 5 | தேவையேற்படின் அரச உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயற்படக்கூடிய நிலை | 34 |
| 6 | பிள்ளைகளின் கல்வி தொடர்பில் தீர்மானமெடுத்தல் | 35 |
| 7 | சந்தர்ப்பம் கிடைக்கும் போது வருமான மீட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய சுதந்திரம் | 35 |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானமெடுக்கும் செயற்பாடுகளில் பெண்களின் பங்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவது முதல் சமூக மட்ட நிறுவனங்களில் பதவிகள் வகித்தல் வரை பெண்கள் மிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றனர். இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட பெண்களுக்கு குடும்பத்திற்குள் மற்றும் சமூகத்திற்குள் உரிய சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

*அட்டவணை 2.15:தளப்பரப்பின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட கட்டிடங்கள்*

| தளப்பரப்பின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட கட்டிடங்கள் | | |
|---|---|---|
| **#** | **தளப்பரப்பு (சதுர அடியில்)** | **இல** |
| 1 | 100இற்கு குறைவு | 2 |
| 2 | 101-200 | 13 |
| 3 | 201-300 | 16 |
| 4 | 301-400 | 3 |
| 5 | 401-500 | 3 |
| 6 | 501-600 | 0 |
| 7 | 600இற்கு மேல் (603) | 1 |
| | மொத்தம் | 38 |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்டமுகாமைத்துவ பிரிவு*

பாதிக்கப்பட்ட 38 வீடுகளில் 31 வீடுகள் 300 சதுர அடிக்கும் குறைவான தளப்பரப்பை கொண்டுள்ளன. வீடுகளுடன் இணைந்த கடையை கொண்டுள்ள இரு வீடுகள் முறையே 223 மற்றும் 422 சதுர அடி தளப்பரப்பை கொண்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள அனைத்து கட்டமைப்புக்களின் மொத்த தளப்பரப்பு 8,862 சதுர அடியாகும். பாதிக்கப்பட்ட வீடுகளின் சராசரி தளப்பரப்பு 223 சதுர அடியாகும். எனினும் குறித்த வீடுகளில் வசிக்கும் எவருக்கும் காணி தொடர்பான உரிமை காணப்படவில்லை. அவர்கள் அனைவரும் அரச காணியில் பலவந்தமாக குடியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

*அட்டவணை 2.16:தற்போதைய இடத்தில் வாழும் காலப்பகுதி*

| வாழும் காலப்பகுதி | |
|---|---|
| **வருடங்களின் எண்ணிக்கை** | **குடும்பங்களின் எண்ணிக்கை** |
| 10 ஆண்டுகளுக்கு குறைவு | 7 |
| 10-15 | 6 |
| 15-20 | 7 |
| ஆண்டுகளுக்கு மேல் | 15 |
| பதிலளிக்கவில்லை | 3 |
| **மொத்தம்** | **38** |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு*

ஏழு குடும்பங்கள் மாத்திரமே இப்பகுதியில் 10 ஆண்டுகளுக்கு குறைவான காலப்பகுதியில் வசிக்கின்றன. மேலும் 28 குடும்பங்கள் 10 ஆண்டுகளுக்கு அதிக காலமாக வசிக்கின்ற அதேவேளை 3 குடும்பங்கள் இது தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கவில்லை.

*அட்டவணை2.17:பாதிக்கப்பட்ட வீடுகளின் கட்டமைப்பு*

| வீடுகளின் கட்டிட வடிவமைப்பு | | |
|---|---|---|
| **அறைகளின் வகை** | **குடும்பங்களின் எண்ணிக்கை** | **குறிப்புக்கள்** |
| வரவேற்பறை | 37 | |
| ஒரு படுக்கையறை மட்டும் | 11 | |
| இரு படுக்கையறைகள் | 6 | |
| 3 படுக்கையறைகள் | 0 | |
| சமையலறை | 23 | |
| சாப்பாட்டு அறை | 1 | |
| களஞ்சிய அறை | 1 | |
| குளியலறை | 26 | |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு*

பெரும்பான்மையான வீடுகளில் (37 வீடுகள்) பிரதான அறை வரவேற்பறையாக பயன்படுத்தப்படுகிறது. இது பெரும்பாலும் பல்நோக்கு அறையாக பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை இரவில் படுக்கையறையாகவும் பயன்படுகிறது. படுக்கையறைகள் இரவில் நித்திரை கொள்வதற்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது. தனியான படுக்கையறையை கொண்ட வீடுகள் 11, இரு படுக்கையறைகளை கொண்ட வீடுகள் 6 மற்றும் இரண்டிற்கு மேற்பட்ட

படுக்கையறைகளை கொண்ட வீடுகள் 2 காணப்படுகின்றன. மேலும் 26 வீடுகளில் குளியலறை மற்றும் 23 வீடுகளில் சமையலறைகளும் காணப்படுகின்றன.

*அட்டவணை2.18:பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தற்போதைய வீடுகளில் வசதிகள்*

| தற்போது காணப்படும் வசதிகள் | | |
|---|---|---|
| **சேவை** | **மூலம்** | **வீடுகளின் எண்ணிக்கை** |
| நீர் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | 36 |
| | பொதுவான நீர் வழங்கல் (வீதி குழாய்) | 1 |
| | பதிலளிக்கவில்லை | 1 |
| மின்சாரம்/ஒளிரூட்டல் | மின்சார சபை இணைப்பு | 33 |
| | சூரிய கலம் | 3 |
| | மண்ணெண்ணெய் | 1 |
| | பதிலளிக்கவில்லை | 1 |
| மலசலகூட வசதிகள் | நீரடிக் கழிப்பிடம் | 0 |
| | நீர்க்கசிவிலா கழிப்பிடம் | 23 |
| | குழிக்கழிவறை | 8 |
| | பொது மலசலகூடம் | 1 |
| | பதிலளிக்கவில்லை | 6 |
| சமையல் | எரிவாயு | 26 |
| | மண்ணெண்ணெய் | 6 |
| | விறகு | 2 |
| | பதிலளிக்கவில்லை | 4 |
| தொலைபேசி | இலங்கை ரெலிகொம் | 1 |
| | கையடக்க தொலைபேசி | 25 |
| | பயன்படுத்துவதில்லை | 7 |
| | பதிலளிக்கவில்லை | 5 |
| இணையம் | இலங்கை ரெலிகொம் | 0 |
| | தனியார் சேவை வழங்குனர் | 0 |
| | கையடக்க தொலைபேசி | 11 |
| | பயன்படுத்துவதில்லை | 15 |
| | பதிலளிக்கவில்லை | 12 |
| செய்மதி தொலைக்காட்சி | இலங்கை ரெலிகொம் | 1 |
| | கையடக்க தொலைபேசி | 3 |
| | பயன்படுத்துவதில்லை | 21 |
| | பதிலளிக்கவில்லை | 13 |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு*

38 வீடுகளில் பெரும்பான்மையானவை தேசிய சேவை வழங்குனர்களால் வழங்கப்படும் மின்சாரம் மற்றும் நீர் வசதிகளை கொண்டுள்ளன. 60% இற்கும் அதிகமான வீடுகள் நீர்க்கசிவில்லா கழிப்பிடங்களை கொண்டுள்ள அதேவேளை எனினும் எந்த வீடுகளும் நீரடிக்கழிப்பிடங்களை கொண்டிருக்கவில்லை. 68% ஆன வீடுகள் சமையல் நடவடிக்கைகளுக்கு எரிவாயுவினை பயன்படுத்துகின்ற அதேவேளை 16% ஆன வீடுகள் மண்ணெண்ணையையும் இரு வீடுகள் விறகினையும் பயன்படுத்துகின்றன. 25 வீடுகள் கையடக்க தொலைபேசியை பயன்படுத்துகின்ற அதேவேளை 11 வீடுகளிலேயே கையடக்க தொலைபேசி மூலம் இணையம் பயன்படுத்தப்படுகிறது.

*அட்டவணை2.19:பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு சொந்தமான வீடுகளின் தன்மை*

| வீடுகளின் தன்மை | |
|---|---|
| **வீட்டின் தன்மை** | **எண்ணிக்கை** |
| நிரந்தரம் | 9 |
| பகுதி நிரந்தரம் | 24 |
| தற்காலிகமானவை | 5 |
| மொத்தம் | 38 |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு*

பாதிக்கப்பட்ட 38 வீடுகளில் 63% ஆனவை பகுதியளவில் நிரந்தரமானவையாக காணப்படுவதுடன் 9 வீடுகள் நிரந்தரமானவையாக காணப்படுகின்றன. இவ்வீடுகளை மீளமைப்பதற்கான செலவு செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவினால் வழங்கப்படும் மாற்று வீடுகளின் பெறுமதியை விட குறைவாகும். நிரந்தர வீடுகளின் சுவர்கள் செங்கற்கள் அல்லது சீமேந்து கற்களினால் கட்டப்பட்டு சாந்து பூசப்பட்டுள்ளது. நிலம் சீமேந்தினால் பூசப்பட்டோ அல்லது பதிகல் பதிக்கப்பட்டோ உள்ளன. வீடுகளின் கூரைகளுக்கு ஓடுகள் அல்லது அஸ்பெஸ்டஸ் தகடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மர கதவுகள் மற்றும் ஜன்னல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பகுதி நிரந்தரமான வீடுகளின் சுவர்கள் சீமேந்து கற்களினால் கட்டப்பட்டுள்ளதுடன் சாந்து பூசப்படாத நிலையில் உள்ளன. சில வீடுகள் மரப்பலகைகள் அல்லது தகடுகளையும் சுவராக கொண்டுள்ளன. தரைக்கு சீமேந்து பூசப்பட்டுள்ளதுடன் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் தரம் குறைவான மரப்பலகைகளால் செய்யப்பட்டுள்ளன. கூரைகளுக்கு அஸ்பெஸ்டஸ் அல்லது ஈய தகடுகளால் பொருத்தப்பட்டுள்ளது.

*அட்டவணை 2.20: பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சொந்தமான உடமைகள்*

| பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சொந்தமான உடமைகள் | |
|---|---|
| **உடமைகள்** | **எண்ணிக்கை** |
| மோட்டார் சைக்கிள் | 5 |
| முச்சக்கர வண்டி | 11 |
| துவிச்சக்கர வண்டி | 2 |
| கார் | 0 |
| வரைதல் அறை உபகரணங்கள் | 0 |
| உணவுண்ணும் மேசைகள் | 11 |
| உணவுண்ணும் கதிரைகள் | 99 |
| கட்டில்கள் | 40 |
| அலுமாரிகள் | 28 |
| நிலையடுக்கு | 24 |
| தொலைக்காட்சி | 31 |
| வானொலி | 30 |
| குளிர்சாதனப்பெட்டி | 21 |
| ஆடை கழுவும் இயந்திரம் | 9 |
| தையல் இயந்திரம் | 5 |
| மின் விசிறிகள் (கூரை) | 14 |
| மின் விசிறிகள் (ஏனையவை) | 36 |
| கணனி | 3 |

*மூலம்: சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு-செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு*

சராசரியாக ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கட்டில், ஒரு மின் விசிறி மற்றும் இரண்டிற்கும் மேற்பட்ட கதிரைகள் காணப்படுகின்றன. குறித்த வீடுகள் சிறிய மற்றும் நெரிசலானவை என்பதால் மின்விசிறி அத்தியாவசியமான தேவையாக கருதப்படுகிறது. அனேக வீடுகளில் அலுமாரிகள் காணப்படுகின்றன. பாதியளவிலான வீடுகள் குளிர்சாதன பெட்டிகளை கொண்டுள்ள அதேவேளை பெரும்பான்மையான வீடுகள் தொலைக்காட்சி அல்லது வானொலி அல்லது இரண்டையுமோ கொண்டுள்ளன.

11 வீடுகள் சொந்தமான முச்சக்கரவண்டிகளை கொண்டுள்ள அதேவேளை 5 வீடுகள் மோட்டார் சைக்கிள்களையும் இரு வீடுகள் துவிச்சக்கர வண்டிகளையும் கொண்டுள்ளன.

# அத்தியாயம் 3

# ஆலோசனை மற்றும் தகவல் பகிரல்

## 3.1: பங்குதாரர் சந்திப்பு- அருணோதய மாவத்தை- ஒபேசேகரபுர

முதற்கட்ட கலந்துரையாடல் 2018 ஐப்பசி 11ஆம் திகதி காலை 10 மணிக்கு ஒபேசேகரபுரவில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் செயற்த்திட்டத்தின் நோக்கம் மற்றும் அதனுடன் இணைந்த மீள்குடியேற்றம் மற்றும் அதனால் சமூகத்திற்கு கிடைக்க கூடிய நன்மைகள் தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் 14 ஆண்களும் 17 பெண்களுமாக 31 பேர் பங்கேற்றனர்.

மீள்குடியேற்ற நிபுணரால் வழங்கப்பட்ட சுருக்கமான விபரணத்தை தொடர்ந்து பிரச்சனைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அவற்றிற்கு மீள்குடியேற்ற நிபுணரால் வழங்கப்பட்ட பதில் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

*அட்டவணை 3. 1: கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட பிரச்சனைகள்*

| பிரச்சனைகளை முன்வைத்த பாதிக்கப்பட்ட மக்களின் பால் | முன்வைக்கப்பட்ட பிரச்சனைகள் | மீள்குடியேற்ற நிபுணர் மற்றும் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் அலுவலகர்களால் வழங்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| பாதிக்கப்பட்ட பெண் | பாதிக்கப்பட்டோர் அதே இடத்தில் நிர்மாணிக்கப்படும் அடுக்குமாடி வீட்டுத்தொகுதிக்கு திரும்ப விரும்பினால் வாடகை உதவி கொடுப்பனவு வழங்கப்படுமா? | தற்போதைய இடத்திற்கு மீண்டும் திரும்ப விரும்பினால் வழங்கப்படும் வாடகை உதவி கொடுப்பனவு தற்காலிக தங்குமிடத்தை பெற்ற பிறகு வழங்கப்படும் |
| | அவ்வாறெனில் வழங்கப்படும் தொகை எவ்வளவு மற்றும் எவ்வளவு காலத்திற்கு வழங்கப்படும்? | தற்போதைய உங்கள் வீட்டின் தன்மைக்கேற்பவே வாடகை கொடுப்பனவு வழங்கப்படும்<br><br>நீங்கள் தற்போதைய வீட்டை விட்டு வெளியேறும் காலப்பகுதி மற்றும் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவினால் புதிய வீடு ஒதுக்கப்படும் காலப்பகுதி ஆகியவற்றிற்கு இடையில் வாடகை கொடுப்பனவு வழங்கப்படும் |
| | | |
| பாதிக்கப்பட்ட ஆண் | அடுக்குமாடி குடியிருப்பில் வாகன தரிப்பிட வசதிகள் வழங்கப்படுமா? | தனிப்பட்ட வாகன தரிப்பிட வசதிகள் இல்லை. பொதுவான வாகன தரிப்பிட வசதிகள் உண்டு |
| | | |
| | நாங்க புதிய அடுக்குமாடி | 450 சதுர அடி மற்றும் |

| | | |
|---|---|---|
| | வீட்டிற்கு எவ்வளவு குத்தகை பணம் மாதாந்தம் செலுத்த வேண்டும்? | 550 சதுர அடியை தளப்பரப்பாக கொண்ட இரு வகையான குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. 450 சதுர அடியை தளப்பரப்பாக கொண்ட வீட்டிற்கு மாதாந்தம் ரூபா. 2800 வீதம் 360 மாதங்களுக்கும் 550 சதுர அடியை கொண்ட வீட்டிற்கு மாதாந்தம் ரூபா. 3000 வீதம் 400 மாதங்களுக்கும் செலுத்த வேண்டும். நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 450 சதுர அடி கொண்ட வீடொன்றை அமைக்க ரூபா. 4 மில்லியன் செலவாகின்ற போதும் அது ரூபா. 1 மில்லியனையே மக்களிடமிருந்து பெறுகிறது. 550 சதுர அடி கொண்ட வீட்டிற்கு ரூபா. 7 மில்லியன் செலவாகின்ற போதும் அது ரூபா. 1.2 மில்லியனையே மக்களிடமிருந்து பெறுகிறது. |
| | வேறு எத்தகைய கட்டணங்களை நாங்கள் செலுத்த வேண்டும்? | அடுக்குமாடி கட்டிடங்களின் பராமரிப்பிற்கான ஆரம்ப கட்டணத்தை அவற்றை கையளிப்பதற்கு முன்னர் செலுத்த வேண்டும். குறித்த தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படும். குறித்த கட்டணம் கூட்டு ஆதன முகாமைத்துவ குழு ஏற்படுத்தப்பட்டு அவர்களது கணக்கிற்கு மாற்றப்படும்.<br><br>மாதாந்த நீர் மற்றும் மின்சார கட்டணங்களை வீடுகளில் வசிப்போர் செலுத்த வேண்டும் |
| | | |
| பாதிக்கப்பட்ட பெண் | நாங்கள் வசிக்கும் சில வீடுகள் 450 சதுர அடி தளப்பரப்பை விட அதிகமான தளப்பரப்பை கொண்டவையாகும். எனினும் எங்களுக்கு தற்போது அவற்றைவிட சிறிய வீடுகளே வழங்கப்படுகின்றன | அத்தகைய சந்தர்ப்பங்களில் நகர அபிவிருத்தி அதிகாரசபை அரச மதிப்பீட்டாளரின் உதவியுடன் மதிப்பீட்டை மேற்கொண்டு உங்கள் வீட்டின் பெறுமதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் |

| | | |
|---|---|---|
| | | வீடுகளின் பெறுமதியை (450 சதுர அடி= ரூபா. 4 மில்லியன், 550 சதுர அடி= ரூபா. 7 மில்லியன்) விட அதிகமாயின் வித்தியாசமான தொகை இழப்பீடாக வழங்கப்படும். |
| | | |
| பாதிக்கப்பட்ட பெண் | சில பேரிற்கு மீள்குடியேற்றம் காரணமாக வாழ்வாதார இழப்பு ஏற்படலாம். முச்சக்கர வண்டி சாரதிகள் தமது வழக்கமான வாடிக்கையாளர்களை இழக்க கூடிய அதேவேளை தொழிலாளர்களும் தமது வருமானத்தை இழக்கலாம். | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு இது தொடர்பில் உள்ளூராட்சி சபையுடன் கலந்துரையாடி குறித்த முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு விசேட வீதியோர தரிப்பிட வசதிகளை ஏற்படுத்தும். அத்துடன் மீள்குடியேற்றப்படும் பகுதி தற்போதைய இடத்தில் இருந்து பாரிய தூரத்தில் இன்மையால் தமது வழமையான வேலையிடங்களுக்கு செல்வதில் பாரிய பிரச்சனை இருக்காது. அத்துடன் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மீளமைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். |
| | சில வீடுகளில் மூன்று குடும்பங்கள் ஒரு வீட்டில் வசிக்கின்றன. எனினும் புதிய இடத்திலும் அவ்வாறு வாழ்வது கடினமாகும். | வழமையாக தற்போது வாழும் வீட்டின் தளப்பரப்பு 700 சதுர அடியை விட அதிகமாயின் மாத்திரம் இரு வீடுகள் ஒதுக்கப்படும். இத்தகைய சந்தர்ப்பங்களில் நீங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மேன்முறையீட்டு சபையிடம் முறையிடலாம். எனினும் மேலதிக வீட்டை வழங்கும் தீர்மானம் தற்போது வசிக்கும் வீட்டுக்காணியின் விஸ்தீரணத்தை அடிப்படையாக கொண்டே தீர்மானிக்கப்படும். மேலும் மக்களின் குறைகளை தீர்ப்பதற்காக குறைதீர்க்கும் |

| | | |
|---|---|---|
| | | பொறிமுறையொன்றும் ஏற்படுத்தப்படும். இப்பொறிமுறை தொடர்பில் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் ஊழியர்கள் நீங்கள் புதிய வீடுகளுக்கு சென்றதன் பின்னர் அறிவுறுத்துவார்கள் |

ஒரு குடும்பத்தலைவரை தவிர ஏனையோர் அனைவரும் தற்காலிகமாக வாடகை வீட்டில் வசித்து பின்னர் இக்காணியில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்படும் வீட்டில் குடியேற விருப்பத்தை வெளியிட்டனர்.

குறிப்பு: மீள்குடியேற்ற திட்டமிடல் பொறிமுறையின் பிரகாரம் சட்டரீதியான வாடகை ஒப்பந்தங்களை ஏற்படுத்துவோருக்கே வாடகை கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். எனினும் நடைமுறையில் அத்தகைய ஒப்பந்தங்கள் குறைவு என்பதால் நகர அபிவிருத்தி அதிகாரசபை வாடகைக்கான கொடுப்பனவை மாத்திரம் வழங்கும். எனினும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான புனருத்தாரண உதவி வழங்கப்படமாட்டாது. இதேவேளை இடம்பெயர்ந்த மக்கள் வியாபார நடவடிக்கைகளை குறித்த இடத்தில் மேற்கொண்டிருந்தால் உரிமைத்தகுதி வார்ப்படத்திற்கு அமைவாக வருமான இழப்பு உதவியை பெற்றுக்கொள்ள முடியும்.

***படம்2: அருணோதய மாவத்தையின் தற்போதைய நிலை***



*படம்3: 11.10.2018 அன்று ஒபேசேகரபுரவில் இடம்பெற்ற பங்குதாரர்களின் கூட்டம்*



மேலுள்ள புகைப்படங்கள் மீள்குடியேற்றப்படவுள்ள குடும்பங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை காட்டுகிறது. முச்சக்கரவண்டி செலுத்தும் குடும்பத்தவர் ஒருவரும் இப்புகைப்படத்தில் உள்ளார். செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் ஆலோசகர் மற்றும் ஊழியர்களும் இப்புகைப்படத்தில் உள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுடனான நேரடி கலந்துரையாடலின் போது கணக்கெடுப்பாளர்கள் கணக்கெடுப்பு தொடர்பில் அவர்களுக்கு விளக்கமாக எடுத்து கூறினர். மக்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சனைகளில் முக்கியமானவை கீழே தரப்பட்டுள்ளன;

- தற்போதைய இடங்களை விட்டு வெளியேற கொடுக்கப்பட்டுள்ள காலப்பகுதி
- சிறிய குடும்பங்களுக்கான மேலதிக வீடுகள்
- முச்சக்கர வண்டிகளுக்கான தரிப்பிட வசதிகள்
- சிறுவர்களுக்கான விளையாட்டு பகுதி
- அடுக்குமாடி குடியிருப்புக்களுக்கான உறுதி
- 38 குடும்பங்களையும் குடியமர்த்தும் அடுக்குமாடி வீடுகள் மற்றும் அவற்றிற்கான தூரம்
- தவணைக்கொடுப்பனவை செலுத்த தவறும் போதான நிலை
- நெரிசலான சூழலில் பிள்ளைகளின் பாதுகாப்பு
- உள்ளூர் பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்க்க உதவி
- போதைப்பொருள் பாவனையை தடுத்தல்
- புதிய வீடுகளுக்கு அண்மையில் தொழில்வாய்ப்புக்களை தேடுதல்
- புதிய வீடுகளுக்கு பொருட்களை கொண்டு செல்லல்

## 3.2: பாதிக்கப்பட்ட சில மக்களின் நோக்கு

கொலன்னாவ சுதுனெலும்புரவில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் மக்களை சந்திப்பதற்கென ஆலோசகர் குழு விஜயமொன்றை மேற்கொண்டது. இங்கு வசிப்பவர்களில் பலர் மீதொட்டமுல்ல குப்பை மேட்டு சரிவினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்டோராவர். ஆலோசகர் குழு குறித்த குடியிருப்பின் மகளீர் ஒன்றியத்தை சந்தித்தெள. அதன்போது குறித்த ஒன்றிய உறுப்பினர்கள் தமது தற்போதைய வாழ்வு சூழல் தொடர்பில் தமது மகிழ்ச்சியை வெளியிட்டனர். தாம் தற்போது சுத்தமான சூழலில் வாழ்வதாகவும் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பதாக பெருமையுடம் சொல்லிக்கொள்ள முடிவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். பிள்ளைகள் தமது நண்பர்களை எவ்வித தடையுமின்றி வீடுகளுக்கு அழைத்து வர முடிகிறது. திருமணமான இளம் பெண்ணொருவர் கருத்து வெளியிடும் போது முச்சக்கர வண்டியை செலுத்தும் தமது கணவர் அண்மையில்

இரு வெளிநாட்டவரை தமது வீட்டு மலசலகூடத்தை பயன்படுத்த அழைத்து வந்ததாகவும் தெரிவித்தனர். தமது பழைய வாழ்விடத்தில் வாழும் போது தமது கணவர் வெளிநாட்டவரை அழைத்து வந்தால் தாம் முகம் கொடுத்திருக்க வேண்டிய அசௌகரியங்கள் தொடர்பாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் அவர்கள் பெண் பிள்ளைகள் போதிய பழக்கமின்றி மின் தூக்கியை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படல், சில ஆண்கள் வெற்றிலையை உண்டுவிட்டு ஆங்காங்கே எச்சில் துப்புதல் போன்ற பிரச்சனைகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டனர். குறித்த மகளீர் ஒன்றியம் சுற்றுச்சூழலை சுத்தமாக பேண வேண்டியது தொடர்பில் ஆண்களுக்கு அறிவுறுத்திவருவதாகவும் தெரிவித்தனர். இந்த கருத்துக்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபை/ நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம் ஆகியவற்றிற்கு எதிர்கால விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை திட்டமிட முக்கியமானதாக கருதப்படுகிறது.

***அட்டவணை3.2:திட்டமிட்ட ஆலோசனைகள்***

| செயற்பாடு | நோக்கம் | கால எல்லை | பொறுப்பான தரப்பு |
|---|---|---|---|
| I. பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளுக்கு விஜயம் செய்தல் | i. செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவினால் புதிய வீடுகளுக்கு மாற்றலாக மேற்கொண்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் அறிவித்தல் | இடம்மாறுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சந்தைப்படுத்தல் மற்றும் சமூக அலுவலகர்கள் |
| | ii. இடமாற்றத்திற்கான போக்குவரத்து கொடுப்பனவான ரூபா. 5000 ஐ பெற்றுள்ளமையை உறுதிப்படுத்தல் | இடம்மாறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சந்தைப்படுத்தல் மற்றும் சமூக அலுவலகர்கள் |
| | iii.பழைய வீடுகளில் உள்ள சிதைவுகளை புதிய வீட்டிற்கு கொண்டு செல்வதை தவிர்க்குமாறு ஆலோசனை வழங்கல் | இடம்மாறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சந்தைப்படுத்தல் மற்றும் சமூக அலுவலகர்கள் |
| | | | |
| 2. பாதிக்கப்பட்ட மக்கள் மீள குடியமர்த்தப்பட்டதன் பின்னர் அவர்களை பார்க்க விஜயம் செய்தல் | i. புதிய அடுக்குமாடி வீடுகளில் அவர்கள் ஏதாயினும் குறைபாடுகளை எதிர்நோக்குகிறார்களா என்பது தொடர்பில் விசாரித்தல் | மீள்குடியேற்றி இரு வாரங்களின் பின்னர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சந்தைப்படுத்தல் மற்றும் சமூக அலுவலகர்கள் |
| | ii. மீள்குடியேற்றத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிக்க பிரச்சனைகளை எதிர்நோக்குகிறார்களா என்பதை விசாரித்தல்<br><br>iii. மீள்குடியேற்றம் காரணமாக வீட்டுடனான வியாபார இழப்பினால் பாதிக்கப்பட்ட இருவரிடமும் அவர்கள் யாதாயினும் வேறு துறைகளில் பயிற்சி பெற விரும்புகிறார்களா என்பதை விசாரித்தல் | | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சந்தைப்படுத்தல் மற்றும் சமூக அலுவலகர்கள் |
| | ivஎதிர்நோக்கும் பிரச்சனைகளை முறையிட குறைதீர்க்கும் பொறிமுறையை பயன்படுத்தியுள்ளார்களா என்பதை அறிதல் | | |

| செயற்பாடு | நோக்கம் | கால எல்லை | பொறுப்பான தரப்பு |
|---|---|---|---|
| | | | |
| 3.வருமான மற்றும் வாழ்வாதார மீளமைப்பு திட்டமிடல் | இச்செயல்முறையில் பாதிக்கப்பட்ட மக்களை அதிக ஈடுபாட்டுடன் தொடர்புபடுத்தி அவர்களது முன்னுரிமைகள் தொடர்பில் கலந்துரையாடல் | வருமான மீளமைப்பு திட்டங்கள் தயாரிக்கப்படும் போது | ஆலோசகர் வருமான மீளமைப்பு/ செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சந்தைப்படுத்தல் மற்றும் சமூக அலுவலகர்கள் |
| 4. கீழ்வருவனவற்றை உருவாக்குவது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடல்<br><br>(a) சிக்கன மற்றும் கூட்டுறவு குழு<br><br>(b) பெண்கள் அபிவிருத்தி குழு<br><br>(c) சுற்றாடல் குழு<br><br>(d) சமூக நலன்புரி குழு | சேமிப்பினை ஊக்குவித்து குடியிருப்பாளர்களிடையே கூட்டுறவை வலுப்படுத்தல்<br><br>சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட ஊக்குவித்தல், குழந்தைகளின் நடவடிக்கைகள் தொடர்பில் அவதானமாக இருத்தல், பொது இடங்களை பராமரிக்க உதவுதல், கூட்டாக இணைந்து பால் நிலை செயற்ப்பாட்டு திட்டத்தை தயாரித்தல்<br><br>சுற்றாடலை பாதுகாக்கவும் பொது இடங்கள் மற்றும் வீடுகளை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேண ஊக்குவித்தல்<br><br>சுய உதவி நடவடிக்கைகள், வசிக்கும் மக்களுக்கு உதவக்கூடிய நலன்புரி நிகழ்ச்சி திட்டங்களை ஊக்குவித்தல் | மீள்குடியேற்றி இரு மாதங்களின் பின்னர் | ஆலோசகர் வருமான மீளமைப்பு/ செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சந்தைப்படுத்தல் மற்றும் சமூக அலுவலர்கள். |
| 5கண்காணிப்பு | நிரல் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள 3-4 ஆம் விடயங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களின் ஈடுபாடு தொடர்பில் கண்காணித்தல் | 12 மாதங்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர். செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சந்தைப்படுத்தல் மற்றும் சமூக அலுவலர்கள். |

3.3: **மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தை வெளிப்படுத்தல்**

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் மீள்குடியேற்ற செயற்பாட்டு திட்டம் அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வங்கியின் இணையத்தளங்களில் பிரசுரிக்கப்பட வேண்டும்

# அத்தியாயம் 4

# சட்டம் மற்றும் கொள்கை ஏற்பாடுகள்

### 4.1: காணி சுவீகரிப்பு சட்டம்

காணி சுவீகரிப்பானது 1950 ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பு சட்டம் மற்றும் அதன் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்படுகிறது (மீள் குடியேற்ற கொள்கை சட்டகத்தை விபரங்களுக்கு பார்வையிடவும்)

### 4.2: அரச சொத்துக்களை மீட்டெடுக்கும் சட்டம்

அரச சொத்துக்கள் 1979ஆம் ஆண்டு 7ஆம் இலக்க அரச சொத்துக்களை மீட்டெடுத்தல் சட்டத்தின் கீழ் மீட்டெடுக்கப்படுகின்றன (மீள் குடியேற்ற கொள்கை சட்டகத்தை விபரங்களுக்கு பார்வையிடவும்).

### 4.3:நஸ்ட ஈட்டு கொள்கை

a. காணியின் சந்தை பெறுமதி
b. காணியின் ஒரு பகுதி சுவீகரிக்கப்பட்டாலும் அதற்கான நஸ்ட ஈடு வழங்கப்படும் போது குறித்த காணி முழுமையாக விற்கப்பட்டால் கிடைக்க கூடிய சந்தை பெறுமதியை அடிப்படையாக கொண்டு வழங்கப்பட வேண்டும்
c. கட்டமைப்புக்களுக்கான மீளப்பொருத்தும் செலவை கணிக்கும் போது பெறுமான தேய்வு மற்றும் சிதைவுகளின் பெறுமதி ஆகியவற்றை கருத்தில் கொள்ளாது மேற்கொள்ள வேண்டும்
d. ஏனைய இழப்புக்களுக்கான நஸ்ட ஈடு தொடர்பான விபரங்கள் மீள்குடியேற்ற திட்டமிடல் கொள்கை சட்டகத்தில் உள்ள உரிமைத்தகுதி வார்ப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் வருமான இழப்பிற்கான கொடுப்பனவு ஆகியன 2008ஆம் ஆண்டு ஒழுங்குவிதிகளுக்கமைவாக வழங்கப்படும்.

### 4.4: தேசிய கட்டாய மீள்குடியேற்ற கொள்கை

தேசிய கட்டாய மீள்குடியேற்ற கொள்கை நஸ்ட ஈடு தொடர்பாக காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்கிறது (மீள் குடியேற்ற கொள்கை சட்டகத்தை விபரங்களுக்கு பார்வையிடவும்).

### 4.5:தகுதிபெறுவதற்கானகால எல்லை

காணி உறுதி அற்றோர்/சட்டவிரோத குடியேற்றகாரர்கள் ஆகியோர் இத்திட்டத்திற்கு தகுதி பெறுவதற்கான கால எல்லை மீள்குடியேற்ற ஆரம்ப திகதி/ சனத்தொகை கணிப்பீட்டு திகதி (13 ஐப்பசி 2019) ஆகும். தற்போது பின்பற்றப்படும் 2009 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவேட்டினை கருத்தில் கொள்ளும் நடைமுறை இச்சந்தர்ப்பத்தில் பொருந்தாது. அனேக குடும்பங்கள் அண்மைக்காலத்திலேயே இப்பகுதியில் குடியேறியுள்ளன. இத்திட்டத்திற்கு தகுதி பெறுவதற்கான கால எல்லையின் பின்னர் குறித்த இடத்தில் குடியேறுபவர்கள் இத்திட்டத்திற்கு தகுதி பெறமாட்டார்கள். இத்திகதியின் பின்னர் உருவாக்கப்படும் எவ்வித கட்டிடங்களுக்கும் அல்லது மரங்களுக்கும் நஸ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.

# அத்தியாயம் 5

# நுழைவுத்தகுதி, உரிமைத்தகுதி மற்றும் உதவி

ஒபேசேகரபுரவில் இருந்து மீள்குடியேற்றப்படவுள்ள அனைத்து குடும்பங்களும் அரச காணியில் எவ்வித அனுமதிகளுமின்றி வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் ஆவர். எனவே காணி இழப்பு தொடர்பில் வழங்கப்படும் நஸ்ட ஈட்டை பெற அவர்கள் தகுதியற்றவர்கள். எனினும் அவர்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்படும் அடுக்குமாடி வீட்டை பெற விரும்பாத பட்சத்தில் அவர்களுக்கு கட்டிடங்களின் இழப்பிற்கான மீளமைத்தல் செலவு நஸ்ட ஈடாக வழங்கப்படும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வீடுகளின் ஒரு வகை 550 சதுர அடியை தளப்பரப்பாக கொண்டுள்ளன. இவற்றின் பெறுமதியான 7 மில்லியனை விட பாதிக்கப்பட்டோர் வாழும் வீட்டு பெறுமதி அதிகமாயின் குறித்த வித்தியாசமான பெறுமதி அவர்களுக்கு இழப்பீடாக வழங்கப்படும். இம்மதிப்பீடு அரச விலைமதிப்பு திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தற்போதைய கொள்கையின் படி மீள்குடியமர்த்தப்படும் மக்கள் 550 சதுர அடி தளப்பரப்பை கொண்ட வீடுகளிலேயே மீள்குடியேற்றப்படுகின்றனர்.

மலசல கூட வசதிகள், மின்சாரம் மற்றும் நீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்படும்.

### 5.1: அடுக்குமாடி குடியிருப்பு தொகுதிகளில் உள்ள அடிப்படை வசதிகள்

i. சனசமூக மண்டபம்
ii. முன்பள்ளிகள் மற்றும் நாளாந்த பராமரிப்பு நிலையங்கள்
iii. கூட்டு ஆதன முகாமைத்துவ அலுவலகம்
iv. ஆரம்ப பாடசாலைகள் (பிரதேசத்தின் அரச பாடசாலைகளுக்கு பிரவேசிப்பதற்கான வசதிகளை வழங்குதல்)
 சிறுவர்கள் விளையாடுவதற்கான திறந்த இடவசதி
v. வாகன தரிப்பிட வசதி
vi. உள்ளூராட்சி அதிகாரசபைகளினால் கழிவகற்றல்

மீள்புதுப்பிக்கத்தக்க நகர செயற்திட்டத்தின் கீழ் சியபத் செவனவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளில் ஒபேசேகரபுர பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட வீட்டு அலகுகளைச் சேர்ந்தவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போதுள்ள தொடர்மாடி வீடமைப்புத் தொகுதிகளில் மகளிருக்கு பொது அறைகள் மற்றும் ஆரம்ப பாடசாலைகள் காணப்படுவதில்லை. எனினும் கீழ் தளத்தில் காணப்படும் சனசமூக நிலையத்தை பல்வேறு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்த முடியும். மேலும், செயற்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளை கிட்டிய கல்வி நிலையங்களில் சேர்ப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தொடர்ந்தேச்சையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இடம்பெயரும் மக்கள் கீழ்வரும் கொடுப்பனவுகள் மற்றும் உரிமைகளுக்கு தகுதி பெறுகின்றனர்;

*அட்டவணை 5. 1: கொடுப்பனவுகள் மற்றும் உரிமைத்தகுதி*

| இழப்பீட்டின் வகை | பாதிக்கப்பட்ட தரப்பினர் | உரிமைத்தகுதி | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| | | | |
| 1: தனியார் குடியிருப்பின் நிரந்தர இழப்பு | அரச காணியில் வசிக்கும் ஆக்கிரமிப்பாளர்கள் | மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு உதவி | 1.1 550 சதுர அடி தளப்பரப்பை கொண்ட அடுக்குமாடி வீடொன்றை வழங்குதல். இவ்வீட்டினை பெறுவதற்கென பயனாளர் கூட்டு ஆதன நிதியத்திற்கான பங்களிப்பு, மாதாந்த பராமரிப்பு செலவிற்கான கொடுப்பனவு மற்றும் மாதாந்த குத்தகை தவணை கொடுப்பனவான ரூபா. 3000 ஆகியவற்றை செலுத்த வேண்டும். **(ஒபேசேகரபுரவில் வசிக்கும் பாதிக்கப்பட்ட 38 குடும்பங்கள்)** 1.2 இடம் பெயருவதற்கான (போக்குவரத்து) செலவு கொடுப்பனவு ரூபா. 5000 **(ஒபேசேகரபுரவில் வசிக்கும் பாதிக்கப்பட்ட 38 குடும்பங்கள்)** 1.3 கட்டிட உடைப்பின் போது அஸ்பெஸ்டஸ் தகடுகள் தவிர்ந்த முக்கிய பொருட்களை அழிவில் இருந்து பாதுகாக்கும் உரிமை எனினும் குறித்த சிதைவு பொருட்களை புதிய வீடுகளுக்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது |
| 2. | பாதிக்கப்பட்ட மக்களில் ஒபேசேகரபுரவிற்கு மீண்டும் வந்து குடியேற விரும்புவோர் | புதிய அடுக்குமாடி வீட்டிற்கு | |

| இழப்பீட்டின் வகை | பாதிக்கப்பட்ட தரப்பினர் | உரிமைத்தகுதி | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாடகை கொடுப்பனவு | | திரும்பும் வரை வாடகை கொடுப்பனவு வழங்கப்படும் | **(ஒபேசேகரபுரவில் வசிக்கும் பாதிக்கப்பட்ட 38 குடும்பங்கள்)** |
| 3. வாடகை குடியிருப்பின் இழப்பு | திருமணமாகாத பெண்ணொருவரின் வாடகை குடியிருப்பின் இழப்பு | பண உதவி | 2.1 புதிய வீட்டில் குடியேறும் வரை மாதாந்தம் ரூபா. 15,000 வாடகை கொடுப்பனவாக வழங்கப்படும் **(ஒபேசேகரபுர அருணோதய மாவத்தையில் நிர்மாணிக்கப்படும் அடுக்குமாடி குடியிருப்பில் மீள குடியேற விருப்பம் தெரிவித்த 4 குடும்பங்கள்)**<br><br>3.1 மீள்குடியேற்றம் தொடர்பில் 3 மாதத்திற்கு முன்னரான அறிவிப்பு<br><br>3.2 மாற்று வாடகைக்கான இடத்தை பெற நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்கை பிரகாரம் மாதாந்தம் ரூபா. 8000 வீதம் ஆகக்கூடியதாக ஆறு மாதங்களுக்கு வாடகை கொடுப்பனவு உதவி வழங்கப்படும்<br><br>3.3 போக்குவரத்து கொடுப்பனவு ரூபா. 5000 |
| 4. மீள்குடியேற்றம் | தாக்கவிளைவிற்குட்படக்கூடியசுயதொழிலில்ஈடுபடும்பெண்கள்தலைமையிலானகுடும்பங்கள் | புனர்வாழ்வு உதவி | **வாடகைக்கு குடியிருப்பவருக்கோ அல்லது அப்பகுதியில் வசிக்காத வீட்டு உரிமையாளருக்கோ மாற்று வீடுகள் வழங்கப்பட மாட்டாது** |

| இழப்பீட்டின் வகை | பாதிக்கப்பட்ட தரப்பினர் | உரிமைத்தகுதி | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| காரண மாக ஏற்படும் வாழ்வாதார இழப்பு | | | 4.1 பயிற்சி, கடன் பெறக்கூடிய வசதி மற்றும் திறன் பயிற்சி ஆகியன பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் உள்ளிட்ட தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை பலப்படுத்த வழங்கப்படும்<br><br>4.2 செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய குடும்பங்களிற்கு சமுர்த்தி கொடுப்பனவு, வயது முதிர்ந்தவர்களுக்கான கொடுப்பனவு, சத்துணவு பை, வறுமை உதவி உள்ளிட்ட அரசாங்கத்தின் நலன்புரி உதவிகளை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். குறித்த குடும்பங்கள் தற்போது அவ்வுதவிகளை பெறாவிட்டால் உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டும்.<br><br>4.3 இச் செயற் திட்டத்தின் கீழான சுத்தப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் குடிசார் நிர்மாண நடவடிக்கைகளில் வேலைவாய்ப்புக்கள்<br><br>ஒபேசேகரபுரவில் வசிக்கும் தாக்கவிளைவிற்கு உள்ளாக கூடிய 4 |

| இழப்பீட்டின் வகை | பாதிக்கப்பட்ட தரப்பினர் | உரிமைத்தகுதி | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| | | | குடும்பங்கள் |

*மூலம்: மீள்குடியேற்ற கொள்கை சட்டகம்-நகர அபிவிருத்தி அதிகாரசபை*

## 5.2: பல குடும்பங்களை கொண்ட வீடுகளுக்கு மேலதிக வீடுகளை ஒதுக்குதல்

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்கையின் படி ஒபேசேகரபுரவில் இருந்து இடம்பெயரும் குடும்பமொன்றிற்கு 550 சதுர அடி தளப்பரப்பை கொண்ட வீடொன்று ஒதுக்கப்படும். பாதிக்கப்பட்ட நபரின் தற்போதைய வீட்டின் தளப்பரப்பு 700 சதுர அடிக்கு அதிகம் மற்றும் குடும்ப அளவும் பெரிதாயின் குறித்த நபர் நகர அபிவிருத்தி அதிகார்சபையிடம் மேன்முறையீட்டை மேற்கொள்ளலாம். இவ்விடயம் தொடர்பில் செயற்திட்ட பணிப்பாளர், பணிப்பாளர்-காணி மற்றும் பணிப்பாளர்-சட்டம் ஆகியோர்

தலைமையிலான குழு விசாரித்து மேலதிக வீடொன்றை ஒதுக்குவது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும். எனினும் குறித்த பயனாளி இவ்வீட்டிற்கும் ஏனைய வீடுகளை போன்ற கட்டணங்களை செலுத்த வேண்டும். இதேவேளை கைவிடப்படும் வீட்டின் பெறுமதி ரூபா. 7 மில்லியனை விட அதிகமாயின் குறித்த வித்தியாச பெறுமதி அரச விலைமதிப்பீட்டாளரின் ஆலோசனைக்கமைய இழப்பீடாக வழங்கப்படும். இவ்விடயம் தொடர்பில் மீள்குடியேற்ற திட்டமிடல் சட்டகம் எவ்வித தளர்வு தன்மையினையும் காட்டவில்லை. மேலதிக விபரங்களுக்கு குறைதீர்க்கும் பொறிமுறையை பார்க்கவும்.

## 5.3: மீள்குடியேற்றத்திற்கு முன்னரான உதவிகள்

மீள்குடியேற்றத்திற்கு முன்னர் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு மீள்குடியேற்றத்திற்கென இனம்காணப்பட்ட குடும்பங்களுக்கு கீழ்வரும் உதவிகளை வழங்கும்:

*அட்டவணை 5. 2: மீள்குடியேற்றத்திற்கு முன்னரான உதவி*

| செயற்பாடு | பொறுப்பான தரப்பு |
|---|---|
| பாதிக்கப்பட்ட மக்களுக்கான தகவலை வழங்க ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக அலுவலகர் |
| பாதிக்கப்பட்ட மக்கள் மீள்குடியேற்றப்படும் வீடுகள் தொடர்பான தகவல் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் திட்டமிடல் அலுவலகர் |
| நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம்/நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளுடன் பாதிக்கப்பட்ட மக்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு விஜயம் செய்தல் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக அலுவலகர் |
| நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான அடுக்குமாடி வீட்டு தொகுதியில் வீடொன்றை ஒதுக்குதல் (மீள்குடியேற்ற கொள்கை சட்டகத்தை பார்வையிடவும்) | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் மேலதிக செயற்த்திட்ட பணிப்பாளர் திட்டமிடல் |
| சமூக அலுவலகர்/அமைவிட முகாமையாளர்- செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு- நகர அபிவிருத்தி அதிகாரசபை/நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் செயற்த்திட்ட பணிப்பாளர் |
| இடம்பெயர 14 நாட்களுக்கு முன்னர் வீடு கையளிக்கப்படும் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் செயற்த்திட்ட பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைய அமைவிட முகாமையாளர் |
| போக்குவரத்து கொடுப்பனவு வழங்கப்படும் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர்- நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம்/நகர அபிவிருத்தி அதிகாரசபை |
| பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அடுக்குமாடி வீடுகள் ஒதுக்கப்படுவதற்கு முன்னர் மீள்குடியேற்றப்படுவார்களாயின் அவர்களுக்கு மாற்றீடான வாடகை தங்குமிட வசதிகளை பெற கொடுப்பனவு வழங்கப்படும். இக்கொடுப்பனவு தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒவ்வொரு சந்தர்ப்பத்தினையும் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்படும் அல்லது மாதாந்தம் ரூபா. 8,000 வழங்கப்படும். | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர்- நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம்/நகர அபிவிருத்தி அதிகாரசபை |

| செயற்பாடு | பொறுப்பான தரப்பு |
|---|---|
| இவை இரண்டில் எது அதிகமோ அதுவே உதவு தொகையாக வழங்கப்படும் | |
| அங்கவீனர்கள் மற்றும் தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய மக்களுக்கான விசேட நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம்/நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சமூக அபிவிருத்தி அலுவலகர், சமூக அலுவலகர் மற்றும் காணி அலுவலகர் |

*மூலம்: மீள்குடியேற்ற கொள்கை சட்டகம்-நகர அபிவிருத்தி அதிகாரசபை*

## 5.4 மீள்குடியேற்றத்தின் பின்னரான உதவிகள்

பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றியதன் பின்னர் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவினால் அவர்களது சமூக மற்றும் வருமான மட்டங்களை மேம்படுத்த கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்;

*அட்டவணை 5. 3: மீள்குடியேற்றத்தின் பின்னரான உதவிகள்*

| செயற்பாடு | பொறுப்பான தரப்பு |
|---|---|
| பாதிக்கப்பட்ட மக்கள் புதிய வீடுகளுக்கு குடிபுகுந்த பின்னர் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு அவர்கள் புதிய சூழலுக்கு தம்மை ஒத்திசைவாக்கு கொள்ளும் நிலை மற்றும் எழக்கூடிய பிரச்சனைகள் தொடர்பில் சில மாதஙகளுக்கு கண்காணிக்கும். பெரும்பாலான மக்கள் மின் தூக்கிகள் மற்றும் சமூக மண்டபங்கள் உள்ளிட்ட பொதுவான வளங்களை பயன்படுத்தல் தொடர்பில் பரீட்சயம் அற்றவர்கள் என்பதால் இக்கண்காணிப்பு அவசியமாகும். | சமூக அலுவலகர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் செயற்த்திட்ட பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைய அமைவிட முகாமையாளர் |
| கீழ்க்காணும் குழுக்கள் அமைக்கப்பட்டு அடுக்குமாடி குடியிருப்புக்களில் வாழும் மக்களின் கூட்டுறவு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.பெண்கள் அபிவிருத்தி குழு, சுற்றாடல் குழு, சமூக நலன்புரி குழு, சிக்கனம் மற்றும் கூட்டுறவு குழு,கூட்டு ஆதன முகாமைத்துவ குழு | சமூக அலுவலகர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் செயற்த்திட்ட பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைய அமைவிட முகாமையாளர்<br>கூட்டு ஆதன முகாமைத்துவ குழு சட்ட பிரச்சனைகள் தீர்க்கப்பட்டவுடன் உருவாக்கப்படும் |
| பாதிக்கப்பட்ட மக்களுக்கான வருமான இழப்பினை மீளமைக்க நிதி உதவி, திறன் விருத்தி, அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்த ஆலோசனை சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வருமான மீளமைப்பு நிகழ்ச்சி திட்டம் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக மற்றும் திட்டமிடல் அலுவலகர் |
| பாதிக்கப்பட்ட மக்கள் புதிய இடங்களில் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிக்க உதவி வழங்குதல் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக அலுவலகர் |
| பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசியமாயின் சிறுவர் பராமரிப்பு மற்றும் விருத்தி நிலையங்களை அமைத்தல் | இத்தகைய நிகழ்ச்சிகள் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட அடுக்குமாடி கட்டிடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்/நிபுணர் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.<br><br>அமைவிட அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு தினசரி பராமரிப்பு நிலையங்களும் தொழிற்படுகின்றன. 50 சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இதற்கென உள்வாங்கப்பட்டுள்ளனர்.<br><br>இந்த நடவடிக்கைகள் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டி வங்கியின் |
| இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான சுயதொழில் தொடர்பான பயிற்சி | |
| விசேடமாக குழந்தைகள் மற்றும் இளம் தாய்மார்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்க நிகழ்ச்சி திட்டங்கள் | |
| போதைப்பொருளுக்கு அடிமையாவதை தடுக்கும் நிகழ்ச்சி திட்டங்கள் | |
| விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் அழகியல் உள்ளிட்ட பாடங்களுக்கான பிரத்தியேக வகுப்புக்களை உருவாக்குதல் | |
| பாடசாலைகளை விட்டு இடையில் விலகியோருக்கு உதவி வழங்கல்<br><br>கல்விசார் ஆலோசனை சேவைகள்<br>நலன்புரி நடவடிக்கைகள்<br>சுயதொழில் பயிற்சி<br>பொதுவான பிரச்சனைகள் தொடர்பில் ஆராய குழுக்களை அமைத்தல்<br>விளையாட்டு மற்றும் அழகியல் துறைகளில் பிள்ளைகளின் திறனை | |

| செயற்பாடு | பொறுப்பான தரப்பு |
|---|---|
| விருத்தி செய்ய நிகழ்ச்சிகளை நடாத்துதல்.தமிழ் சிங்கள புத்தாண்டு, ராமஸான் மற்றும் தீபாவளி விழா நடாத்தப்படும் காலப்பகுதியை ஏற்பாடு செய்தல்.தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளினால் 2018 ஒக்ரோபர் 01 ஆந் திகதி அதாவது உலக சிறுவர் தினத்தில் பிஷொப் கல்லூரியில் மேடை நாடகம் ஒன்று காண்பிக்கப்பட்டதுடன், அதற்கான பயிற்சி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆலோசனைப் பிரிவினால் நடாத்தப்பட்டது.<br><br>தேசிய அடையாள அட்டை, பிறப்பு சான்றிதழ் உள்ளிட்டவற்றை கொண்டிராதோருக்கு அவற்றை பெற்றுக்கொள்ள நடமாடும் சேவைகளை நடாத்துதல்<br><br>மருத்துவ முகாம்கள் மற்றும் இலவச மூக்கு கண்ணாடி வழங்கல் தொடர்பாக அரச சுகாதார சேவைகளுடன் ஒருங்கிணைத்தல். தேவையானோருக்கு அவற்றை இலவசமாக வழங்கும் பொருட்டு மருத்துவ முகாம்களை நடாத்துதல். | செயற்த்திட்ட கூறு 3 இற்கமைவாக குறிப்பிடத்தக்களவு காலப்பகுதிக்கு மேற்கொள்ளப்பட வேண்டும் |

### 5.5. சுதேச மக்கள்

செயற்த்திட்டத்தின் சமூக அலுவலகர்கள் சுதேச மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு அப்பகுதிக்கு புதிதாக வரும் மக்களுடன் இணைந்து செயற்படுமாறு உற்சாகப்படுத்துவர். இச்செயற்த்திட்டத்தின் கீழ் மீள்குடியேற்றத்தின் பின்னர் நடைமுறைப்படுத்தப்படும் நடவடிக்கைகள் சுதேச மக்களிற்கும் நன்மைகளை உருவாக்கும். குறித்த இடங்களுக்கு மேலும் மக்கள் குடியமரும் போது அப்பகுதி மக்களின் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுடனான பேரம்பேசும் சக்தி அதிகரிக்கும். இதன்மூலம் சமூகத்திற்கு வேண்டிய நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

### 5.6: வீடுகளை பெற்றுக்கொள்பவர்களின் கடப்பாடு

i. நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் மேற்கொள்ளப்பட்ட வாடகை கொள்வனவு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே வீடுகள் வழங்கப்படும்
ii. கூட்டு ஆதன முகாமைத்துவ குழு அடுக்குமாடி கட்டிட வீடுகளின் முகாமைத்துவ மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்படும். இக்குழுவில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பிரேரிக்கப்படும் அதிகாரிகளும் குடியிருப்பாளர்களின் பிரதிநிதிகளும் காணப்படுவர்.
iii. சிக்கன மற்றும் கூட்டுறவு குழுக்கள் உருவாக்கப்பட்டு கூட்டுறவு திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.
iv. பெண்கள் அபிவிருத்தி குழு மற்றும் சுற்றாடல் குழு ஆகியன ஏற்படுத்தப்பட வேண்டும்
v. சமூக நலன்புரி குழு (இதன் உறுப்பினர்கள் மற்றும் நோக்கம் தொடர்பான விபரங்கள் மீள்குடியேற்ற கொள்கை சட்டகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது).
vi. பராமரிப்பிற்கென சேகரிக்கப்படும் ஆரம்ப கட்டணங்கள் கூட்டு ஆதன முகாமைத்துவ குழுவினால் கையாளப்படும்.

# அத்தியாயம் 6

# பால்நிலை செயற்பாட்டுத்திட்டம்

## 6.1: பால்நிலை தொடர்பான தகவல் திரட்டு

பாதிக்கப்பட்ட மக்களில் 20 குடும்ப தலைவிகள் உள்ளிட்ட 73 பெண்கள் காணப்படுகின்றனர். இப்பகுதியில் 38 திருமணமான பெண்களும் ஒரு விதவை பெண்ணும் காணப்படுகின்றனர். 20 பெண்கள் 18-30 வரையிலான வயதெல்லையில் காணப்படுகின்ற அதேவேளை 7 பெண்கள் 41-60 வரையிலான வயதெல்லையில் காணப்படுகின்றனர். மேலும் 61 வயதை தாண்டிய 7 பெண்களும் காணப்படுகின்றனர். குடும்பதலைவிகளான 7 பெண்களில் 7 பேர் 31-40 வயதெல்லையிலும் மேலும் 7 பேர் 41-60 வயதெல்லையிலும் மேலும் 5 பேர் 61 வயதிற்கு மேலும் காணப்படுகின்றனர்.

73 பெண்களில் 31 பேர் (43%) தரம் 10 வரை கல்வி கற்றுள்ள அதேவேலை 12 பேர் (16%) க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியெய்தியுள்ளனர். 6 பேர் மட்டுமே க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்துள்ள அதேவேளை ஒரு பெண் பட்டதாரியும் இப்பகுதியில் உள்ளார். 21 பெண்கள் முழுநேர பணியாளர்களாக பணியாற்றுகின்ற அதேவேளை 10 பேர் ரூபா. 25,000-50,000 வரையில் மாதாந்தம் வருமானமீட்டுகின்றனர். மேலும் 11 பேர் மாதாந்தம் ரூபா. 25,000 இற்கும் குறைவான வருமானத்தை ஈட்டுகின்ற அதேவேளை ஒரு பெண் ரூபா. 75,000-100,000 வரையியான மாதாந்த வருமானத்தை ஈட்டுகின்றார்.

## 6.2:பால்நிலை பாதிப்புக்கள்

பாதிக்கப்பட்ட 38 குடும்பங்களுக்கு தற்போதைய வீடுகளை விட தரமான வீடுகள் வழங்கப்படும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் வீடுகளுக்கான உறுதி கணவன் மற்றும் மனைவி இருவரின் பெயருக்கும் வழங்கப்படும். தமது வீட்டை வாடகைக்கு கொடுத்து அப்பகுதியில் வசிக்காத நபருக்கு புதிய வீடு வழங்கப்படாத போதும் பழைய வீட்டிற்கான மீளமைக்கும் செலவு மற்றும் உரிமைத்தகுதி வார்ப்படத்தின் அடிப்படையிலான ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும். இரு பெண்களின் வாழ்வாதாரம் இச்செயற்த்திட்டம் காரணமாக நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளது.

வாடகை வீட்டில் வசிக்கும் திருமணமாகாத பெண் தமது வருமானம் தொடர்பான தகவலை வெளிப்படுத்த மறுத்த நிலையில் தற்போது அவர் வசிக்கும் கட்டிடம் அகற்றப்பட முன்னர் அவர் மாற்று வசிப்பிடமொன்றை தேடிக்கொள்ள வேண்டும். கொள்கையின் அடிப்படையில் வாடகை வீட்டின் உரிமையாளருக்கு மீளப்பொருத்தற் செலவும் வாடகை குடியிருப்பாளருக்கு 6 மாத வாடகை கொடுப்பனவும் வழங்கப்படும். அத்துடன் மூன்று மாதத்திற்கு வெளியேற்ற அறிவிப்பு வழங்கப்படுவதுடன் போக்குவரத்து கொடுப்பனவாக ரூபா. 5000 வழங்கப்படும். கணக்கெடுப்பாளரினால் குறித்த பெண் ஏன் தமது வருமானம் தொடர்பான தகவலை வெளியிடவில்லை என சுற்றுச்சூழலில் விசாரித்த போது சில நாட்களுக்கு முன்னர் அப்பகுதியில் வாடகைக்கு வசித்த குடும்பமொன்று இவ்வாறான மூன்றாம் தரப்பினரின் கருத்தாய்வில் பங்கேற்றமைக்காக பலவந்தமாக வீட்டில் இருந்து உரிமையாளரால் வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் தற்போது

ஒபேசேகரபுர அருணோதய மாவத்தையில் உள்ள சன சமூக நிலையத்தில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

புதிய இடத்திற்கு செல்லும் போது பெண்கள் மற்றும் வயதுக்கு வந்த குழந்தைகள் இனம் தெரியாதோரின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படலாம். எனவே அவர்களை போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் உள்ளிட்டவர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும். புதிய இடங்களில் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதிக்கும் போதும் பிரச்சனைகளை எதிர்நோக்கலாம். இவ்விடயத்தில் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு இனம் தெரியாதோரிடமிருந்து எவ்வாறு தம்மை பாதுகாத்து கொள்வது என்பது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களை மேற்கொள்ளும். அத்துடன் அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் அமைக்கப்படும் பொலீஸ் காவலரணும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவி செய்யும். குறித்த குடியிருப்பு பகுதியில் அமைக்கப்படும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ பிரிவு உரிய அரச நிறுவனங்களுடன் இணைந்து மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்கும்.

### 6.3: சட்டரீதியான பாதுகாப்பு

இலங்கையின் சட்டங்களின் பிரகாரம் 13 ஆண்டுகள் கல்வி கற்க வேண்டுமென்பது கட்டாயமாகும். அத்துடன் சிறுவர்களை வேலைக்கமர்த்துவது சட்டப்படியான குற்றமாகும். குழந்தைகள் சார்ந்த பிரச்சனைகளை கண்காணிக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் நாட்டில் காணப்படுகின்றன. ஒவ்வொரு பொலீஸ் நிலையத்திலும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை தடுக்க என விசேட பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு ஒரு பெண் பொலீஸ் பரிசோதகரின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான சாசனத்தின் படி தயாரிக்கப்பட்ட தேசிய பெண்கள் உரிமைக்கான சாசனம் பெண்களுக்கெதிரான வன்முறைகளை முறியடிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென சுட்டிக்காட்டுகின்றது.

### 6.4: செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் பங்கு

உரிமைத்தகுதி வார்ப்படத்திற்கு அமைவாக பெண்களுக்கு அவர்களது வருமானத்தை உயர்த்தி கொள்வதற்கான நிதியுதவி வழங்கப்படும். பெண்கள் அபிவிருத்து குழுக்கள் ஊடாக செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு பெண்களுக்கான வருமானத்தை அதிகரிக்க அவசியமான திறன் விருத்தி பயிற்சிகளை ஒழுங்குபடுத்தும். இப்பயிற்சிகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆலோசகர்களால் மேற்கொள்ளப்படும். இந்த ஆலோசகர் குழுவில் பலதரப்பட்ட பிரிவுகளை சேர்ந்த 50 நிபுணர்கள் காணப்படுகின்றனர். இப்பயிற்சிகள் மூலம் பெண்கள் மற்றும் வயது வந்தோரின் உள்ளார்ந்த திறமைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இப்பயிற்சியினுள் வருமானத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள், இசை மற்றும் நடனம், தகவல் தொழில்நுட்பம் சார் பயிற்சிகள் உள்ளடக்கப்படும். தையல், அழகுக்கலை, செயற்கை பூக்கள் தயாரித்தல், காகித உறைகள் தயாரித்தல், ஊது பத்திகள் தயாரித்தல் மற்றும் இனிப்பு பண்டங்கள் தயாரித்தல் போன்ற வீட்டில் இருந்து வருமானமீட்டக்கூடிய செயற்பாடுகள் தொடர்பிலும் பயிற்சி வழங்கப்படும்.

இத்தகைய பயிற்சிகள் வருமான மீளமைப்பு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படுவதுடன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் கடனின் கீழான செயற்த்திட்ட கூறு 3 இன் கீழ் வழங்கப்படும்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசகர் குழுவினால் இந்த நிகழ்ச்சி திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை ஒபேசேகரபுர அருணோதய மாவத்தையில் உள்ள அடுக்குமாடி வீட்டு தொகுதியில் குடியேறவுள்ள பெண்களுக்கு நன்மை பயக்கும் (அட்டவணை 5-3 ஐ பார்க்கவும்).

செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவை சேர்ந்த சமூக அலுவலகர் பயிற்சிகளை வழங்கும் ஆலோசகர் குழுவுடன் இணைந்து செயற்படுவார். செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு தகவல்களை பகிர்ந்து கொள்ளவும், கல்வி மற்றும் தொடர்பாடலை மேம்படுத்தவுமென பெண்கள் அபிவிருத்தி குழுக்களை அமைக்கும் (அட்டவணை 5.3 ஐ பார்க்க).

பயிற்சிகள் அனைத்தும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையிலான ஆலோசகர் குழுவால் மேற்கொள்ளப்படும். செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவை சேர்ந்த சமூக அலுவலகர் பயிற்சிகளை வழங்கும் இந்த ஆலோசகர் குழுவுடன் இணைந்து செயற்படுவார்.

"எண்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்படும் கடன் வசதிகளை பெற பெண்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரருடன் இணைந்து நிர்மாண கட்டத்தின் போது பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய வேலைவாய்ப்புக்களை வழங்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அரசாங்கத்தின் நுண்கடன் திட்டங்கள், கூட்டுறவு கடன் அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக பெண்களுக்கு நன்மைகள் கிடைக்கும். பெண்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பில் குறித்த பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரது உதவியை செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக அலுவலகர் பெற்றுக்கொள்வார். இதன் மூலம் பிரதேச செயலகத்தால் பெண்களுக்கென குறிப்பாக கர்ப்பிணி பெண்களுக்கென மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கும் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

ஏனைய மீள்குடியேற்ற திட்டங்களில் மக்கள் பரந்து வாழ்வது போலல்லாது இத்திட்டத்தில் அடுக்குமாடி குடியிருப்பிற்குள் தமது சமூக உறவுகளை தொடர்ந்து பேண வேண்டிய நிலையில் மீள்குடியேற்றப்படும் மக்கள் காணப்படுகின்றனர். எனினும் இவ்வாறான சூழ்நிலையில் பெண்களை கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது இலகுவாகும். பெண்கள் அவசர நிலைகள் அல்லது பொது செயற்பாடுகளில் ஒருவரையொருவர் சார்ந்து காணப்படுகின்றனர்.

## 6.5விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள்

***அட்டவணை 6.1: விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள்***

| | |
|---|---|
| அடுக்குமாடி குடியிருப்புக்களில் காணப்படும் வசதிகள் சில பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதியவை என்பதால் அவற்றை பயன்படுத்துவது தொடர்பிலான விழிப்புணர்வு மற்று பயிற்சி திட்டங்கள் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக அலுவலகர் |
| பொது வசதிகளை சுத்தமாக பராமரித்தல் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக அலுவலகர் மற்றும் அமைவிட முகாமையாளர் |
| சுகாதார பிரச்சனைகள் தொடர்பிலான விழிப்புணர்வு | பொது சுகாதார உத்தியோகத்தரின் உதவியுடன் திட்டமிடல் அலுவலகர், அமைவிட முகாமையாளர் |
| சுதேச மக்களுடன் உரிய உறவினை பேணும் பொருட்டு பயிற்சியினை வழங்கல் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக அலுவலகர் மற்றும் அமைவிட முகாமையாளர் |
| போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் இனம் தெரியாதோர் ஆகியோரிடமிருந்து பாதுகாப்பது தொடர்பான பயிற்சி | பொலீஸாரின் உதவியுடன் அமைவிட முகாமையாளர் |

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டின் போது பால் சார்ந்த பிரச்சனைகள் கண்காணிக்கப்பட்டு, மதிப்பிடப்பட்டு அறிக்கைப்படுத்தப்படும். இவை எதிர்கால செயல்திட்டங்களுக்கான பால்நிலை செயற்பாட்டு திட்டங்களை தயாரிக்க உதவும்.

# அத்தியாயம் 7
# குறைதீர்க்கும் பொறிமுறை

எந்தவொரு மீள்குடியேற்ற திட்டங்களும் நடைமுறைப்படுத்தும் நிறுவனத்திற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையே பிரச்சனைகளின்றி நடைமுறைப்படுத்தப்படமாட்டாது. மீள்குடியேற்றம் மூலம் கிடைக்க கூடிய நன்மைகளுக்கான உரிமை தகுதி, இழப்பீடு தொடர்பில் திருப்தியின்மை, தகுதிக்கான திட்ட அளவைகள், மீள்குடியேற்ற அமைவிடங்கள், மீள்குடியேற்ற அமைவிடங்களில் கிடைக்கும் சேவைகளின் தரம் மற்றும் சுதேச சமூகத்தினருக்கும் மீள்குடியேற்றப்பட்டோருக்குமிடையிலான பிரச்சனைகள் உள்ளிட்ட பிரச்சனைகள் உருவாகலாம். எனவே இவ்வாறு பாதிக்கப்பட்டோர் தமது குறைகளை முறைப்பாடு செய்வதற்கு உரிய பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும். செயற்த்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தவும் இது உதவும். நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டத்தில் தற்போது முறைப்பாடுகள் அனைத்தும் பிரதி பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்), பிரதி பணிப்பாளர் (மீள்குடியேற்றம்), சட்ட அலுவலகர் மற்றும் காணி அலுவலகர் ஆகியோரை உள்ளடக்கிய மேன்முறையீட்டு குழுவினால் பரிசீலிக்கப்படுகிறது. ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி அதன் வாடிக்கையாளர்களிடம் பொருத்தமான வேகமாக மக்களின் குறைகளை தீர்க்க கூடிய பொறிமுறையை ஏற்படுத்துமாறு கேட்டுள்ளது.

மீள்குடியேற்ற கொள்கை சட்டகத்திற்கு அமைவாக செயற்த்திட்டத்தின் கீழ் சுயாதீன குறைதீர்க்கும் பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்படும். இப்பொறிமுறையில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது முறைப்பாடுகளை முன்வைக்கலாம். இப்புதிய நடைமுறை மூலம் நீண்ட நிர்வாக மற்றும் சட்ட செயல்முறைகளை குறைக்கலாம். இப்பொறிமுறை கீழ்வரும் நன்மைகளை தரும்;

- பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சமூகத்தவர் தமது குறைகளை தெரிவித்து தீர்வினை பெற்றுக்கொள்ளும் வினைத்திறனான மார்க்கமாக அமையும்.
- செயற்த்திட்ட நடைமுறைப்படுத்தும் தரப்பினருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையே சிறந்த உறவை கட்டியெழுப்ப உதவும்

குறைதீர்க்கும் பொறிமுறையின் படிமுறைகள்;

- செயற்த்திட்டத்துடன் தொடர்பான காணி அல்லது சமூக அலுவலகரிடம் முறைப்பாட்டை முன்வைத்தல்
- அமைச்சு மட்ட குறைதீர்க்கும் குழுவிடம் முறைப்பாட்டை முன்வைத்தல்
- சுயாதீன குறைதீர்க்கும் குழுவினால் முறைப்பாடுகள் கையாளப்படுதல்
- நீதிமுறைமைக்கமைய வழக்கினை தாக்கல் செய்தல்

பாதிக்கப்பட்ட மக்கள் மேற்கூறிய எந்தவொரு பொறிமுறை மூலமும் தமது குறைகளை தீர்த்து கொள்ளலாம். கீழுள்ள அட்டவணையில் குறைதீர்க்கும் பொறிமுறையின் செயற்பாடு சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

*அட்டவணை 7. 1: குறைதீர்க்கும் பொறிமுறை*

| குறைதீர்க்கும் மட்டங்கள் | ஒருங்கிணைப் பாளர் | செயற்த்திட்டத்தின் தொடர்பாடல் மற்றும் ஏனைய வசதிகள் | குறைதீர்க்கும் கால எல்லை |
|---|---|---|---|
| மட்டம் 1: கள நிலையில் உள்ள காணி | எந்தவொரு பிரச்சனை அல்லது | குறைதீர்க்கும் பொறிமுறை செயற்த்திட்ட அமைவிடம் மற்றும் கூட்டு ஆதன அலுவலகங்களில் கள மட்டத்தில் | 15 வேலை நாட்கள் |

| குறைதீர்க்கும் மட்டங்கள் | ஒருங்கிணைப் பாளர் | செயற்த்திட்டத்தின் தொடர்பாடல் மற்றும் ஏனைய வசதிகள் | குறைதீர்க்கு ம் கால எல்லை |
|---|---|---|---|
| அல்லது சமூக அலுவலகர் | குறைகள் தொடர்பிலும் முதலாவது தொடர்பு மையம் காணி அல்லது சமூக அலுவலகர் | பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும். மேலும் குறைதீர்க்கும் பொறிமுறை நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம் மற்றும் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.<br><br>குறித்த அலுவலகர்களை தொலைபேசி வாயிலாகவோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொண்டு குறைகளை முன்வைக்கலாம்.<br><br>குறைகள் உத்தியோகப்பற்றற்ற நிலையில் தீர்க்கப்படாத பட்சத்தில் மட்டம் 1 இற்கான முறைப்பாட்டு படிவத்தை பூர்த்தி செய்து முறைப்பாட்டை சமர்ப்பிக்கலாம். முறைப்பாட்டு படிவத்தின் பிரதி செயற்த்திட்ட முத்திரையுடன் முறைப்பாட்டாளருக்கு முறைப்பாட்டிற்கான ஆதாரமாக கையளிக்கப்பட வேண்டும்.<br><br>முறைப்பாட்டிற்கான படிவம் நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம் மற்றும் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் இணையங்களில் பதிவேற்றப்பட வேண்டும். அச்சிடப்பட்ட முறைப்பாட்டு படிவங்கள் செயற்த்திட்ட அலுவலகம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றில் வைக்கப்பட வேண்டும்.<br><br>உரிய காணி மற்றும் சமூக அலுவலகர் எழுத்தறிவு அற்ற முறைப்பாட்டாளர் முறைப்பாட்டு படிவத்தை நிரப்ப உதவி புரிவார்<br><br>கிடைக்கப்பெற்ற உத்தியோகப்பற்றற்ற மற்றும் உத்தியோகபூர்வ முறைப்பாடுகள் தொடர்பில் தனியான பதிவேட்டை காணி அல்லது சமூக அலுவலகர் பேண வேண்டும்<br><br>உரிய காணி அல்லது சமூக அலுவலகர் தேவையேற்படிம் குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் மகளீர் அபிவிருத்தி குழுக்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் கருத்துக்களை பெறலாம். இதற்கென கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டால் குறித்த கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகளை உரிய அலுவலகர்கள் பேண வேண்டும்.<br><br>முறைப்பாடு 15 வேலை நாட்களுக்குள் தீர்க்கப்பட்டால் குறித்த காணி அல்லது சமூக அலுவலகர் அதனை பாதிக்கப்பட்டோருக்கு எழுத்து மூலம் அறிவிப்பார்.<br><br>இவ்வாறு அறிவிக்கப்பட்ட முடிவு தொடர்பில் தமது நிலைப்பாட்டை பாதிக்கப்பட்ட தரப்பினர் 10 வேலை நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும். இவ்வாறு பதிலளிக்காத பட்சத்தில் அவர்கள் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதாக கருதப்படும்.<br><br>முறைப்பாட்டை தீர்க்க கூடிய காலம் | |

| குறைதீர்க்கும் மட்டங்கள் | ஒருங்கிணைப் பாளர் | செயற்த்திட்டத்தின் தொடர்பாடல் மற்றும் ஏனைய வசதிகள் | குறைதீர்க்கும் கால எல்லை |
|---|---|---|---|
| | | தேவையாயின் அது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எழுத்து மூலம் அறிவித்து அவர்களின் இணக்கப்பாடு பெறப்பட வேண்டும். முறைப்பாட்டை தீர்க்க மேலும் 15 வேலை நாட்களை அதிகமாக கோரலாம். | |
| மட்டம் 2: மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சில் காணப்படும் குறைதீர்க்கும் குழு | சமூகவியலாளர் (செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு) | முதலாவது மட்டத்தில் தீர்வு கிடைக்காவிட்டாலோ அல்லது கிடைத்த தீர்வில் திருப்தி முறைப்பாட்டாளர் திருப்தியடையாவிட்டாலோ அல்லது குறித்த விடயம் சமூக மற்றும் காணி அலுவலகரின் விடயப்பரப்பிற்கு அப்பால் காணப்பட்டாலோ முறைப்பாட்டாளர் மீண்டும் மட்டம் 2 முறைப்பாட்டு படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும். முறைப்பாட்டு படிவத்தின் பிரதி செயற்த்திட்ட முத்திரையுடன் முறைப்பாட்டாளருக்கு முறைப்பாட்டிற்கான ஆதாரமாக கையளிக்கப்பட வேண்டும். முறைப்பாட்டிற்கான படிவம் நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம் மற்றும் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் இணையங்களில் பதிவேற்றப்பட வேண்டும். செயற்த்திட்ட அலுவலகம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றில் வைக்கப்பட வேண்டும்.<br><br>குறைதீர்க்கும் குழுவில் உள்ளடங்குவோர்:<br>பிரதி பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்)- தலைவர்<br>சட்ட பிரிவின் பணிப்பாளர் அல்லது அவரது பிரதிநிதி- உறுப்பினர்<br>காணி பிரிவின் பணிப்பாளர் அல்லது அவரது பிரதிநிதி- உறுப்பினர்<br>மேலதிக செயற்த்திட்ட பணிப்பாளர் (திட்டமிடல்)- உறுப்பினர்<br>செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூகவியலாளர்- செயலாளர்<br><br>மட்டம் ஒன்றில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டு படிவத்தின் பிரதியும் மட்டம் 2 இற்கான முறைப்பாட்டு படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்.<br><br>மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு அனைத்து முறைப்பாடுகளையும் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு அனுப்பி வைக்கும்.<br><br>செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு குறித்த முறைப்பாடு நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டத்தின் விடய பரப்பினுள் உள்ளடங்குகின்றதா என்பதை ஆராய்ந்து இல்லாவிடில் முறைப்பாட்டாளருக்கு எழுத்து மூலம் அதனை அறிவித்து எதிர்காலத்தில் இவ்விடயம் தொடர்பில் அவர் தொடர்பு கொள்ள வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாகவும் அறிவிக்கும்.<br><br>செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூகவியலாளர் இக்கட்டத்திற்கான முறைப்பாடுகளின் தொடர்பு அதிகாரியாக செயற்படுவார். | 15 வேலை நாட்கள் |

| குறைதீர்க்கும் மட்டங்கள் | ஒருங்கிணைப் பாளர் | செயற்த்திட்டத்தின் தொடர்பாடல் மற்றும் ஏனைய வசதிகள் | குறைதீர்க்கும் கால எல்லை |
|---|---|---|---|
| | | அவசியமேற்படின் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு இவ்விடயம் தொடர்பில் உரிய அலுவலகங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளலாம். அத்துடன் கள விஜயங்களை மேற்கொண்டு கள மட்ட கூட்டங்களையும் அவசியமாயின் நடாத்தலாம்.<br><br>முறைப்பாட்டாளருக்கு மட்டம்-2 குறைதீர்க்கும் பொறிமுறை தொடர்பில் எவ்வித செலவுகளும் ஏற்படாத வண்ணம் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு உறுதி செய்ய வேண்டும்.<br><br>முறைப்பாடு 15 வேலை நாட்களுக்குள் தீர்க்கப்பட்டால் முறைப்பாட்டாளருக்கு செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்.<br><br>இவ்வாறு அறிவிக்கப்பட்ட முடிவு தொடர்பில் தமது நிலைப்பாட்டை பாதிக்கப்பட்ட தரப்பினர் 10 வேலை நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும். இவ்வாறு பதிலளிக்காத பட்சத்தில் அவர்கள் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதாக கருதப்படும்.<br><br>முறைப்பாட்டை தீர்க்க கூடிய காலம் தேவையாயின் அது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எழுத்து மூலம் அறிவித்து அவர்களின் இணக்கப்பாடு பெறப்பட வேண்டும். முறைப்பாட்டை தீர்க்க மேலும் 15 வேலை நாட்களை அதிகமாக கோரலாம்.<br><br>முறைப்பாட்டிற்கான தீர்வு கிடைக்காத பட்சத்தில் முறைப்பாட்டாளர் குறைதீர்க்கும் பொறிமுறையின் மட்டம்-3 ஐ அணுக எழுத்துமூலம் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சிற்கு அறிவிக்கலாம். | |
| மட்டம் 3: சுயாதீன குறைதீர்க்கும் குழு | மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி), மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு | மட்டம் இரண்டில் தீர்வு கிடைக்காவிட்டாலோ அல்லது கிடைத்த தீர்வில் திருப்தி முறைப்பாட்டாளர் திருப்தியடையாவிட்டாலோ அவர் சுயாதீன குறைதீர்க்கும் குழுவிடம் மேன்முறையீடு செய்யலாம்.<br><br>சுயாதீன குறைதீர்க்கும் குழுவின் உறுப்பினர்கள்: காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு, மகளீர் விவகார அமைச்சு மற்றும் விலைமதிப்பீட்டு திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள், சட்டத்தரணியொருவர், ஓய்வு பெற்ற சிரேஸ்ட அரச அதிகாரி மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதியொருவர்<br><br>மட்டம் 1 மற்றும் 2 இல் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டு படிவங்கள் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் சுயாதீன குறைதீர்க்கும் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>இக்குழுவின் தலைவராக மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் | 15 வேலை நாட்கள் |

| குறைதீர்க்கும் மட்டங்கள் | ஒருங்கிணைப் பாளர் | செயற்த்திட்டத்தின் தொடர்பாடல் மற்றும் ஏனைய வசதிகள் | குறைதீர்க்கும் கால எல்லை |
|---|---|---|---|
| | | மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி) செயற்படுவார். அத்துடன் முறைப்பாட்டை விசாரிக்கும் போது அனைத்து குழு உறுப்பினர்களையும் கூட்டத்திற்கு அழைக்கும் அதிகாரமுமுண்டு,<br><br>அவசியமேற்படின் சுயாதீன குறைதீர்க்கும் குழு இவ்விடயம் தொடர்பில் உரிய அலுவலகங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளலாம். அத்துடன் கள விஜயங்களை மேற்கொண்டு கள மட்ட கூட்டங்களையும் அவசியமாயின் நடாத்தலாம்.<br><br>முறைப்பாடு 15 வேலை நாட்களுக்குள் தீர்க்கப்பட்டால் சுயாதீன குறைதீர்க்கும் குழு அது தொடர்பில் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு அறிவிக்கும். இதனையடுத்து முறைப்பாட்டாளருக்கு செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்.<br><br>இவ்வாறு அறிவிக்கப்பட்ட முடிவு தொடர்பில் தமது நிலைப்பாட்டை பாதிக்கப்பட்ட தரப்பினர் 10 வேலை நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும். இவ்வாறு பதிலளிக்காத பட்சத்தில் அவர்கள் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதாக கருதப்படும்.<br><br>முறைப்பாட்டை தீர்க்க கூடிய காலம் தேவையாயின் அது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எழுத்து மூலம் அறிவித்து அவர்களின் இணக்கப்பாடு பெறப்பட வேண்டும். முறைப்பாட்டை தீர்க்க மேலும் 15 வேலை நாட்களை அதிகமாக கோரலாம்.<br><br>முறைப்பாட்டிற்கான தீர்வு கிடைக்காத பட்சத்தில் முறைப்பாட்டாளர் குறைதீர்க்கும் பொறிமுறையின் மட்டம்-4 ஐ அணுக எழுத்துமூலம் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சிற்கு அறிவிக்கலாம். | |
| மட்டம் 4: நீதிமன்றத்தை அணுகல்<br><br>செயற்த்திட்டத்தின் குறைதீர்க்கும் முறைக்கு அப்பால் தாக்கவிளைவிற்குட்படக்கூடிய மக்களுக்கான உதவி | பாதிக்கப்பட்ட நபர் அல்லது சமூகத்திற்கு செயற்த்திட்டத்தின் குறைதீர்க்கும் பொறிமுறை ஊடாக தீர்வு கிடைக்காத பட்சத்தில் நீதித்துறையை அணுகலாம் | அனைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சட்ட உதவி கிடைக்க வேண்டும்<br><br>குறைதீர்க்கும் பொறிமுறையின் படி செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் உதவி தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய மக்களுக்கே வழங்கப்படும்.<br><br>முறைப்பாட்டாளர் தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய நபரென கருதப்பட்டால் அவர்களுக்கு எவ்வித செலவுகளும் ஏற்படாத வண்ணம் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு உறுதி செய்ய வேண்டும். தாக்கவிளைவிற்குள்ளாககூடியநபருக்கானவரை விலக்கணம்கீழேதரப்பட்டுள்ளபோதிலும்இதுதொடர்பானஇறுதிதீர்மானத்தைமாநகரமற்றும்மேல் மாகாணஅபிவிருத்திஅமைச்சேமேற்கொள்ளும்.<br><br>நீதிமன்ற தீர்ப்பே இறுதியானதாகும். | நாட்டின் நீதித்துறையின் செயற்பாடுகளுக்கமைய |

*தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய நபர்: ஒருவர் உடல் அல்லது உள ரீதியாகவோ அங்கவீனமடைந்து காணப்பட்டாலோ, ஆதரவற்றவராகவோ, அனாதையாகவோ, 60 வயதிற்கு மேற்பட்டவராகவோ அல்லது குடும்பத்தை தலைமைதாங்கும் பெண்ணாகவோ காணப்பட்டால் தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய நபராக கருதப்படுவார்.

மேற்கூறப்பட்டவற்றிற்கு மேலதிகமாக பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதியமைச்சினால் நியமிக்கப்படும் இணக்க சபையின் உதவியினையும் நாடலாம். குறைதீர்க்கும் பொறிமுறையில் நீதிமன்றத்தை அணுகினால் ஏற்படக்கூடிய செலவுகளை தவிர வேறெந்த கட்டணங்களும் பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து அறவிடப்படமாட்டாது.

# அத்தியாயம் 8
# வருமான மீளமைப்பு உபாயங்கள்

செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு இச்செயற்த்திட்டத்தை பாதிக்கப்பட்ட மக்களுக்கான அபிவிருத்திக்கான சந்தர்ப்பமாகவே நோக்குகிறது. பாதிக்கப்பட்ட மக்களை செயற்த்திட்ட நன்மைகள் நிறுவனங்களின் தலையீடு, நஸ்ட ஈடு, வருமான மீளமைப்பு நிகழ்ச்சி திட்டங்கள், தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய குழுக்களுக்கான புனர்வாழ்வு மற்றும் அடுக்குமாடி கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது நிர்மாணம் சார்ந்த நடவடிக்கைகளின் போது வேலைவாய்ப்பு ஆகியன மூலமாக வந்தடையும்.

## 8.1 எதிர்பார்க்கப்படும் இழப்புக்கள்

மீளக்குடியமர்த்தப்பட்டமையினால் ஏழு வீட்டு அலகுகளை வருமானம் இழப்பு கருதப்படுவதுடன் (மீளக் குடியமர்த்தல் திட்டத்தின் வார்ப்படமாக இனங்காணப்பட்ட (இணைப்பு 1) மதிப்பிடப்பட்ட வருமானமிழப்பு காரணமாக அவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும். அதில் ஆறு வீட்டு அலகுகள் தமது வருமான சீரமைப்பு தொடர்பாக ரூபா 50,000 தொகை வழங்குதல் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் நுண் வியாபார நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படும்.

## 8.2 தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய குடும்பங்கள்

தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக அரசின் மானிய உதவிகள் கிடைப்பதுடன் வருமான மீளமைப்பு நிகழ்ச்சி திட்டத்தின் கீழும் உதவிகள் வழங்கப்படும். அங்கவீனர்களுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக உதவி வழங்கப்படும். செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சமூக அலுவலகர் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் சமூக சேவைகள் திணைக்களத்திற்கும் இடையிலான ஒருங்கிணைப்பாளராக செயற்படுவார். .

## 8.3வருமான மீளமைப்பு உபாயங்கள்

மீள்குடியேற்ற திட்டத்தின் மீளாய்வு, மீள்புதுப்பிக்கத்தக்க மீளாய்வு, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சமூக குழுக்களுக்களினால் திரட்டப்பட்ட போதிய தகவல்களை அடிப்படையாக கொண்டு தமது வியாபாரங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பனவு

தகுதியான வீடுகளின் வருமானத்தை மீளமைக்க/மேம்படுத்த கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்;

- பயனாளிகளுக்கான விழிப்புணர்வை அதிகரித்தல்
- மாற்று தொழில்களுக்கான திறன்களை விருத்தி செய்தல்
- மாற்று வியாபார திட்டங்களை தயாரித்தல் அல்லது தற்போதைய வியாபாரங்களை மேம்படுத்தல்
- தேவையேற்படின் நிதி நிறுவனங்களிடமிருந்து கடனை பெறுவதற்கு உதவுதல்

### 8.4: வருமான மீளமைப்பு நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கமைப்பு

வருமானத்தை அதிகரிக்கும் திறன்களை மேம்படுத்த அவசியமான நடவடிக்கைகளை செயற்ததிட்ட முகாமைத்துவ பிரிவு மேற்கொள்ளும் செயன்முறைஅட்டவனை 5.3 இல் காட்டப்பட்டுள்ளது. வருமான மீளமைப்பு செயன்முறைகள், செயற்திட்டத்தின் சமுதாய குழு வளங்களினதும் வெளி விரிவுரையாளர்களினதும் ஒத்துழைப்பு வழங்கப்படும். தொடர்பான நிகழ்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

### 8.5வருமான மீளமைப்பு நிகழ்ச்சி திட்டத்தில் தொடர்புடைய நிறுவனங்கள்

- கடன் வழங்கும் நிறுவனங்கள்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- உரிய அரச சார்பற்ற நிறுவனங்கள்

# அத்தியாயம் 9

# நிறுவன ஒழுங்கமைப்பு சட்டகம்

மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மேலதிக செயற்த்திட்ட பணிப்பாளர் (திட்டமிடல்) அவர்களை சாரும். இவருக்கு கீழேயே நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றாடல் பிரிவு தொழிற்படுகிறது. சமூகவியலாளர் மற்றும் உதவி செயற்த்திட்ட பணிப்பாளர் (காணி) ஆகியோர் மேலதிக செயற்த்திட்ட பணிப்பாளருக்கு மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவிகளை வழங்குவர். பிரதி செயற்த்திட்ட பணிப்பாளர் (தொழில்நுட்பம்) செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் தொழில்நுட்பம் சார் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக விளங்குவார்.

நிர்மாண நடவடிக்கைகள் அனைத்தும் பிரதி பணிப்பாளர் (தொழில்நுட்பம்) அவர்களால் கண்காணித்து ஒருங்கிணைப்பு செய்யப்படும். செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கான அதிகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மூலமாக கிடைத்ததுடன் அவர் மூலமாக செயற்த்திட்ட போக்குக தொடர்பில் அதிகாரசபையின் தலைவர் ஊடாக அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்.

செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு தொழில்நுட்பம், சமூகம், காணி முகாமைத்துவம் மற்றும் நிதியியல் சார் நிபுணர்களை கொண்டுள்ளது. மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இப்பிரிவின் சமூக அலுவலகர்கள், சமூக சந்தைப்படுத்தல் அலுவலகர்கள், காணி அலுவலகர்கள் ஆகியோர் முக்கிய பங்காற்றுவர்.

## 9.1: மீள்குடியேற்ற செயற்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிறுவன ஒழுங்கமைப்பு

*அட்டவணை 9. 1: செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்*

| செயற்பாடுகள் | பொறுப்புக்கள் |
|---|---|
| மீள்குடியேற்ற கொள்கைக்கமைவாக மீள்குடியேற்றப்படவேண்டிய குடும்பங்களை இனம்காணல் | சமூக அலுவலகர் URP-UDA |
| தகவல்களை புதுப்பிக்கும் நோக்கில் பங்குதாரர்களுடனான கலந்துரையாடல்களை நடாத்துதல் | சமூக அலுவலகர், காணி அலுவலகர் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான ஆலோசகர்கள் -PMU-URP-UDA |
| பொதுமக்கள் தகவல் நிலையமொன்றை ஏற்படுத்தல் மற்றும் தகவலை கொண்ட ஆவணங்களை தயாரித்தல் | மேலதிக செயற்த்திட்ட பணிப்பாளர் (திட்டமிடல்)-URP-UDA |
| செயற்த்திட்ட பிரிவுகளை உருவாக்குதல் | செயற்த்திட்ட பணிப்பாளர் - PMU-URP_UDA |
| இடம்பெயர்ந்த காணி உரிமைகள் அற்ற மக்களுக்கு மாற்று தங்குமிட வசதிகளை ஒதுக்குதல் | செயற்த்திட்ட பணிப்பாளர் - PMU-URP_UDA |
| பாதிக்கப்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற போதியளவு கால அவகாசம் (ஆகக்குறைந்தது 2 கிழமைகள்) அளித்தல் | செயற்த்திட்ட பணிப்பாளர் - PMU-URP_UDA |
| பாதிக்கப்பட்ட மக்கள் தமது புதிய இருப்பிடங்களுக்கு செல்வதற்கு உதவுதல் | PMU-URP_UDA **இன் சமூக அலுவலகர்களின்** |

| | **உதவியுடன் செயற்த்திட்ட பணிப்பாளர்** |
|---|---|
| பாதிக்கப்பட்ட மக்கள் சுதேச மக்களுடன் இணைந்து செயற்பட உதவுதல். | PMU-URP_UDA **இன் சமூக அலுவலகர்கள்** |
| வருமான மீளமைப்பு திட்டங்கள் | திட்டமிடல் அலுவலகர் -PMU--URP-UDA |
| மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பால்நிலை சார் பிரச்சனைகளை கையாளல் | திட்டமிடல் அலுவலகர் -PMU--URP-UDA |
| பாதிக்கப்பட்ட மக்கள் தமது புதிய வாழ்விடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பதற்கு உதவுதல் | சமூக அலுவலகர் - PMU- -URP-UDA |
| குறைதீர்க்கும் பொறிமுறைக்கான குழுக்ளை அமைத்து அவற்றின் செயற்பாடுகளை அவதானித்தல் | செயற்த்திட்ட பணிப்பாளர் - PMU-URP_UDA |
| பெண்கள் மற்றும் ஏழைகள் உள்ளிட்ட தாக்கவிளைவிற்குள்ளாக கூடியோருக்கு உதவுதல் | சமூக அலுவலகர் - PMU- -URP-UDA |
| போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் ஏனைய உரிய கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்<br><br>ஒவ்வொரு பாதிக்கப்பட்ட நபருக்குமான கோவைகளை பேணுதல் | செயற்த்திட்ட பணிப்பாளர் - PMU-URP_UDA<br><br>சமூக அலுவலகர் - PMU- -URP-UDA |
| முழுமையான கட்டணமும் ஆரம்ப கட்டத்திலேயே மேற்கொள்ளப்பட்டால் அடுக்குமாடி வீடுகளுக்கான உறுதியை வழங்கல் | செயற்த்திட்ட பணிப்பாளர் - PMU-URP_UDA |
| செயற்த்திட்டத்திற்கான தகவல் முகாமைத்துவ முறைமையினை ஏனைய நிறுவனங்களுடனான வலையமைப்பின் மூலம் பேணுதல் | தகவல் தொழில்நுட்ப அலுவலகர்- PMU-URP-UDA |
| மீள்குடியேற்ற செயற்ப்பாட்டு திட்டம் தொடர்பாக உள்ளக மற்றும் வெளியக கண்காணிப்பை மேற்கொள்ளல் அத்துடன் பங்குதாரர்களின் கருத்துக்களையும் பெறுதல்<br><br>எதிர்கால திட்டங்களில் உதவக்கூடிய வகையில் செயற்த்திட்டத்தின் கற்றுக்கொண்ட பாடங்களை ஆவணமாக்கல் | மேலதிக பணிப்பாளர் (திட்டமிடல்) |
| காசுப்பாய்ச்சலை உறுதிப்படுத்த தொடர்ச்சியாக நிதி கிடைப்பதை உறுதி செய்தல் | செயற்த்திட்ட பணிப்பாளர் - PMU-URP_UDA |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி உள்ளிட்ட பங்குதாரர்களுக்கு செயற்த்திட்டத்தின் போக்கு தொடர்பான அறிக்கைகளை தயாரித்து வழங்குதல் | செயற்த்திட்ட பணிப்பாளர் - PMU-URP_UDA |
| **PMU-செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு*<br>*URP- நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம்*<br>*UDA-நகர அபிவிருத்தி அதிகாரசபை* | |

குறிப்பு: மேலதிக செயற்த்திட்ட பணிப்பாளர் (திட்டமிடல்) அவர்களின் இணக்கப்பாட்டுடனேயே பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

நடைமுறைப்படுத்தும் கால அட்டவணையில் ஒவ்வொரு நடவடிக்கையும் நடைமுறைப்படுத்துவதற்கான கால அட்டவணை குறிப்பிடப்பட்டுள்ளது. உரிய திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுக்கான ஊழியர்களை ஒதுக்கியவுடன் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

மீள்குடியேற்ற செயற்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்த ஏனைய நிறுவனங்களுடனான இணைப்பு அவசியமாகும்.

மீள்குடியேற்ற செயற்பாடுகளுடன் தொடர்புடைய பிரதான அரச நிறுவனங்கள் கீழே தரப்பட்டுள்ளன;

***அட்டவணை 9. 2: மீள்குடியேற்ற செயற்ப்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரச நிறுவனங்களின் பங்கு***

| | |
|---|---|
| மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு | கொள்கை திட்டமிடல், நிதியினை பெற்றுக்கொள்ளல், அமைச்சின் கீழியங்கும் நிறுவனங்களுக்கு கொள்கை ரீதியான வழிகாட்டலை வழங்கல், கண்காணிப்பு மற்றும் நிர்வாகம் |
| நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம்/நகர அபிவிருத்தி அதிகாரசபை | அமைச்சின் கொள்கை வழிகாட்டலை நடைமுறைப்படுத்தல், அரசின் இலக்கை எட்டுவதற்கு தமது முகாமைத்துவத்தின் கீழியங்கும் பிரிவுகளுக்கு வழிகாட்டலை வழங்கல் |
| நில அளைவை திணைக்களம் | செயற்த்திட்டத்திற்கான திட்டங்களை தயாரித்தல் |
| விலை மதிப்பீட்டு திணைக்களம் | தேவையேற்படின் நஸ்ட ஈடு வழங்கும் பொருட்டு விலை மதிப்பீட்டை மேற்கொள்ளல் |
| மத்திய சுற்றாடல் அதிகாரசபை | பட்டியலிடப்பட்ட செயற்த்திட்டங்களாக வகைப்படுத்தப்பட்ட செயற்த்திட்டங்களுக்கான சுற்றாடல் மதிப்பீட்டை மேற்கொள்ள வழிகாட்டுதலை வழங்குதல் |
| இலங்கை மின்சார சபை | செயற்த்திட்ட எல்லைகளை கடந்து செல்லும் மின் கம்பிகளை தேவையேற்படின் அகற்றி வேறு இடங்களுக்கு மாற்றுதல். அடுக்குமாடி குடியிருப்புக்களுக்கு மின்னிணைப்பை வழங்குதல் |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | செயற்த்திட்ட எல்லைகளை கடந்து செல்லும் நீர் இணைப்புக்களை தேவையேற்படின் அகற்றி வேறு இடங்களுக்கு மாற்றுதல். அடுக்குமாடி குடியிருப்புக்களுக்கு மக்கள் குடியேறுமுன்னரே அவசியமான நீரிணைப்பை வழங்குதல் |
| ஸ்ரீலங்கா ரெலிகொம் | தொலைத்தொடர்பு வசதிகளை வழங்கல் |

# அத்தியாயம் 10
# நடைமுறைப்படுத்தும் கால அட்டவணை

நடைமுறைப்படுத்தும் கால அட்டவணையில் ஒவ்வொரு செயற்பாட்டையும் நடைமுறைப்படுத்த அவசியமான கால எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிற்குமான அலுவலகர்கள் ஒதுக்கப்பட்ட பின்னர் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

*அட்டவணை 10. 1 : நடைமுறைப்படுத்தும் கால அட்டவணை*

| # | செயற்பாடு | பொறுப்பான தரப்பு | கால எல்லை |
|---|---|---|---|
| **பொதுவான செயற்பாடுகளின் ஒழுங்கு** | | | |
| 1 | மீளக்குடியேற்ற வேண்டிய குடும்பங்களின் பட்டியலை தயாரித்தல் | சமூக அலுவலகர் - PMU- -URP-UDA | 2018 ஆவணியில் நிறைவு செய்யப்பட்டது |
| 2 | மீள்குடியேற்றத்தின் தேவைப்பாடு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்தினை கேட்டறியும் பொருட்டு சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல் | சமூக அலுவலகர், காணி அலுவலகர் மற்றும் ஆலோசகர்-மீள்குடியேற்றம்-PMU-URP-UDA | 10.10.2018 |
| 3 | மீள்குடியேற்றம் தொடர்பாக வீட்டுக்கு வீடு மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் | PMUஇன் சமூக அலுவலகர்கள் | 12.10.2018 முதல் |
| 4 | இழக்கப்பட கூடிய உடைமைகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக பொருளாதார நிலை தொடர்பான தகவல் சேகரிப்பு | PMU இன் சமூக அலுவலகர்கள் மற்றும் ஆலோசகர்-மீள்குடியேற்றம் | 16.10.2018-19.10.2018 |
| 5 | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் அதிகாரிகளுடன் இணைந்து நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொடர்மாடி வீடுகளுக்கு விஜயம் செய்தல் | PMU-URP-UDAஇன் சமூக அலுவலகர்கள் | 24.10.2018 |
| 6 | சுதேச மக்களுடனான கலந்துரையாடல் (இனம்காணப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புக்களில் ஏற்கனவே வசிப்போர்). | PMU இன் சமூக அலுவலகர்கள் | 24.10.2018 |
| 7. | செயற்த்திட்ட கள அலுவலகத்தை உருவாக்குதல் | செயற்த்திட்ட பணிப்பாளர் -PMU-URP_UDA | 24.10.2018 |
| 8. | பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடுக்குமாடி கட்டிடங்களில் வசித்தல் மற்றும் அங்குகாணப்படும் வசதிகளை பயன்படுத்துவது தொடர்பில் கூட்டங்களை நடாத்துதல் | PMU இன் சமூக அலுவலகர்கள் | 15.11.2018முதல் |
| 9 | பாதிக்கப்பட்ட மக்களுக்கு பூர்வாங்க கட்டணத்தை செலுத்துமாறு அறிவித்தல் | செயற்த்திட்ட பணிப்பாளர் -PMU-URP_UDA | 20.11.2018 |
| 10 | பூர்வாங்க கட்டணத்தை பெற்றுக்கொள்ளல் | செயற்த்திட்ட பணிப்பாளர் -PMU-URP_UDA | 20.11.2018 முதல் 30.11.2018வரை |
| 11 | எங்கு வேண்டுமென்றாலும் மீள்குடியேற விரும்பும் மக்களின் வீடுகளுக்கான விலை மதிப்பிடல் | விலைமதிப்பீட்டு திணைக்களம்-PMU- | 20.11.2018 முதல் |

| # | செயற்பாடு | பொறுப்பான தரப்பு | கால எல்லை |
|---|---|---|---|
| | | URP | 30.11.2018வரை |
| 12 | வாடகை கொள்வனவு ஒப்பந்தம் ஒன்றை பயனாளிகளுடன் மேற்கொள்ளல் (அடுக்குமாடி வீடுகளை பெறுவோர்) | செயற்த்திட்ட பணிப்பாளர் -PMU-URP_UDA | 1 மார்கழி முதல் |
| 13 | மீள்குடியேற்ற கொள்கையில் குறிப்பிட்டுள்ள சூத்திரத்திற்கமைவாக வீடுகளை ஒதுக்கீடு செய்தல் | செயற்த்திட்ட பணிப்பாளர் மற்றும்சமூக அலுவலகர்கள்-URP-PMU | 1.12.2018 முதல் |
| 14 | விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீடு தொடர்பான விபரங்களை பயனாளிகளுக்கு அறிவித்தல் | பணிப்பாளர் -PMU-URP_UDA | 15.12.2018 |
| 15 | வீடுகளை பயனாளிகளுக்கு கையளித்தல் | செயற்த்திட்ட பணிப்பாளர், சமூக அலுவலகர்கள் மற்றும் அமைவிட முகாமையாளர் | 20.12.2018 |
| 16 | பாதிக்கப்பட்ட மக்களுக்கான நஸ்ட ஈட்டை வழங்கல் | செயற்த்திட்ட பணிப்பாளர் -PMU-URP_UDA | 25.12.2018 |
| 17 | பயனாளிகள் அடுக்குமாடி வீட்டுத்தொகுதியில் தமக்கென ஒதுக்கப்பட்ட புதிய வீடுகளில் குடியேறல் | செயற்த்திட்ட பணிப்பாளர் PMU இன் சமூக அலுவலகர்களின் உதவியுடன் | 25-12.2018 முதல் 31.12.2018வரை |
| 18 | பயனாளிகள் இடம்பெயர்ந்த பின்னர் காலியான காணியை பொறுப்பேற்றல் | செயற்த்திட்ட பணிப்பாளர் மற்றும்சமூக அலுவலகர்கள்-URP-PMU | 25-12.2018 முதல் 31.12.2018 வரை |
| 19. | அடுக்குமாடி குடியிருப்புக்களுக்கு இடம்பெயராத மக்கள் தமது தற்போதைய வாழ்விடத்தை விட்டு வெளியேறியதும் வாடகை கொடுப்பனவை வழங்குதல் | செயற்த்திட்ட பணிப்பாளர் மற்றும்சமூக அலுவலகர்கள்-URP-PMU | 1.1.2019 |
| 20. | கூட்டு ஆதன முகாமைத்துவ குழுவை அமைத்தல் | PMU- URP இன் சமூக அலுவலகர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் (சட்ட பிரச்சனைகள் தீர்க்கப்பட்ட பின்னர்) | 15.1.2019 |
| 21 | சுய மீள்குடியேற்றத்திற்கு இணங்கியோருக்கு அவர்களது வீட்டிற்கான பெறுமதியை இழப்பீடாக வழங்கல் | செயற்த்திட்ட பணிப்பாளர் மற்றும்சமூக அலுவலகர்கள்-URP-PMU | 20.1.2019 |
| 22 | மேன்முறையீட்டு சபையை உருவாக்குதல் | பணிப்பாளர் நாயகம் , UDA | 1.2.2019 |

| # | செயற்பாடு | பொறுப்பான தரப்பு | கால எல்லை |
|---|---|---|---|
| 23 | முறைப்பாடுகளை ஊக்குவித்தல் | செயற்த்திட்ட பணிப்பாளர் -PMU-URP_UDA | 15.2.2019 முதல் |
| 24. | குறைதீர்க்கும் குழுக்களை அமைத்தல் | செயற்த்திட்ட பணிப்பாளர் -PMU-URP_UDA மற்றும் பணிப்பாளர் நாயகம் , UDA | 02/2019 |
| 25 | மீள்குடியேற்ற செயற்ப்பாட்டுத்திட்டம் அமுல்ப்படுத்தப்படும் போது குறைதீர்க்கும் பொறிமுறையை அமுல்ப்படுத்தி கண்காணித்தல் | செயற்த்திட்ட பணிப்பாளர் மற்றும்சமூக அலுவலகர்கள்-URP-PMU | மாசி 2019இல் இருந்து |
| 26 | பால்நிலை செயற்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் | திட்டமிடல் அலுவலகர்-PMU -URP | மாசி 2019இல் இருந்து |
| 27 | பெண்கள் அபிவிருத்தி குழுக்களை உருவாக்குதல் | சமூக அலுவலகர்கள்-URP-PMU | மாசி 2019இல் இருந்து |
| 28 | சிக்கன மற்றும் கூட்டுறவு குழுக்களை அமைத்தல் | சமூக அலுவலகர்கள்-URP-PMU மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் | பங்குனி 2019 |
| 29 | இயலுமை வளர்ச்சி திட்டங்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நடைமுறைப்படுத்தல் | PMU -URP இன் ஆலோசகர் பிரிவின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் | பங்குனி 2019 |
| 30 | பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மற்றும் நலன்களை கண்காணித்தல் | சமூக அலுவலகர்கள்-URP-PMU | 2019சித்திரை முதல் |

| # | செயற்பாடு | பொறுப்பான தரப்பு | கால எல்லை |
|---|---|---|---|
| 31 | மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை சுயாதீனமாக கண்காணித்தல் | சுயாதீன கண்காணிப்பாளர் | பங்குனி 2019 முதல் சித்திரை 2019<br><br>பங்குனி 2022 முதல் சித்திரை 2022 (தற்காலிக இருப்பிடங்களில் வசித்து ஏற்கனவே வசித்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் குடியேறிய மக்கள்) |
| 32. | மேன்முறையீடுகள் தொடர்பான தீர்மானம் | குறைதீர்க்கும் பொறிமுறை ஊடாக | வைகாசி-ஆனி 2019 |

**PMU-செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு*
*URP- நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம்*
*UDA-நகர அபிவிருத்தி அதிகாரசபை*

*மூலம்: செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு, நகர புத்துயிர்ப்பு செயற்த்திட்டம்*

அட்டவணை 10.1 இல் பிரதான மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கான கால அட்டவணை குறிப்பிடப்பட்டுள்ளது. மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் தகவல்களை பகிர்தல் ஆகிய செயற்பாடுகளுடன் ஆரம்பிக்கும்.

தற்போதைய கட்டிடங்களை தகர்க்க முன்னர் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு நஸ்ட ஈடும் முழுமையாக செலுத்தப்பட வேண்டும். மேலும் அவர்களுக்கு அவ்விடத்தை விட்டு வெளியேற போதுமான காலப்பகுதியும் வழங்கப்பட வேண்டும் (ஆக குறைந்தது 14 நாட்கள்).

# அத்தியாயம் 11

## மீள்குடியேற்றத்திற்கான வரவு செலவுத்திட்டம்

| உருப்படி | அலகு/இலக்கம் | தொகை /அலகுகளின் எண்ணிக்கை | அலகொன்றுக்கான கிரயம்/வீதம் | தொகை | தொகை டொலரில் |
|---|---|---|---|---|---|
| போக்குவரத்துக் கொடுப்பனவு | வீட்டு அலகுகள் | 38 | 5,000 | 185,000 | $ 1,022 |
| வருமான இழப்பு | வீட்டு அலகுகள் | 7 | மாற்றமடையக்கூடும் | 660,000 | $ 3,646 |
| வாடகை கொடுப்பனவு | வீட்டு அலகுகள் | பாதிக்கப்பட்ட வீட்டு அலகுகள் 10, மாதம் 36 | 15,000 | 5,400,000 | $ 29,834 |
| வருமான சீரமைப்பு | வீட்டு அலகுகள் | 6 | 50,000 | 300,000 | $ 1,657 |
| குறை தீர்க்கும் குழு | கூட்டத் தவணைகளின் எண்ணிக்கை | 24 | 10,000 | 240,000 | $ 1,326 |
| வெளி கண்காணிப்பு | மனித மாதங்கள் | 24 | 300,000 | 7,200,000 | $ 39,779 |
| உபமொத்தம் | | | | 13,985,000 | $ 77,265 |
| எதிர்பாரா நிலை | நூற்றுக்கு 20 | | | 2,797,000 | $ 15,453 |
| மொத்தம் | | | | 16,782,000 | 92,718 |

*பாதிக்கப்பட்ட மக்கள் தற்போதைய வாழ்விடத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் அமைக்கப்படவுள்ள வீடுகளை கோரும் பட்சத்தில் அவசியமான தற்காலிக ஏற்பாடாகும். வாடகை வீட்டில் வசிக்கும் திருமணமாகாத பெண்ணிற்கான வாடகை கொடுப்பனவு ஏனைய செலவுகளில் இருந்து வழங்கப்படும்.

i. மதிப்பீடு

ii. 4 தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய குடும்பங்களை உள்ளடக்கியது

iii. மதிப்பீடு

குறிப்பு 1: உள்ளக கண்காணிப்பு செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் ஊழியர்களால் மேற்கொள்ளப்படும். எனவே இதற்கான ஒதுக்கீடுகள் மீள்குடியேற்ற வரவுசெலவு திட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை. சம்பளங்கள் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் நடைமுறை செலவில் ஒதுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 2: பெண்களின் வருமானத்தை மேம்படுத்த நிதி அவசியமாயின் ஏனையவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை பயன்படுத்த முடியும்

.US$ 1 = Rs.181.00

# அத்தியாயம் 12

# கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல்

கண்காணிப்பு நிகழ்ச்சி திட்டம் செயற்த்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது உண்டாக கூடிய குறைபாடுகளை கண்டுகொள்ள உதவுகிறது. மீள்குடியேற்ற கண்காணிப்பிற்குள் தகவல் சேகரிப்பும் பகுப்பாய்வு, அறிக்கையிடல் மற்றும் குறித்த தகவலை மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பயன்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் உள்ளடங்குகின்றன. மேலும் பௌதீக மற்றும் நிதியியல் இலக்குகள் மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான உரிமைத்தகுதிகளை வழங்குதல் ஆகியனவும் உள்ளடங்குகின்றன.

## 12.1 உள்ளக கண்காணிப்பு

உள்ளக கண்காணிப்பு செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்படும். இதில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட சமூக நிபுணர் விசேட பணியாற்றுவார். மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்திற்கு ஏற்ப நலக்காப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உள்ளக கண்காணிப்பு மூலம் உறுதி செய்யப்படும்.

சமூக அலுவலகர்களில் ஒருவர் செயற்த்திட்டம் தொடர்பான தரவுத்தளம் மற்றும் பாதிக்கப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்குமான பிரத்தியேக கோவைகளை பேணுவார். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் உறுப்பினர்கள் தொடர்பான தரவுகள் உரிய நிறுவனங்களால் சேகரிக்கப்பட்டு தரவுத்தளத்தில் பதிவேற்றப்படும். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் அனைத்து உதவிகளும் தரவுத்தளத்தில் பதிவேற்றப்படும். தனி நபர்கள் மற்றும் தனி குடும்பங்கள் தொடர்பான தகவல் இரகசியமானவை என்பதால் அவற்றை செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் ஊழியர்களுக்கு மாத்திரமே பார்வையிட முடியும். எனவே அவை இணையத்தளங்களில் பதிவேற்றப்படமாட்டாது.

கூட்டு ஆதன முகாமையாளர் மாதாந்தம் தரவுத்தள முகாமையாளருக்கு மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களால் செலுத்தப்பட்ட கூட்டு ஆதன நிதியம், பராமரிப்பு கட்டணம் ஆகியன தொடர்பான விபரங்களை அளிப்பார். மீள்குடியேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கைகள் (இரகசியமான தகவல்களை உள்ளடக்காதவை) இணையங்களில் பதிவேற்றப்படும்.

குறைதீர்க்கும் பொறிமுறை தொடர்பில் விசேட தரவுத்தளம் தயாரிக்கப்படும். குறைதீர்க்கும் குழுவின் செயலாளரால் தரவுத்தள முகாமையாளருக்கு மாதாந்த அறிக்கைகள் அனுப்பப்பட்டு தரவுத்தளத்தில் பதிவேற்றப்படும். எனினும் தனி நபர் முறைப்பாடுகள் தொடர்பான விபரங்கள் இணையத்தில் வெளியிடப்படமாட்டாது. சுருக்கமான அறிக்கைகள் பொதுமக்கள் பார்வைக்காக வெளியிடப்படும்.

உள்ளக கண்காணிப்பு கீழ்வருவன தொடர்பில் அவதானம் செலுத்தும்;

- மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தின் நாளாந்த திட்டமிடல் மற்றும் வினைத்திறனான நடைமுறைப்படுத்தல்

- நஸ்ட ஈடு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகளை வினைத்திறனாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் பகிர்ந்தளித்தல்
- தகவல் சேகரிப்பு, துலங்கல் மற்றும் தடைகளை இனம்கண்டு அவற்றை தீர்த்து கொள்ளல்
- தீர்மானங்களை அறிக்கையிடல்
- ஒவ்வொரு குடும்பத்திற்குமான பிரத்தியேக கோவைகளை பராமரித்தல்
- பாதிக்கப்பட்ட மக்களின் சமூக பொருளாதார நிலைமைகள் தொடர்பான அடிப்படை தகவல்களை சேகரித்து பராமரித்தல். இதன் மூலம் எதிர்கால ஒப்பீட்டு பகுப்பாய்வுகளை மேற்கொள்ள முடியும்.
- செயற்த்திட்ட போக்கு தொடர்பான அறிக்கைகளை தயாரித்தல்
- நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பை உண்டாக்குதல்

### 12.2: உள்ளக கண்காணிப்பிற்கான கருவிகள்

- ஆவணங்களை ஆய்வு செய்தல்
- பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான மதிப்பாய்வு
- பிரதான தகவல் சேகரிப்பு கலந்துரையாடல்கள்
- ஆழமான விசேட ஆய்வுகள்
- தெரிவு செய்யப்பட்ட குழு கலந்துரையாடல்கள்
- சமூக மட்ட கூட்டங்கள்
- அவதானிப்புக்கள்

### 12.3: வெளியக கண்காணிப்பு

செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு வெளியக கண்காணிப்பிற்கென சுயாதீன கண்காணிப்பாளர் அல்லது நிறுவனத்தை ஈடுபடுத்தும். இக்கண்காணிப்பின் நோக்கம் நலக்காப்பு நடவடிக்கைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா, அவை அவற்றின் நோக்கங்களை எட்டியுள்ளனவா இல்லையெனில் எத்தகைய நடவடிக்கைகள் சீர்செய்ய மேற்கொள்ளப்பட வேண்டும் ஆகியன தொடர்பில் ஆராயப்படும். வெளியக கண்காணிப்பில் இரு நோக்கங்கள் காணப்படுகின்றன;

- நலக்காப்பு நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட சட்டகத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல்
- பாதிக்கப்பட்ட மக்களின் பாதிப்புக்கள் கருத்திற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்தல் அத்துடன் அம்மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கை தரம் மேம்பட்டுள்ளமையை அல்லது மீளமைக்கப்பட்டுள்ளமையை உறுதி செய்தல்

செயற்த்திட்ட பணிப்பாளர் கொள்முதல் நிபுணரின் துணையுடன் வெளியக கண்காணிப்பிற்கான ஆவணங்களை தயாரித்து வெளியக கண்காணிப்பாளர்களிடமிருந்து விலைமனுக்கள் உள்ளிட்ட முன்மொழிவுகள் கோரப்பட்டு பணிப்பாளர் தலைமையிலான குழுவினால் தெரிவு மேற்கொள்ளப்படும்.

### 12.4: வெளியக கண்காணிப்பின் நோக்கங்கள்

- மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் செயல்முறைக்கமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டதை உறுதி செய்தல்;
- மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தின் நோக்கங்கள் அடையப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்

- பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கை தரம் மேம்பட்டுள்ளமை அல்லது மீளமைக்கப்பட்டுள்ளமையை உறுதி செய்தல் இல்லாவிடில் மேம்படுத்துவதற்கான வழிவகைகளை முன்மொழிதல்
- மீள்குடியேற்றம், உரிமைத்தகுதி மற்றும் குறைதீர்க்கும் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை கேட்டறிதல்
- அனைத்து நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களினதும் செயற்பாடுகளை மதிப்பிடல்
- சமூக அபிவிருத்தி இலக்குகளின் அடைவுமட்டத்தை அறிதல்
- உள்ளக கண்காணிப்பின் அனைத்து அறிக்கைகளையும் மதிப்பாய்வு செய்தல்

வெளியக கண்காணிப்பு நிறுவனம் செயற்த்திட்ட நடைமுறைப்படுத்தலுக்கு முன்னதாக அடிப்படை தகவல் சேகரிப்பொன்றை மேற்கொள்ளும். அத்துடன் காலத்திற்கு காலம் குறித்த சேகரிக்கப்பட்ட தகவலை புதுப்பிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடும். வெளியக கண்காணிப்பின் மூலம் கிடைக்கும் அறிக்கைகள் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டு செயற்த்திட்ட வழிப்படுத்தல் குழுவில் பரிசீலிக்கப்படும். அத்துடன் வெளியக கண்காணிப்பாளருக்கென ஆய்வெல்லை ஆவணமொன்று வழங்கப்பட வேண்டும்.

## 12.5:கண்காணிப்பு சுட்டிகள்

செயற்த்திட்டத்திற்கான கண்காணிப்பு சுட்டிகள் அட்டவணை 12.1 இல் காட்டப்பட்டுள்ளன;

***அட்டவணை 12.1: கண்காணிப்பு சுட்டிகள்***

| வகை | *சுட்டிகள்* | மாறிகள் |
|---|---|---|
| செயல்முறை சுட்டிகள் | ஊழியர்கள் | அனைத்து மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய ஊழியர்களும் உரிய நேரத்தில் பணிக்கமர்த்தப்பட்டார்களா?<br>செயற்த்திட்ட அலுவலகர்ளுக்கு பயிற்சி வழங்கப்பட்ட பயிற்சியில் பங்கேற்ற நில அளைவையாளர்கள் மற்றும் விலைமதிப்பீட்டாளர்கள், மீள்குடியேற்ற அலுவலகர்களின் எண்ணிக்கை<br>உருவாக்கப்பட்ட கள அலுவலகங்களின் எண்ணிக்கை |
| | கலந்துரையாடல் | கலந்துரையாடல்கள் உரிய கால அட்டவணை பிரகாரம் மேற்கொள்ளப்பட்டனவா?<br>பங்குதாரர்களுடன் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு கூட்டங்களின் எண்ணிக்கை<br>பகிர்ந்தளிக்கப்பட்ட துண்டு பிரசுரங்களின் எண்ணிக்கை<br>பாதிக்கப்பட்ட மக்களில் தமது உரிமைத்தகுதி தொடர்பில் அறிந்துள்ளோர்? |
| | பங்கேற்பு | அலுவலகர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை<br>பகிர்ந்தளிக்கப்பட்ட சிற்றேடுகளின் எண்ணிக்கை<br>பயிற்சிகளில் பங்கேற்ற ஊழியர்களின்<br>மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா? |
| | குறைதீர்த்தல் | ஏற்படுத்தப்பட்ட குறைதீர்க்கும் குழுக்கள்<br>பாதிக்கப்பட்ட மக்கள் எந்தளவிற்கு குறைதீர்க்கும் பொறிமுறை தொடர்பாக அறிந்துள்ளார்கள்?<br>பாதிக்கப்பட்ட மக்கள் யாராவது குறைதீர்க்கும் பொறிமுறையை கையாண்டார்களா? அவற்றின் முடிவுகள் என்ன?<br>முரண்பாடுகள் தீர்க்கப்பட்டனவா? கிடைக்கப்பெற்ற |

| | | |
|---|---|---|
| | | மற்றும் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
| வெளிப்பாட்டு சுட்டிகள் | காணியை கைவசம் கொண்டிருத்தல் | கைவசப்படுத்திய அரச காணியின் வகை மற்றும் விஸ்தீரணம்?<br>செயற்த்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென அவசியமான காணி உரிய நேரத்தில் கைவசப்படுத்தப்பட்டதா? |
| | கட்டமைப்புக்கள் | கைவசப்படுத்தப்பட்ட தனியார் கட்டமைப்புக்களின் வகை, எண்ணிக்கை மற்றும் விஸ்தீரணம்<br>கைவசப்படுத்தப்பட்ட அரச கட்டமைப்புக்களின் வகை, எண்ணிக்கை மற்றும் விஸ்தீரணம்<br>கைவசப்படுத்தப்பட்ட சமூக கட்டமைப்புக்களின் வகை, எண்ணிக்கை மற்றும் விஸ்தீரணம் |
| | | |
| | நஸ்ட ஈடு மற்றும் புனர்வாழ்வு | பாதிக்கப்பட்ட மக்கள் மீள்குடியேற்ற செயற்பாடுகள் மற்றும் உரிமைத்தகுதி தொடர்பில் அறிந்து வைத்துள்ளனரா?<br>அனைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்குமான உரிமைத்தகுதிகள் வழங்கப்பட்டுள்ளனவா?<br>நஸ்ட ஈடு உரிய நேரத்தில் வழங்கப்பட்டதா?<br>மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தின் படி எத்தனை பேர் மாற்று வீடுகளை பெற்றுக்கொண்டனர்?<br>செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளின் வகை, எண்ணிக்கை மற்றும் மொத்தம்<br>பாதிக்கப்பட்ட வியாபார நடவடிக்கைகளுக்கு மீள கட்டியெழுப்ப உரிய உதவி கிடைத்ததா?<br>தாக்கவிளைவிற்குள்ளாக கூடியோருக்கு வருமானமீட்டும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டனவா?<br>மீள்குடியேற்ற செயற்பாட்டுத்திட்டம் மற்றும் மீள் குடியேற்ற கொள்கை சட்டகத்தில் குறிப்பிடப்பட்டவாறு சமூகத்திற்கான வசதிகள் வழங்கப்பட்டனவா? |
| சுட்டிகள் | குடும்பங்களின் வருமானமீட்டும் இயலுமை | வங்கிகள் மற்றும் ஏனைய மூலங்களில் இருந்து பெற்ற கடன்களின் எண்ணிக்கை<br>வருமான மீளமைப்பு திட்டத்தின் கீழ் பெற்ற உதவிகளின் எண்ணிக்கை<br>செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கை<br>முன்னைய அமைவிடத்தை விட தற்போதைய அமைவிடத்தில் தொழில், உற்பத்தி மற்றும் வளங்கள் தொடர்பில் ஏற்பட்ட மாற்றங்கள்?<br>முன்னைய அமைவிடத்தை விட தற்போதைய அமைவிடத்தில் ஏற்பட்ட வருமானம் மற்றும் செலவு தொடர்பான மாற்றங்கள்?<br>இந்த மாற்றங்களுக்கமைவாக மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வருமானம் மாற்றமடைந்துள்ளதா?<br>வாழ்க்கை தரம் தொடர்பில் ஏற்பட்ட மாற்றங்கள்<br>தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய மக்களுக்கு ஏற்பட்ட மாற்றங்கள் |
| | பெண்களின் நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் | சமூக மட்ட நடவடிக்கைகளில் பங்கேற்றல்<br>தொழில்வாய்ப்பு இழப்பு<br>பால் சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்ளும் ஆற்றல்<br>செயற்த்திட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பு |
| | சிறுவர்களின் நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் | பிள்ளைகள் பாடசாலை செல்வதில் ஏற்பட்ட மாற்றம்<br>புதிய பாடசாலைகளுக்கு செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை<br>கல்வி மட்டத்தில் ஏற்பட்ட மேம்பாடு |
| | புதிய குடியேற்றம் மற்றும் மக்கள் தொகை | சுதேச மக்களுடன் முரண்பாடுகள் ஏதும் ஏற்பட்டதா?<br>கூட்டு ஆதன முகாமைத்துவ குழு அமைக்கப்பட்டுள்ளதா? |

| | | |
|---|---|---|
| | | மீள் குடியேற்ற செயற்பாட்டுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா?<br>புதிட குடியேற்றகாரர்கள் கூட்டு ஆதன முகாமைத்துவ கட்டணத்தை ஒழுங்காக செலுத்துகின்றனரா?<br>பொது வசதிகளுக்கான கட்டணத்தை செலுத்தாத குடும்பங்களின் எண்ணிக்கை?<br>தொற்று நோய்கள் அதிகரித்துள்ளனவா?<br>மீள்குடியேற்றத்தின் பின்னர் பாடசாலை கல்வியை இடைநிறுத்தும் வீதம் அதிகரித்துள்ளதா? |

### 12.6 மதிப்பீட்டுத்திட்டம்

செயற்த்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போதும் அதன் பின்னரும் மீள்குடியேற்றம் தொடர்பான இலக்குகள் எட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். அத்துடன் ஒபேசேகரபுரவில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மீளமைக்கப்பட்டுள்ளதா மற்றும் மேம்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். மதிப்பீட்டின் போது வினைதிறன், விளைதிறன், பாதிப்பு மற்றும் நிலைத்து நிற்கும் தன்மை என்பன தொடர்பில் செயற்த்திட்ட இலக்குகள் மதிப்பீடு செய்யப்பட்டு இதன் முடிவுகள் எதிர்கால மீள்குடியேற்ற திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.

மதிப்பீடு கண்காணிப்பில் இருந்து அதன் பரந்த விடயப்பரப்பு, குறைந்த நேரம் மற்றும் சுயாதீன நிபுணர்களின் ஈடுபாடு ஆகியவற்றின் காரணமாக மாறுபடுகிறது.

மதிப்பீடு கீழ்வரும் நோக்கங்களை கொண்டுள்ளது;

- வினைதிறன்: வளங்களை சிக்கனமாக பயன்படுத்தல்
- விளைதிறன்: இலக்குகளின் அடைவு மட்டம்
- பாதிப்பு: செயற்த்திட்டத்துடன் தொடர்புடைய திட்டமிட்ட அல்லது திட்டமிடப்படாத, சாதக/பாதக பாதிப்புக்கள். தேசிய ரீதியில் செயற்த்திட்டத்தின் முக்கியத்துவம்

செயற்த்திட்ட இணக்கப்பாட்டை அடிப்படையாக கொண்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படும்:
நிலைத்து நிற்கும் தன்மையில் செயற்த்திட்டம் நிறைவடைந்த பின்னரும் அது எவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்குநன்மை பயக்கும் என்பது தொடர்பில் மதிப்பிடப்படும் (வெளியக நிதியீட்டங்கள்).
செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவினால் தெரிவு செய்யப்படும் வெளியக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும். இச்செயற்பாட்டில் பாதிக்கப்பட்ட மக்களின் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் பங்கேற்பது உறுதிப்படுத்தப்பட வேம்டும். அதுமட்டுமின்றி அனைத்து பங்குதாரர்களது கருத்துக்களும் கேட்கப்பட வேண்டும்.

### 12. 7அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

கண்காணிப்பு அறிக்கையிடலில் கீழ்வருவன உள்ளடங்கும்;

- கால முறை அறிக்கைகள் (மாதாந்தம்: உள்ளக, காலாண்டு மற்றும் வருடாந்தம்)
- தற்காலிக அறிக்கைகள்- ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பில் முகாமைத்துவத்தின் வேண்டுகோளுக்கமைய தயாரிக்கப்படும் அறிக்கைகள்
- உத்தியோகப்பற்ற முகாமைத்துவ மீளாய்வு கூட்டங்களின் போது வழங்கப்படும் உள்ளக குறிப்புக்கள் அல்லது வாய்மொழி விளக்கங்கள்

அறிக்கைகள் அனைத்தும் ஒரே விதமான மாதிரிக்கமைவாக தயாரிக்கப்படுவதால் முன்னைய அறிக்கைகளுடன் இலகுவில் ஒப்பிடக்கூடியதாக அமையும்.

### 12.8 அறிக்கையிடல் பொறுப்புக்கள்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தல் பொறுப்புகூறும் தன்மையை அதிகரிக்கும். இம்மட்டத்தில் அறிக்கையிடல் பொறிமுறை சாதரணமானதும் அனைவருக்கும் அடைய கூடியதாகவும் காணப்படும். நலக்காப்பு நடவடிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சிற்றேடுகள் ஆகியன இவ்வறிக்கைகளில் உள்ளடங்குவதுடன் அவற்றை மக்களுக்கும் பகிர்ந்தளிக்க முடியும். செயற்த்திட்டத்தின் மாதாந்த முன்னேற்ற போக்கு தொடர்பான கூட்டங்களின் போதும் அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

- செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு மற்றும் செயற்த்திட்ட வழிப்படுத்தல் குழு மற்றும் பங்குதாரர் கூட்டங்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்
- கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலகு செயற்த்திட்ட போக்கு தொடர்பில் செயற்த்திட்ட பணிப்பாளருக்கு அறிக்கை சமர்பிக்க, பணிப்பாளரால் செயற்த்திட்ட வழிப்படுத்தல் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

### 12.9 அறிக்கையின் உள்ளடக்கம்

அறிக்கையிடலில் கீழ்வருவன தொடர்பில் கவனம் செலுத்தப்படும்;

- ஒவ்வொரு வகையிலும் பாதிக்கப்பட்ட மக்கள்
- உடைக்கப்படும் கட்டிடங்கள்/கட்டமைப்புக்களின் எண்ணிக்கை
- செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவால் உதவி வழங்கப்பட்ட தாக்கவிளைவிற்குள்ளாக கூடிய மக்களின் வகை மற்றும் எண்ணிக்கை
- அறிக்கையிடப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்களின் பால்சார்ந்த பிரச்சனைகளின் எண்ணிக்கை
- தீர்க்கப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்களின் பால்சார்ந்த பிரச்சனைகளின் எண்ணிக்கை
- சுகாதார அதிகாரிகளுக்கு அறிக்கையிடப்பட்ட பாலியல் சார்ந்த நோய்களின் எண்ணிக்கை
- பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை
- வருமானம் மற்றும் வாழ்வாதார மீளமைப்பு உதவி அவசியமான குடும்பங்களின் எண்ணிக்கை
- வருமான மீளமைப்பு நிகழ்ச்சி திட்டம் மூலம் உதவி வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை
- நடாத்தப்பட்ட குறைதீர்க்கும் குழுவின் கூட்டங்களின் எண்ணிக்கை
- குறைதீர்க்கும் குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை
- குறைதீர்க்கும் குழுவினால் தீர்வு வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் திகதி

## இற்றைவரைப்படுத்தப்பட்ட நட்டஈட்டு வார்ப்படம்

| இல. | கோவை இல. | வருமான மூலம் | மாதாந்த வருமானம் | பாதிப்புக் குட்பட்ட மாதாந்த வருமானம் | வருமாம் இழப்பு (**90000.00**) | வருமா மீளமைப்பு (**50000.00**) மற்றும் / அல்லது இடம் | பாதுகாப்பு (**50000.00**) | கருத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 10 | பலசரக்கு கடை | 35000.00 | 20000.00 | 120000.00 | 50000.00 | இல்லை | மாற்றீடு வழங்கப்பட்டுள்ளது. |
| 02 | 24 | வேல்டிங் ஷாப் | 50000.00 | 15000.00 | 90000.00 | 50000.00 | இல்லை | வேல்டிங் வேலைத் தளத்துக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. |
| 03 | 15 | தொழிலாளி | 25000.00 | ஏதுமில்லை | இல்லை | இல்லை | ஆம், 50000.00 | உளநோயினால் பாதிக்கப்பட்டுள்ள அவரது மகளுக்கு விசேட சிகிச்சை அவசியமாகும். |
| 04 | 23 | வேலை வாய்ப்பற்ற | 25000.00 | ஏதுமில்லை | இல்லை | இல்லை | ஆம், 50000.00 | அங்கீவீனமுற்ற நபரொருவராகும். விசேட வருமான மூலமொன்று அவசியமாகும். |
| 05 | 36 | - | N/A | ஏதுமில்லை | இல்லை | இல்லை | ஆம், 50000.00 | மாதமொன்றுக்கு ரூபா 5000 இற்குக் குறைவான வருமான பெறுகின்ற |
| 06 | 12 | சுயதொழில் – வெற்றிலை விற்பனை | 15000.00 | 15000.00 | 90000.00 | இல்லை | ஆம், 50000.00 | கணனிடமிருந்து பிரிந்து மற்றும் ஆண் பிள்ளைகளுடன் வசித்துவரும் தந்தை |
| 07 | 14 | சுயதொழில் – இளநீர் விற்பனை | N/A | 10000.00 | 90000.00 | 50000.00 அல்லது இடம் | இல்லை | ந.அ.அதிகாரசபையினால் ரூபா 50000 அல்லது இளநீர் மற்றும் கரத்தையைத் தரித்து நிறுத்த இடம் வழங்கல் |
| 08 | 18 | சுயதொழில் – திண்பண்ட | 25000.00 | 15000.00 | 90000.00 | 50000.00 அல்லது இடம் | இல்லை | ந.அ.அதிகாரசபையினால் ரூபா 50000 அல்லது உணவுக் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | விற்பனை | | | | | | கரத்தையை தரித்து நிறுத்த இடம் வழங்கல் |
| 09 | 33 | சுயதொழில் – ஐஸ் கிறீம் விற்பனை | 25000.00 | 10000.00 | 90000.00 | 50000.00 | இல்லை | செயற்திட்டத்தினால் பாதிக்கப்பட்டோரை ஊக்குவிக்கும் பொருட்டு நடமாடும் கரத்தையொன்றை கொள்வனவு செய்தல் மற்றும் ஐஸ்கிறீம் தயாரிப்பதற்கு பயிற்சியளித்தல் |
| 10 | 09 | சுயதொழில் – அப்பம் விற்றல் | 30000.00 | 5000.00 | 90000.00 | 50000.00 அல்லது இடம் | இல்லை | ந.அ.அதிகாரசபையினால் ரூபா 50000 அல்லது அப்பம் விற்பதற்கு இடம் வழங்கல் |
| 11 | 04 | வெளிநாட்டு வீட்டு உதவியாளர் | N/A | N/A | இல்லை | இல்லை | ஆம், 50000.00 | பிரிந்துள்ள மற்றும் பாட்டியுடன் வசிக்கும் பிள்ளைகள் |
| 12 | 06 | வேலை வாய்ப்பற்ற | N/A | N/A | இல்லை | இல்லை | ஆம், 50000.00 | பெண்களை குடும்பத் தலைவிகளாக கொண்ட குடும்பங்கள் |
| 13 | 01 | வெளிநாட்டு வீட்டு உதவியாளர் | N/A | N/A | இல்லை | இல்லை | ஆம், 50000.00 | பாட்டியுடன் வசித்து வரும் பிள்ளைகள் மற்றும் தந்தையிடமிருந்து பிரிந்த |
| 14 | 02 | வெளிநாட்டு வீட்டு உதவியாளர் | N/A | N/A | இல்லை | இல்லை | ஆம், 50000.00 | தந்தையுடன் வசிக்கும் பிள்ளைகள், மேசன், தந்தை மற்றும் ஒரு மகன் கல்வியறிவில்லாதவன், மகன் ஒருவன் சுகயீனமாகவுள்ளான். விசேட கல்வியறிவு அவசியமாகும். |